கல்கி

KALKI

1-11-1970 40 காசு



ஒரே சலவையில் 3 வழிகளில் செயல் புரிந்து...



டெட் துணிகளை அதிவெண்மையாக்குகிறது

— மற்ற எந்த பவுடரையும்விட.

இதோ, எப்படி என்று பாருங்கள்:

1. **டெட்** டிலுள்ள தனிப்பட்ட சக்திவாய்ந்த பொருள் அதி விரைவாகத் துணியில் ஊடுருவிச் சென்று; மறைந்துள்ள அழுக்கைக்கூட நொடியில் விரட்டி அடிக்கிறது. துணிகள் வெண்மையாகின்றன!
2. **டெட்** அழுக்கை வெளிக்கொணர்ந்த பிறகு, அது மீண்டும் படியாமல் தடுக்கிறது; துணிகள் அதிக சுத்தமாகின்றன; சுத்தமாகவே நீடித்து இருக்கின்றன.
3. **டெட்** துணிகளை அதிவெண்மையாக்குகிறது. துணிகள் முன்னைவிட அதிவெண்மையுடன் பளிச்சிடுகின்றன! (நீலம் அல்லது வெண்மைச் சாதனம் சேர்க்கவேண்டிய அவசியமில்லை.)

இன்றே டெட் வாங்குங்கள்! ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், பம்பாய்.

SHILPI HPMA 39A/70 TAM



சிறியோர் கணக்கு
என்பானேன்?
பெரியதோர் விஷயம்
எனக்கு அது
பஞ்சாப்
நேஷனல்
பாங்க்
1895—1970
75

சாதாரண, ஐப்பசி 15 ❊ 1970, நவம்பர் 1

கல்கி பொருளடக்கம்

வண்ணப்படம்: பி. எஸ். சுகந்தி.


''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



அரசாங்க நிர்வாகம் மோசமான நிர்வாகமாகத்-தான் இருக்கும். அதன் இயல்பை மாற்ற முடியாது!

தெரிந்த கதை!



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



மலர் 30

இதழ் 14

சோஷலிஸம்: பழையதும் – புதியதும்

இந்தியாவில் சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதாகப் பறைசாற்றிச் சுமார் இருபதாண்டுகள் ஆகின்றன. ஆனால் நாட்டின் பொருளாதார நிலை உயரவே இல்லை என்பது நிதரிசனம். இதே கால கட்டத்தில் மற்றும் பல நாடுகள் எப்பேர்ப்பட்ட அபிவிருத்தி அடைந்துள்ளன என்பதைக் கவனிக்க வேண்டும். உலக யுத்தத்தில் தரைமட்டமாக்கப்பட்ட மேற்கு ஜெர்மனியும், ஜப்பானும் இன்று எப்படிச் செழிப்பும் சுபிட்சமும் பெற்று விளங்குகின்றன என்பதைக் கவனிக்குமிடத்து, நாம் ஏன் இப்படிப் பின்தங்கியே யிருக்கிறோம் என்பதற்கு மனச்சாட்சியுள்ள எவரும் உண்மைக் காரணமும் பரிகாரமும் தேடவே செய்வர்.

ஒருபுறம் மேற்கு ஜெர்மனி, ஜப்பான், சிங்கப்பூர், மலேஷியா, ஸ்காண்டிநேவிய நாடுகள், ஆஸ்திரேலியா ஆகியன அபரிமிதமாக அபிவிருத்தி அடைந்து வரும் போதே, இந்தியா மட்டுமின்றி இலங்கை, பர்மா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகியனவும் பொருளாதாரத்தில் 'பின்னேறி' வருவதைக் காண்கிறோம். இந்த முன்னேற்றமும் பின்னேற்றமும் ஏதோ அகஸ்மாத்தாக நிகழ்வன அல்ல என்றும், இவ்விரு தரப்பு நாடுகளில் பின்பற்றப்படும் பொருளாதாரக் கொள்கைகளே இவற்றுக்குக் காரணம் என்றும் தொழிலதிபர் ஜே. ஆர். டி. டாடா, பொருளாதார நிபுணர் டாக்டர் ஆர். வி. சுப்பர் ஆகியோர் அழகாக விளக்கியுள்ளனர். பின்தங்கியே நிற்கும் நாடுகள் கடைப்பிடிப்பது உண்மையான சோஷலிஸம் அல்ல என்றும், முன்னேற்றம் காணும் நாடுகளின் கொள்கையே உண்மை சோஷலிஸம் என்றும் இவர்கள் தெளிவுபடுத்துகின்றனர். நம் ஆட்சியாளர்கள் கடைப்பிடிப்பது பத்தொன்பதாம் நூற்றாண்டு சோஷலிஸம். இது சற்றும் பயனளிக்காது என்று புரிந்துகொண்டு முன்னேறும் நாடுகள் இருபதாம் நூற்றாண்டு சோஷலிஸத்தைக் கடைப்பிடிக்கின்றன.

சோஷலிஸம் என்பது என்ன? சமூக நலன் என்பதே. இதை முன்னேறும் நாடுகள் புரிந்து கொண்டிருக்கின்றன. உற்பத்தி பெருகினால்தான் ஒரு நாட்டின் செல்வம் பெருகும் என்ற அடிப்படை உண்மையை அவை உணர்ந்துள்ளன. தனியாரை ஊக்கி உற்சாகப்படுத்துவதன் மூலம்தான் உற்பத்தி உயர்வை அடைய முடியும்; 'இது என் சொத்து' என்ற நெருக்கமான சுயஈடுபாடு இல்லாத சர்க்காரிடம் தொழில்களை ஒப்புவித்துவிட்டால் உற்பத்தியைப் பெருக்க முடியாது — என்ற நடைமுறை இயற்கையை முன்னேறும் நாடுகள் புரிந்து கொண்டு செயலாக்கி வருகின்றன. இதுவே இருபதாம் நூற்றாண்டு சோஷலிஸம்.

தனியாரை ஊக்கினால் அவர்களின் தொழில் சிறக்கிறது. இதனால் அநேகம் பேருக்கு உத்தியோகம் கிடைக்கிறது. மேலும் தனியார் தொழில் லாபமடைந்தால்தான் மக்களின் அபிவிருத்திக்காகச் சர்க்கார் போடும் திட்டங்களுக்குத் தொழிலதிபர்களிடமிருந்து எளிதில் வரியாக நிதியைப் பெற முடிகிறது. ஆனபடியால், பொதுமக்களின் நலனை ஒட்டியே — அவர்களுக்காகச் சர்க்கார் தீட்டும் அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேறுவதற்காகவே — தனியார் தொழிலை லாபகரமானதாக்க வேண்டும் என்ற மகத்தான உண்மையை இந்த நாடுகள் புரிந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு ஸ்ரீ டாடாவிடம் சிங்கப்பூரின் நிதிமந்திரி வியக்தமாகவே சொன்னாராம். அவர் தம்மை சோஷலிஸவாதியாகவே சொல்லிக் கொள்பவர். அவர் சொல்வது இருபதாம் நூற்றாண்டு சோஷலிஸம். நம் நாட்டில் மூர்க்கத்தனமாகப் பின்பற்றப்படும் பத்தாம் பசலிப் பத்தொன்பதாம் நூற்றாண்டு சோஷலிஸத்துக்கும், உண்மையான அபிவிருத்திக்கு உதவும் இருபதாம் நூற்றாண்டு சோஷலிஸத்துக்கும் உள்ள முக்கியமான மாறுபாடுகள் :

1. சர்க்காரை ஏக முதலாளியாக்குவது தவறு என்று இருபதாம் நூற்

றாண்டு சோஷலிஸம் உணர்த்துள்ளது. ஒரு சில தனி முதலாளிகளிடம் செல்வம் திரளுவது சமூகத்துக்குப் பெரிய தீங்கு போல் நம் நாட்டில் பேசப்படுகிறது. ஆனால் இருபதாம் நூற்றாண்டு சோஷலிஸத்தைப் பின்பற்றிக் கண்ணுக்கு மெய்யாக முன்னேறியுள்ள நாடுகளோ, சர்க்காரிடம் தொழிலாதிக்கத்தைத் தருவதால் ஒருசில அரசியல்வாதிகளிடமும், அதிகாரிகளிடமுமே பொருளாதார ஆதிக்க சக்தி முழுதும் திரளுகிறது என்றும், இதுவே தேசத்துக்குப் பயங்கரத் தீமை என்றும் கருதுகின்றன.

2. பொருளாதாரம் செழிக்க வேண்டுமானால் மனித உறவுகளும் சுமுகமாக, சௌஜன்யமாக இருக்க வேண்டும். வகுப்புப் பூசலையும் பிணக்கையும் வளர்க்கும் நாட்டில் இன்பமும் இல்லை, பொருளாதார வளர்ச்சியும் இல்லை என்று இருபதாம் நூற்றாண்டு சோஷலிஸம் கருதுகிறது. எனவே, முதலீட்டுச் சக்தி உள்ளவர்களின் நிதியம், உழைப்புச் சக்தி உள்ளவர்களின் வேலைத்திறன், யோசனை கூறும் சக்தி உள்ளவர்களின் அறிவு இவற்றைப் பரஸ்பரம் நட்புப்பாங்கான சூழலில் வளர்க்கின்றன முன்னேறும் நாடுகள்.

3. முதலாளிகள் வைத்ததே சட்டமாய் இருப்பதும் தவறு; சர்க்காரே சர்வாதிகாரம் செலுத்துவதும் தவறு என்று உணர்ந்து, பலவீனமான வர்க்கத்தினரைப் பலசாலிகள் அடக்கி ஒடுக்காமல் காப்புத் தருவதும், அதே போதில் வசதி உள்ளவர்களின் ஆற்றல் சமூகத்துக்குப் பயன் தருமாறு அவர்களை உற்சாகப்படுத்துவதும் இருபதாம் நூற்றாண்டு சோஷலிஸத்தின் லட்சணமாகும்.

4. ருஷியாவிலும்கூடப் பொருளாதார ஏற்றத் தாழ்வே இன்றி அனைவரையும் ஒரே மட்டத்தில் வைத்திருக்க முடியவில்லை. ஏனெனில், இவ்வாறு செய்தால் விசேஷத் திறன் உள்ள எவரும் அதனைப் பிரயோகப்படுத்த விழைவதில்லை. எனவே, அனைவருக்கும் வாழ்க்கை வசதிகள் அனைத்தும் செய்து தந்து சமூகம் முழுவதையும் உயர்த்த வேண்டும் என்றும், இந்த வசதிகளுக்கும் அதிகமாகச் சிலர் பெறுவதைப் பெரிதுபடுத்தி ஒழிக்க வேண்டியதில்லை என்றும் — அதாவது காரிய சாத்தியமற்ற சமத்துவத்தைக் கட்டி அழ வேண்டியதில்லை என்று — கூறுகிறது இருபதாம் நூற்றாண்டு சோஷலிஸம்.

இக்கொள்கைகளின் மூலம் பல நாடுகள் முன்னேறியிருப்பதும் கண்கூடு. ஆனால் கண்ணைத் திறந்து பார்த்தால்தானே கண்கூடானதும் தெரியும்? நம் சர்க்காரின் கண் திறக்காது. ஏனெனில், கண்ணைத் திறக்காமலிருப்பதால் அவர்களுக்கு ஆதாயம்; அவர்களின் அதிகாரமும், சக்தியும் பெருகுகின்றன. ஆனால் இந்தப் பத்தாம் பசலி சோஷலிஸத்துக்காக, முன்னேற்ற நிலைமையை இழந்து நிற்கும் மக்கள் இனியும் கண்மூடி இருக்கலாகாது.

நம் நாட்டில் ஆட்சி பீடத்தினர் உருவாக்கியுள்ள சோஷலிஸம், தனி முதலாளிகளிடச் சக்தி பொருந்திய சர்க்கார் முதலாளித்துவத்தைத்தான் ஏற்படுத்தியுள்ளது. இதில் பொதுமக்களுக்கு எவ்வித லாபமும் இல்லை. மாறாக, இதனால் ஏற்படும் நஷ்டம் அனைத்தும் பொதுமக்கள் தலையில்தான் விழுகிறது. ஆயினும், சர்க்கார் முதலாளித்துவத்திலும் லாபம் அடைபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தாம் ஆட்சிபீட அரசியல்வாதிகள். பொருளாதார சமத்துவம் பற்றி ஓயாமல் பேசி வருகிற — சொத்துக்கும் வருமானத்துக்கும் வரம்பு விதித்துப் பறிமுதல் செய்து வருகிற — மிகக் கொடூரமான வரி விதித்து முதலீட்டுக்கு உள்ள ஊக்கத்தையே குலைக்கிற — இந்த அரசியல்வாதிகள் மட்டும் தங்கள் ஆற்றலுக்கோ, தாங்கள் செய்யும் உழைப்புக்கோ இம்மியும் பொருந்தாத வகையில் கொழுத்த லாபம் அடைந்துவருவதைச் சுதந்திரக் கட்சிப் பொதுக் காரியதரிசி எடுத்துக் காட்டியிருக்கிறார். இதற்கு உதாரணமாக, டில்லி சர்க்கார் மந்திரி ஒருவர் சம்பளமாகவும் பலவிதமான இதர படிகளாகவும், ஆண்டொன்றுக்குச் சுமார் நாலரை லட்சம் ரூபாய் — அதாவது, மாதத்துக்கு முப்பத்தேழாயிரம் ரூபாய் — வருமானம் பெறுவதைச் சுட்டிக்காட்டுகிறார். இது நம் நாட்டின் சராசரி வருமானத்தைப் போல் 848 மடங்காகும்.

தனி முதலாளித்துவத்தின் கீழ் நடக்கும் உற்பத்திப் பெருக்கத்தையும் அதன் பயனான வேலை வாய்ப்புக்களையும் சிதைத்து விட்டு, இப்படிப்பட்ட சர்க்கார் முதலாளித்துவத்தைச் சிருஷ்டிக்கும் பத்தாம் பசலி சோஷலிஸத்தை இன்னமும் ஏற்பதா என மக்கள் விழிப்புறத் தருணம் வந்துவிட்டது.

ராஜாஜியின் கருத்துக்கள்

1-11-1970

உத்தரப் பிரதேசத்தில் ராஷ்டிரபதி ஆட்சி ரத்தாகி விட்டது. ஸ்ரீ திரிபுவன நாராயண சிங் முதன் மந்திரியாகப் பதவி ஏற்றிருக்கிறார். ஜனநாயகத்தைக் காப்பாற்றக் கூடிய பல கட்சிகளின் மகத்தான கூட்டணி என்பது என்ன என்பதற்கு அகில இந்தியாவுக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது உத்தரப் பிரதேசம். உலகிலுள்ள கம்யூனிஸ வல்லரசுகளுடையவும் அவற்றின் இந்திய சகாக்களுடையவும் நடவடிக்கைகளை எதிர்த்துத் தேசத்தை நிலைநிறுத்துவது எப்படி என்பதற்கு உத்தரப் பிரதேசம் வழிகாட்டி விட்டது. உ. பி. தலைவர்கள் காட்டியுள்ள வழியைச் சற்றும் காலதாமதமின்றி அகில இந்தியத் தலைவர்கள் பின்பற்ற வேண்டும்.

'அகில இந்திய மகா கூட்டணி' ஒருமுகமாகக் கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள்: நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல், அரசியல் போர்வையின் கீழ் செய்யப்படும் குற்றங்களைச் சக்தியுடன் களைவது, அரசியல் சாஸனம் சிதையாமல் காப்பது, பெர்மிட் — லைசென்ஸ்

நிருவாகத்தை அரசாங்கத்திடமிருந்து நீக்கி ஒரு தகுதி பெற்ற சுதந்திரக் குழுவிடம் ஒப்பு விப்பது ஆகியவையாகும்.

★

மகாராஷ்டிர சட்டசபைக்காகப் பரேலில் நடந்த இடைத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதில் இந்திரா காந்தி—கம்யூனிஸ்ட் கூட்டணி பெற்ற தோல்வி விசேஷமாகக் குறிப்பிடத் தக்கது. இந்தத் தொகுதியில் கம்யூனிஸ்ட் சட்டசபையாளர் மரணம் அடைந்ததால் இடைத் தேர்தல் நடத்தப் பட்டது. பரேல் கம்யூனிஸ்ட் கோட்டை எனப் பெயர் பெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தரான ஸ்ரீடாங்கேயை மக்கட் சபைக்குத் தேர்வு செய்து அனுப்பிய தொகுதிகளில் பரேலும் ஒன்று. மகாராஷ்டிரத்தில் இன்று நடப்பது இந்திரா ஆதரவாளரின் அரசாங்கம். இத்தனை அம்சங்களையும் மீறி நேர் போட்டியில் இந்திரா — கம்யூனிஸ்ட் வேட்பாளர் தோற்று விட்டார்.

ஜனநாயக சக்திகள் யாவும் இந்திரா — கம்யூனிஸ்ட் கூட்டைத் தோல்வியுறச் செய்வதற்காகத் திடசங்கற்பம் கொண்டு உழைத்த தன் பலனே இவ்வெற்றி. ஒரு தொகுதியில் கம்யூனிஸ்டுகள் மிகப் பலம் பெற்றிருப்பதாகத் தோன்றினாலும், அவர்கள் இந்திரா காங்கிரஸின் ஆதரவைப் பெற்றிருந்தாலும் கூட ஜனநாயக சக்திகள் ஒத்துழைத்து விடா முயற்சியுடன் பணிபுரிந்தால், பொதுமக்களின் ஆதரவைப் பெற்று, அவர்களைத் தோல்வியுறச் செய்யலாம் என்று பரேல் நிரூபித்து விட்டது. உ. பி. யில் ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு ஏற்பட்ட தோல்வியை அடுத்து வந்துள்ள பரேல் தேர்தல் முடிவு ஜனநாயக சக்திகளுக்கு மகத்தான உற்சாகமூட்டுவதாகும். இந்த அரிய சந்தர்ப்பத்தை ஸ்தாபன காங்கிரஸ் நழுவ விடாமல் பயன் படுத்திக் கொண்டு ஜனநாயகத்தைக் காக்கும் என்று நம்புவோம்.

★

நாக்ஸலைட்டுகளின் பயங்கரக் குற்றங்கள் அலுங்காமல் நலுங்காமல் நீடித்து வருகின்றன. போலீஸ் பணியாளர்களையும் கொலை செய்யும் போக்கு மேற்கு வங்கத்தில் பரவி வருவதைப் பார்க்கிறோம்.

இவ்வாறு பயங்கரக் குற்றங்களைத் திட்டமிட்டு ஸ்தாபன ரீதியாகவே நடத்தி வரும் கம்யூனிஸப் போக்கை அரசியல் நடவடிக்கை மூலமே தீர்த்துவிட நினைப்பது அபத்தம். இந்தப் பெரும் தீமையைத் தீர்ப்பதற்குத் தில்லி சர்க்காருக்கு ஏன் இயலவில்லை; அது ஏன் இதில் முழு மனத்துடன் ஈடுபடவில்லை என்பது எவருக்கும் தெரிந்த விஷயம். எப்படியேனும் பதவியில் நீடிக்க வேண்டும் என்பதையே குறியாகக்கொண்டு கம்யூனிஸ்ட் வோட்டுக்களை நம்பியிருக்கும் பிரதமர், தேசத்துக்கு மகத்தான அபாயமாவார்.

மத்தியப் பிரதேச முன்னாள் நிதியமைச்சர் 'இந்திராகாங்கிரஸி'லிருந்து விலகி, ஸ்தாபன காங்கிரஸில் சேர்ந்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் ஒரு வாக்கியம்:

"(இந்திராவின் ஆணையே நடைபெறும்) இண்டிகேட் கட்சியானது காங்கிரஸின் கொள்கைகளைப் பின்பற்றவில்லை. ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டு நாட்டில் கம்யூனிஸத்தைப் பரப்பி வருகிறது."

★

பண்ணைகளைச் சின்னாபின்னமாகத் துண்டாடுவது அரசாங்கங்களுக்கு எளிதாக இருக்கிறது. ஆனால் இப்படிச் சிதைந்த துண்டுகளை ஒரு கூட்டுறவுப் பண்ணையாக ஒன்றுசேர்ப்பது எவ்வளவு கடினமானது என்று நம் விவசாய சமுதாயத்தைப் பற்றித் தெரிந்த எவரும் அறிவர்.

டிராக்டர் வைத்து உழுது பயிர் செய்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று ஒரு புறத்தில் சொல்லும்போதே மறுபுறத்தில் டிராக்டருக்கான முதலீட்டுக்குப் பொருந்த மற்ற சிறிய அளவில் வரம்பு விதிக்கப்படுகிறது. உற்பத்திப் பெருக்குச் சாதனம் — உச்சவரம்பு இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவை. இவற்றைச் சேர்த்துப் பேசுவதற்கு அடிப்படையான அரசியல் விஷயம், வோட்டு வேட்டையே யாகும். ஆட்சியில் இருப்பவர்கள் எந்தக் கதையைச் சொல்லியாவது மக்களின் வோட்டைப் பெற்றுத் தங்களைப் பதவியில் இருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இப்படிப்பட்ட முரண்பாடுகளைப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

★

ஆண்டுதோறும் 25,000 கார்கள் தயாரிப்பதற்காக பம்பாயிலுள்ள பிரீமியர் ஆட்டோமோபைல் தொழிற்சாலை விஸ்தரிப்புத் திட்டம் வகுத்துள்ளது. ஆனால் இதற்குச் சர்க்கார் அனுமதி தரக் காலதாமதம் செய்வது பெரும் தடையாக உள்ளது என்று இத்தொழிலகத் தலைவர் ஸ்ரீ லால்சந்த் ஹீராசந்த் கூறுகிறார். இப்போது இதன் வருடாந்தர உற்பத்தி 12,000 கார்களாகும். இதனை உயர்த்துவதற்கு அனுமதி கோரிப் பல்லாண்டுகள் ஆகின்றனவாம். 10,000 ரூபாய் விலைக்குச் சிறிய கார் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டதென்றும், இது குறித்தும் சர்க்காரிலிருந்து பதில் இல்லை என்றும் ஸ்ரீ லால்சந்த் கூறுகிறார்.

நடைமுறைக்குப் பொருந்தாத தொழிற் கொள்கையும், அதீதமான கட்டுப்பாடுகளும் தொழில் அபிவிருத்தியைப் பாதிக்கின்றன; இவை நீங்காவிடில் தொழில் துறையில் முன்னேற்றம் காண முடியாது என்கிறார் அவர். உற்பத்தியில் இறங்க முற்படும் பலருக்கும் ஊக்கம் தந்தாலே, அவர்களுக்குள் போட்டி ஏற்பட்டு, பண்டங்களின் தரமும் விலையும் நியாயப்படி அமையும் என்கிறார் அவர்.

தனியாரை ஊக்கினால் தேசச் செல்வம் முழுதும் மூப்பது அல்லது நாற்பது முதலாளிகளிடம் மட்டுமே குவிக்கப்படும் என்ற எண்ணம் முற்றிலும் தவறானது. மாறாக, அப்போதுதான் தொழில் அபிவிருத்தி ஏற்படும்; வேலையில்லாப் பிரச்னையும் தீரும்.

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

"ஏன் என்னை வதைக்கிறாய்?"

சுந்தரசோழர் மிக்க வியப்பு அடைந்தார். மேன் மாடத்திலிருந்து அவ்வாறு தூண்களின் விளிம்பின் வழியாக யார் இறங்கி வருகிறது? எதற்காக வரவேண்டும்? இத்தனை நேரம் கண்ட குழப்பமான கனவுகள் நினைவு வந்தன. இதுவும் கனவிலே காணும் தோற்றமா? இன்னும் தாம் தூக்கத்திலிருந்து நன்றாக விழித்துக் கொள்ளவில்லையா? இந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காகச் சுந்தர சோழர் மறுபடியும் கண்களை மூடிக் கொண்டார். ஒரு நிமிஷ நேரம் அவ்வாறு இருந்துவிட்டுக் கண்களை நன்றாகத் திறந்து அந்த உருவம் இறங்கிய திக்கைப் பார்த்தார். அங்கே இப்போது ஒன்றும் இல்லை. ஆகா! அந்தத் தோற்றம் வெறும் பிரமையாகத்தான் இருக்க வேண்டும்.


அவர் உறங்குவதற்கு முன்னால் நிகழ்ந்தவற்றை ஞாபகப்படுத்திக்கொண்டார். முதன் மந்திரியும் அவருடைய சீடனும், இனிய குரலில் பாடிய தியாக விடங்கரின் மகளும் தாம் தூங்கிய பிறகு போய் விட்டார்கள் போலும்! மலையமான் மகளும் தாதிமாரும் வழக்கம்போல் அடுத்த அறையிலே காத்திருக்கிறார்கள் போலும்! தமது செல்வத் திருமகளும் அவர்களுடனே இருக்கிறாள் போலும். குந்தவையைக் குறித்துத் தாம் முதன் மந்திரியிடம் குறை கூறியதைச் சக்கரவர்த்தி நினைத்துக் கொண்டு சிறிது வருத்தப்பட்டார். குந்தவை இணையற்ற அறிவும் முன் யோசனையும் படைத்தவள். இராஜ்யத்திலே குழப்பம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு இளவரசனை நாகைப்பட்டினத்தில் இருக்கச் செய்திருக்கிறாள். அதைப் பற்றித் தவறாக எண்ணிக் கொண்டது தம் தவறு. தமது அறிவு சரியான நிலைமையில் இல்லை என்பது சில காலமாகச் சுந்தர சோழருக்கே தெரிந்திருந்தது. பின்னே இளையபிராட்டியின் பேரில் கோபித்துக் கொள்வதில் என்ன பயன்? எதையும் அவளுடைய யோசனைப்படி செய்வதே நல்லது. இப்போது முக்கியமாகச் செய்ய வேண்டியது நாகப்பட்டினத்திலிருந்து இளவரசனை அழைத்து வர வேண்டியது. கடவுளே! புயலினால் அவனுக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாமல் இருக்க வேண்டுமே! உடனே குந்தவையிடம் அதைப் பற்றிக் கேட்க வேண்டும்... பக்கத்து அறையில் இருப்பவர்களை அழைப்பதற்காகச் சுந்தர சோழர் கையைத் தட்ட எண்ணினார்...

ஆனால் இது என்ன? நம்முடைய தலைமாட்டில் யாரோ நடமாடுவது போல் தோன்றுகிறதே! ஆனால் காலடிச் சத்தம் மிக மெதுவாக, — பூனை, புலி முதலிய காட்டு மிருகங்கள் நடமாடுவதுபோல், — கேட்கிறது. யாராயிருக்கும்? ஒருவேளை மலையமான் மகளா? தம் குமாரியா? தாதிப் பெண்ணா? தமது உறக்கத்தைக் கலைக்கக் கூடாது என்று அவ்வளவு மெதுவாக அவர்கள் நடக்கிறார்களா?

''யார் அது?'' என்று மெதுவான குரலில் சுந்தர சோழர் கேட்டார். அதற்குப் பதில் இல்லை.

''யார் அது? இப்படி எதிரே வா!'' என்று சற்று உரத்த குரலில் கூறினார். அதற்கும் மறுமொழி இல்லை.

சுந்தர சோழருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அது அவருக்குக் குழப்பத்தையும் திகிலையும் உண்டாக்கியது. ஒருவேளை அவளாக இருக்குமோ? அவளுடைய ஆவியாக இருக்குமோ? கனவிலே தோன்றிய கிராதகி இப்போது நேரிலும் வந்து விட்டாளா? நள்ளிரவில் அல்லவா ஆடை ஆபரண பூஷிதையாக வந்து தன்னைத் துன்புறுத்துவது வழக்கம்? இப்போது முன்மாலையிலேயே வந்துவிட்டாளா? அல்லது ஒருவேளை, நள்ளிரவு ஆகிவிட்டதா? அவ்வளவு நேரம் தூங்கி விட்டோமா? அதனாலே



தான் ஒருவேளை மலையமான் மகளும் தம் குமாரியும் இங்கே இல்லையோ? தாதிப் பெண்களும் தூங்கி விட்டார்களோ? ஐயோ! அவர்கள் ஏன் என்னைத் தனியாக விட்டு விட்டுப் போனார்கள்? அந்தப் பாதகி—கரையர் மகளாக இருந்தால் என்னை இலேசில் விடமாட்டாளே? உள்ளம் குமுறி வெறி கொள்ளும் வரையில் போக மாட்டாளே?

அடி பாவி! உண்மையில் நீயாக இருந்தால் என் முன்னால் வந்து தொலை! என்னை எப்படியெல்லாம் வதைக்க வேண்டுமோ, அப்படியெல்லாம் வதைத்துவிட்டுப் போ! ஏன், நான் பார்க்க முடியாதபடி தலைமாட்டில் உலாவி என் பிராணனை வாங்குகிறாய்! முன்னால் வா! இரத்த பலி கேட்பதற்காக வந்திருக்கிறாயா? வா! வா! நீதான் மடியில் கத்தி வைத்திருப்பாயே? புலி கரடிகளைக் கொன்ற அதே கத்தியினால் என்னையும் கொன்றுவிட்டுப் போய்விடு! என் மக்களை மட்டும் ஒன்றும் செய்யாதே! நான் செய்த குற்றத்துக்காக அவர்களைப் பழி வாங்காதே! அவர்கள் உனக்கு ஒரு துரோகமும் செய்யவில்லையடி! நான்தான் உனக்கு என்ன துரோகம் செய்தேன்? கலங்கரை விளக்கத்தின் உச்சியில் ஏறிக் கடலில் விழுந்து சாகும்படி நானா சொன்னேன்? நீயே செய்த அந்தக் கோரமான காரியத்துக்கு என்னை எதற்காக வதைக்கிறாய்?...

சுந்தர சோழர் தம்முடைய தலைமாட்டில் வெகு சமீபத்தில் ஓர் உருவம் வந்து நிற்பதை உணர்ந்தார். திகிலினால் அவருடைய உடம்பு நடுங்கியது. வயிற்றிலிருந்து குடல் மேலே ஏறி நெஞ்சை அடைத்துக் கொண்டது போலிருந்தது! நெஞ்சு மேலே ஏறித் தொண்டையை அடைத்துக் கொண்டது. கண் விழிகள் பிதுங்கி வெளியே வந்துவிடும் போல் இருந்தது. அவள்தான் வந்து நிற்கிறாள். சந்தேகமில்லை. அவளுடைய ஆவிதான் வந்து நிற்கிறது! தாம் நினைத்தபடியே கடைசியாக இரத்த பலி வாங்குவதற்கு வந்திருக்கிறது. தம் நெஞ்சில் கத்தியால் குத்தித் தம்மைக் கொல்லப் போகிறது. அல்லது வெறுங் கையினாலேயே தம் தொண்டையை நெரித்துக் கொல்லப் போகிறதோ, என்னமோ? எப்படியாவது அவள் எண்ணம் நிறைவேறட்டும்! தாம் இனி உயிர் வாழ்ந்திருப்பதில் யாருக்கும் எந்த உபயோகமும் இல்லை. அந்தப் பேய் தம்மைப் பலி வாங்கிவிட்டுப் போனால் தம் மக்களை ஒன்றும் செய்யாமல் விட்டு விடும் அல்லவா?

இன்னும் சிறிது நிமிர்ந்து அண்ணாந்து பார்த்தால், மந்தாகினிப் பேயின் ஆவி வடிவம் தம் கண்களுக்குப் புலனாகும் என்று சுந்தர சோழருக்குத் தோன்றியது. தலைமாட்டில் அவ்வளவு சமீபத்தில் அந்த உருவம் வந்து நிற்பது போலிருந்தது. அதன் நிழல்கூட அவர் முகத்திலே விழுந்தது போலிருந்தது. ஒரு கணம் நிமிர்ந்து பார்ப்பதற்கு எண்ணினார். அவ்வளவு தைரியம் வரவில்லை. ''நான் கண்களை இறுக மூடிக் கொள்கிறேன். அது செய்வதைச் செய்துவிட்டுப் போகட்டும்!'' என்று தீர்மானித்துக் கண்களை மூடிக் கொண்டார்.

சற்று நேரம் அப்படியே இருந்தார். அவர் எதிர்பார்த்தது போல் அவர் நெஞ்சில் கூரிய கத்தி இறங்கவும் இல்லை. அவர் தொண்டையை இரண்டு



ஆவி வடிவக் கைகள் பிடித்து நெரிக்கவும் இல்லை.

அந்த உருவம் — அவர் தலைமாட்டில் நின்ற உருவம் — அங்கிருந்து நகர்ந்து போய் விட்டதாகத் தோன்றியது.

ஆகா! கரையர் மகள் அவ்வளவு சுலபமாக என்னை விடமாட்டாள். இன்னும் எத்தனை காலம் என்னை உயிரோடு வைத்திருந்து சித்திரவதை செய்ய வேண்டுமோ செய்வாள்! இன்றைக்கு என் கண்ணில் படாமலே திரும்பித் தொலைந்து போய் விட்டாள் போலும்! சரி, சரி! யாரையாவது கூப்பிடலாம். யாராவது இந்த அறைக்குள்ளே வந்தால், இன்னும் இவள் ஒருவேளை இங்கேயே இருந்தாலும் மறைந்து போய்த் தொலைவாள்!

''யார் அங்கே? எல்லாரும் எங்கே போனீர்கள்?'' என்று உரத்த குரலில் கூவிக் கொண்டே சுந்தர சோழர் கண்களைத் திறந்தார்.

ஆகா! அவர் எதிரே, மஞ்சத்தின் கீழ்ப்புறத்தில் நிற்பது யார்? அவள் தான், சந்தேகமில்லை! அந்த ஊமையின் பேய்தான்! தலைவிரிகோலமாய் நிற்கிறது அந்தப் பேய்! அதன் நெற்றியிலே இரத்தம் சொட்டுகிறது! ''இரத்தப் பலி வாங்க வந்தேன்!'' என்று சொல்கிறது போலும்! சுந்தர சோழர் உரத்த குரலில் வெறி கொண்டவரைப் போல் அந்த ஆவி உருவத்தைப் பார்த்த வண்ணமாகக் கத்தினார்;

''அடி ஊமைப் பேயே! நீ உயிரோடிருந்தபோதும் வாய் திறந்து பேசாமல் என்னை வதைத்தாய். இப்போதும் பேசாமல் வதைக்கிறாய்! எதற்காக வந்திருக்கிறாய் சொல்லு! இரத்தப் பலி வாங்க வந்திருந்தால் என்னைப் பலி வாங்கிவிட்டுப் போ! ஏன் சும்மா நிற்கிறாய்? ஏன் முகத்தை இப்படிப் பரிதாபமாக வைத்துக் கொண்டிருக்கிறாய்? என்னிடம் ஏதாவது கேட்க வந்திருக்கிறாயா? அப்படியானால் சொல்லு! வாய் திறந்து பேச முடியவில்லையென்றால் சமிக்ஞையினாலேயே சொல்லு! வெறுமனே நின்று கொண்டு என்னை வதைக்காதே! உன் கண்ணில் ஏன் கண்ணீர் ததும்புகிறது? ஐயையோ! விம்மி அழுகிறாயா, என்ன? என்னால் பொறுக்க முடியவில்லையே! ஏதாவது சொல்லுகிறதாயிருந்தால் சொல்லு! இல்லாவிட்டால் தொலைந்து போ! போக மாட்டாயா? ஏன் போக மாட்டாய்? என்னை என்ன செய்ய வேண்டுமென்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறாய்? என் அருமை மகனை — சின்னஞ்சிறு குழந்தையைக் காவேரி வெள்ளத்தில் அமுக்கிக் கொல்லப் பார்த்தவள் தானே நீ! கடவுள் அருளால் உன் எண்ணம் பலிக்கவில்லை. இனியும் பலிக்கப் போவதில்லை! அடி பாதகி! இன்னும் எதற்காக என் நெஞ்சைப் பிளக்கிறவள் போலப் பார்த்துக் கொண்டு நிற்கிறாய்? போ! போ! போக மாட்டாயா? போக மாட்டாயா? இதோ உன்னைப் போகும்படி செய்கிறேன், பார்!....''

நிக்ஸன் கிழவராகி விட்டாரா?

15-ம் பக்கம் பார்க்க

இப்படிச் சொல்லிக் கொண்டே சுந்தர சோழர் தமதருகில் கைக்கெட்டும் தூரத்தில் என்ன பொருள் இருக்கிறதென்று பார்த்தார். பஞ்ச உலோகங்களினால் செய்த அகல் விளக்கு ஒன்றுதான் அவ்விதம் கைக்குக் கிடைப்பதாகத் தென்பட்டது. அதை எடுத்துக் கொண்டு, ''போ! பேயே! போ!'' என்று அலறிக் கொண்டு மந்தாகினிப் பேயின் முகத்தைக் குறி பார்த்து வீசி எறிந்தார். திருமால் எறிந்த சக்கராயுதத்தைப் போல் அந்தத் தீபம் சுடர் விட்டு எரிந்த வண்ணம் அந்தப் பெண்ணுருவத்தை நோக்கிப் பாய்ந்து சென்றது.

அப்போது சுந்தர சோழர் பேய் என்று கருதிய அந்தப் பெண் உருவத்தின் வாயிலிருந்து ஓர் ஓலக் குரல் கிளம்பிற்று.

சுந்தர சோழருடைய ஏழு நாடியும் ஒடுங்கி, அவருடைய உடலும் சதையும் எலும்பும் எலும்புக்குள்ளே இருந்த ஜீவ சத்தும் உறைந்து போயின.

தீபம் அந்த உருவத்தின் முகத்தின்மீது விழவில்லை. சற்று முன்னாலேயே தரையில் விழுந்து உருண்டு, 'டணங்' 'டணங்' என்று சப்தமிட்டது.

அகல் விளக்கு அணைந்து விட்ட போதிலும், நல்ல வேளையாக அந்த அறையின் இன்னொரு பக்கத்தில் வேறொரு தீபம் எரிந்து கொண்டிருந்தது.

அதன் மங்கலான வெளிச்சத்தில் சுந்தர சோழர் உற்றுப் பார்த்து, மந்தாகினியின் ஆவி வடிவம் இன்னும் அங்கேயே நிற்பதைக் கண்டார். அதனுடைய முகத்தில் விவரிக்க முடியாத வேதனை ஒரு கணம் காணப்பட்டது. பின்னர் அது கடைசி முறையாக ஒரு தடவை சுந்தர சோழரை அளவில்லாத ஆதங்கத்துடன் பார்த்துவிட்டுத் திரும்பி அங்கிருந்து போவதற்கு யத்தனித்தது.

அந்த நேரத்திலேதான் சுந்தரசோழரின் உள்ளத்திலே முதன் முதலாக ஒரு சந்தேகம் உதித்தது. இது மந்தாகினியின் ஆவி உருவமா? அல்லது அவளை வடிவத்தில் முழுக்க முழுக்க ஒத்த இன்னொரு ஸ்திரீயா? அவளுடன் இரட்டையாகப் பிறந்த சகோதரியா? அல்லது ஒரு வேளை.... ஒரு வேளை... அவளேதானா? அவள் சாகவில்லையா? இன்னமும் உயிரோடிருக்கிறாளா? தாம் நினைத்ததெல்லாம் தவறா? அவளேயாக இருக்கும்பட்சத்தில் அவள் பேரில் தாம் விளக்கை எடுத்து எறிந்தது எவ்வளவு கொடுமை? அவளுடைய முகத்தில் சற்று முன் காணப்பட்ட பரிதாபம் மாறி, விவரிக்க முடியாத வேதனை தோன்றியதே? தம்முடைய கொடூரத்தை எண்ணி அவள் வேதனைப்பட்டாளோ? —ஆகா! அதோ அவள் திரும்பிப் போக யத்தனிக்கிறாள். எந்தப் பக்கம் போகலாம் என்று பார்க்கிறாள்.

''பெண்ணே! நீ கரையர் மகள் மந்தாகினியா? அல்லது அவளுடைய ஆவி வடிவமா? அல்லது அவளுடன் பிறந்த சகோதரியா? நில், நில்! போகாதே! உண்மையைச் சொல்லிவிட்டுப் போ!''

இவ்விதம் சுந்தர சோழர் பெருங் குரலில் கூவிக் கொண்டிருந்தபோது தடதடவென்று பலர் அந்த அறைக்குள் புகுந்தார்கள். மலையமான் மகள், குந்தவை, வானதி, பூங்குழலி, முதன் மந்திரி, அவருடைய சீடன் — அத்தனை பேரும் அறைக்குள்ளே வருகிறார்கள் என்பதைச் சுந்தர சோழர் ஒரு கண நேரத்தில் தெரிந்து கொண்டார்.

''நிறுத்துங்கள்! அவன் ஓடிப் போகாமல் தடுத்து நிறுத்துங்கள்! அவன் யார், எதற்காக வந்தான் என்பதைக் கேளுங்கள் !'' என்று சுந்தர சோழர் அலறினார்.

உள்ளே வந்தவர்கள் அவ்வளவு பேரும் ஒரு கணம் வியப்பினால் திகைத்துப் போய் நின்றார்கள். சுந்தர சோழரின் வெறி கொண்ட முகத் தோற்றமும், அவருடைய அலறும் குரலில் தொனித்த பயங்கரமும் அவர்களுக்குப் பீதியை உண்டாக்கின. மந்தாகினி தேவியை அங்கே பார்த்தது அவர்களை வியப்பு வெள்ளத்தில் திக்குமுக்காடச் செய்தது. இன்னது செய்வது என்று அறியாமல் எல்லோரும் சற்று நேரம் அசைவற்று நின்றார்கள். முதன் மந்திரி அநிருத்தர் நிலைமை இன்னதென்பதையும் அது எவ்வாறு நேர்ந்திருக்கக் கூடும் என்பதையும் ஒருவாறு ஊகித்து உணர்ந்து கொண்டார். அவர் பூங்குழலியைப் பார்த்து, ''பெண்ணே ! இவள்தானே உன் அத்தை?'' என்று கேட்டார்.

''ஆம், ஐயா!'' என்றாள் பூங்குழலி.

''திருமலை! ஏன் மரம் போல் நிற்கிறாய்? மந்தாகினி தேவி ஓடப் பார்க்கிறாள்! அவளைத் தடுத்து நிறுத்து! சக்கரவர்த்தியின் கட்டளை!'' என்றார்.

ஆழ்வார்க்கடியான் தன் வாழ்நாளில் முதன் முறையாகக் குருவின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தான். ''ஐயா ! அதைக் காட்டிலும் புயற் காற்றைத் தடுத்து நிறுத்தும்படி எனக்குக் கட்டளையிடுங்கள் !'' என்றான்.

இதற்குள் பூங்குழலி சும்மா இருக்கவில்லை. ஒரே பாய்ச்சலாக ஓடிச் சென்று அத்தையின் தோளைப் பிடித்துக் கொண்டாள். மந்தாகினி அவளை உதறித் தள்ளிவிட்டு ஓடினாள்.

ஆழ்வார்க்கடியான் சட்டென்று ஒரு காரியம் செய்தான். சற்று முன்னால் முதன் மந்திரி முதலியவர்கள் நுழைந்து வந்த கதவண்டை சென்று அதைச் சாத்தித் தாளிட்டான். பிறகு கதவை யாரும் திறக்க முடியாதபடி கைகளை விரித்துக் கொண்டு நின்றான்.

வேடர்களால் சூழ்ந்துகொள்ளப்பட்ட மானைப் போல் நாலுபுறமும் பார்த்து மிரண்டு விழித்தாள் மந்தாகினி. தப்பிச் செல்வதற்கு வேறு வழி இல்லை என்றும், தான் இறங்கி வந்த வழியாக ஏறிச் செல்ல வேண்டியதுதான் என்றும் நிர்மானித்துக் கொண்டாள். அவள் மேல் மாடியை நோக்கிய பார்வையிலிருந்து அவளுடைய உத்தேசத்தை மற்றவர்களும் அறிந்து கொண்டார்கள்.

சுந்தரசோழர், ''பிடியுங்கள்! அவளைப் பிடித்து நிறுத்துங்கள்! அவள் எதற்காக வந்தாள், யாரைப் பழி வாங்க வந்தாள் என்று கேளுங்கள் !'' என்று மேலும் கத்தினார்.

தூணின் வழியாக மேல் மாடத்துக்கு ஏறிச் செல்ல ஆயத்தமாயிருந்த மந்தாகினி தேவியிடம் மறுபடியும் பூங்குழலி ஓடி நெருங்கினாள். இம்முறை அவளைப் பிடித்து நிறுத்துவதற்குப் பதிலாகப் பூங்குழலி கையினால் சமிக்ஞை செய்து ஏதோ கூற முயன்றாள். மந்தாகினி அதன் பொருளைத் தெரிந்து கொண்ட

சென்னை, மயிலைத் தொகுதி சுதந்திரக் கட்சியின் முதல் அரசியல் மகாநாடு சென்ற 11-10-70 அன்று திரு ஜி. நாராயணசாமி அவர்கள் (படத்தில் வலது கோடி) தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ராஜாஜியும் பங்கு கொண்டு உரையாற்றினார். ராஜாஜியின் 93வது பிறந்ததினத்தை யொட்டி ரூ. 1001-க்கு ஒரு காசோலையை மாநாட்டுத் தலைவர் ராஜாஜியிடம் தந்தார்.



வன்போல், கீழே விழுந்து கிடந்த அகல் விளக்கைச் சுட்டிக் காட்டினாள்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த குந்தவை, "அப்பா! பெரியம்மாவின் பேரில் தாங்கள்தான் விளக்கை எடுத்து எறிந்தீர்களா?" என்று கேட்டாள்.

"ஆம், மகளே! அந்தப் பேய் என்னைப் பார்த்த பார்வையை என்னால் சகிக்க முடியவில்லை. விளக்கை எடுத்து எறிந்தேன்!" என்றார் சுந்தர சோழர்.

"தந்தையே! பேயுமல்ல; ஆவியும் அல்ல; உயிரோடிருக்கும் மாதரசியே தான். அப்பா! பெரியம்மா சாகவே இல்லை! முதன் மந்திரியைக் கேளுங்கள்! எல்லாம் சொல்லுவார்!" என்று குந்தவை கூறிவிட்டு, மந்தாகினியும், பூங்குழலியும் மௌன வாக்குவாதம் செய்து கொண்டிருந்த காட்சியைப் பார்த்தாள். உடனே அந்த இடத்துக்குப் பாய்ந்து சென்றாள்.

"மகளே! அவளிடம் போகாதே! அந்த ராட்சஸி உன்னை ஏதாவது செய்து விடுவாள்!" என்று சுந்தரசோழர் கூவிக் கொண்டே குந்தவையைத் தடுப்பதற்காகப் படுக்கையிலிருந்து பரபரப்புடன் எழுந்திருக்க முயன்றார்.

மலையமான் மகள் வானமாதேவி அவருடைய தோள்களை ஆதரவுடன் பிடித்துப் படுக்கையில் சாய வைத்தாள்.

"பிரபு! சற்றுப் பொறுங்கள்! தங்கள் திருமகளுக்கு அபாயம் ஒன்றும் நேராது!" என்று கூறினாள்.

முப்பத்துமூன்றும் அத்தியாயம்

"சோழர் குல தெய்வம்"

குந்தவை தன் அருகில் வந்ததும் மந்தாகினி அவளை ஒரு கணம் உற்றுப் பார்த்தாள். அப்போது யாரும் எதிர்பாராத ஒரு காரியத்தை இளையபிராட்டி செய்தாள். தரையில் விழுந்து மந்தாகினியின் பாதங்களைத் தொட்டுக் கீழே வணங்கி நமஸ்காரம் செய்தாள். மந்தாகினியின் கண்களில் கண்ணீர் பெருகிற்று. அவள் குனிந்து குந்தவையைத் தூக்கி எடுத்து அணைத்துக்கொண்டாள். பிறகு இளையபிராட்டி அவளுடைய ஒரு கையைத் தோள் வரையில் சேர்த்துத் தன் கையினால் தழுவிப் பிணைத்துக் கொண்டு சக்கரவர்த்தி படுத்திருந்த இடத்தை நோக்கி வந்தாள்.

சக்கரவர்த்தி இப்போதுதான் மந்தாகினியின் முகத்தை நன்றாகப் பார்த்தார். அவளுடைய நெற்றியிலிருந்து இரத்தம் வழிவதைக் கண்டார்.

"சுவாமி! தாங்கள்தான் விளக்கை எறிந்து காயப்படுத்தி விட்டீர்களா? ஐயோ! என்ன காரியம் செய்தீர்கள்?" என்று மலையமான் மகள் அலறினாள்.

"இல்லை, இல்லை! நான் எறிந்த விளக்கு இவள் பேரில் விழவேயில்லை. அதற்கு முன்னாலேயே இவள் இரத்தக் காயத்துடன் வந்து நின்றாள். ஆனால் இந்தப் பாதகி என்பேரில் பழி சொன்னாலும் சொல்லுவாள்! நீங்களும் நம்பி விடுவீர்கள். நீங்கள் எல்லோருமே அவளுடைய பட்சத்தில் இருக்கிறீர்கள். மலையமான் மகளே! இவளிடத்தில் நீ கூடப் பரிதாபப்படுகிறாயே? இவள் யார் என்பது உனக்குத் தெரியுமா?"

"தெரியும், சுவாமி! இவர் என் குல தெய்வம். சோழர் குலத்துக்கே தெய்வம். என் அருமை மகன் காவேரியில் முழுகிப் போய் விடாமல் காப்பாற்றிக் கொடுத்த தெய்வம் அல்லவா?..."

"ஆகா! நீகூட அவ்விதம் நம்புகிறாயா? குந்தவை ஒருவேளை அவ்வாறு உன்னிடமும் சொன்னாளா?"

"நானே கண்ணால் பார்த்ததைத்தான் சொல்கிறேன். குந்தவையும் அப்போது குழந்தை அல்லவா? அவளுக்கு என்ன தெரிந்திருக்க முடியும்? அருள்மொழியைக் காப்பாற்றியது மட்டும் அல்ல. சோழ நாட்டுக்குத் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்த தெய்வமும் இவர்தானே! தாங்கள் பூதத் தீவில் காட்டுக் கரடிக்கு இரையாகாமல் காப்பாற்றிய தெய்வம் அல்லவா?"

"கடவுளே! அதுகூட உனக்குத் தெரியுமா? இவள் இத்தனை நாள் உயிரோடு இருந்துவருகிறாள்என்பதும் தெரியுமா?"

"சில காலமாகத் தெரியும். தெரிந்தது முதல் இந்தத் தேவியை ஈழநாட்டிலிருந்து அழைத்து வரும்படி முதன் மந்திரியிடம் சொல்லி வருகிறேன்."

"அநிருத்தரே! இது என்ன மகாராணி சொல்லுவது? இவள் உண்மையிலேயே அந்தக் கரையர் மகள்தானா? இவள் இறந்து விட்டாள் என்பது பொய்யா? இவள் ஆவி என்னை வந்து சுற்றுகிறதென்று நான் எண்ணியதெல்லாம் பிரமையா? ஏற்கனவே என் அறிவு குழம்பியிருக்கிறது. எல்லாருமாகச் சேர்ந்து என்னை முழுப் பைத்தியமாக்கி விடாதீர்கள்!" என்றார் சக்கரவர்த்தி சுந்தர சோழர்.

"பிரபு! இவர் கரையர் மகள் என்பது உண்மைதான். இவர் இறக்கவில்லை

என்பதும் உண்மைதான்! சக்கரவர்த்தி! நான் பெரிய குற்றவாளி. நான் செய்த குற்றத்துக்கு மன்னிப்பே இல்லை. ஆனாலும் தங்கள் கருணையினால்....."

"முதன் மந்திரி! இப்போது தெரிகிறது. கோடிக்கரையிலிருந்து நீர் பலவந்தமாகப் பிடித்துக் கொண்டு வரச் சொன்னவள் இவள்தான்! பல்லக்கில் வந்தவள் அந்த ஓடக்காரப் பெண் என்று நீர் கூறியது உண்மையல்ல!..."

"மன்னர் மன்னா! அடியேனை மன்னிக்க வேண்டும்!"

"ஆகா! மன்னிக்க வேண்டுமாம்! சக்கரவர்த்தி என்றும், மன்னர் மன்னன் என்றும் கூறப்பட்ட ஒருவன் என்னைப் போல் ஏமாற்றப்பட்டது இந்த உலகம் தோன்றிய காலத்திலிருந்து நேர்ந்திராது. எனக்குத் தெரியாமல் ஏன் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்? ஏன் முன்னாலேயே சொல்லியிருக்கக் கூடாது? முதன் மந்திரி! எனக்கு எல்லாம் விளங்குகிறது. பழுவேட்டரையர்கள் சொல்லுவது சரிதான். நீங்கள் எல்லாருமாகச் சேர்ந்து எனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிறீர்கள்!"

"நாங்கள் சூழ்ச்சி செய்தது என்னமோ உண்மைதான். ஆனால் தங்களுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யவில்லை. எப்படியாவது கரையர் மகளைத் தங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பிக்க வேண்டுமென்று எண்ணினோம். அவர் கடலில் விழுந்து இறந்தது பற்றித் தங்கள் மனம் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று மகாராணியின் மூலமாக அறிந்து நான் இந்த முடிவுக்கு வந்தேன். மகாராணியும் அவ்விதமே ஆக்ஞாபித்தார்கள். ஆனால் அவரை அழைத்து வருவது எளிய காரியமாயில்லை. அவர் உயிரோடு இருப்பதாகச் சொன்னால் தாங்கள் நம்புவது சிரமமாயிருக்கும். ஆகையால் எப்படியும் அவரை இந்த ஊரில் கொண்டு வந்து சேர்த்த பிற்பாடு தங்களிடம் சொல்ல எண்ணினேன். நேற்று மாலை கோட்டை வாசலுக்குக் கிட்டத்தட்ட வந்த பிறகு மந்தாகினி தேவி மறைந்து விட்டார். அவருக்குப் பதிலாக இந்தப் பெண் பல்லக்கிலே வந்தாள். இன்றைக்கெல்லாம் தேவியைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தோம். அவர் பழுவூர் அரண்மனைத் தோட்டத்தின் மதிள் ஏறிக் குதித்ததைப் பார்த்து விட்டுத்தான் என் சீடனும் அவ்வாறு மதிள் ஏறிக் குதித்தான். ஆனால் இந்தத் தேவி அகப்படவில்லை. திருமலையைப் பழுவூர் ஆட்கள் பிடித்துக் கொண்டு வந்தார்கள். சக்கரவர்த்தி!



அண்மையில் உலகில் பல நாடுகளுக்கும் விஜயம் செய்து மக்களுடன் அளவளாவிப் பெருந் தலைவர்களுடன் முக்கிய பிரச்னைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார் அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன். அயர்லாந்துக்கு அவர் சென்றபோது லிமெரிக் நகர மேயர் அவருக்குப் பரிசளித்தது - ஒரு கைத்தடி !

என் சீடனை அக்குற்றத்துக்காக மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன்."

"மன்னிப்பதற்கு இது ஒரு குற்றந்தானா? எவ்வளவோ இருக்கிறது! அப்புறம் சொல்லுங்கள்!"

"அப்புறம், இன்று சாயங்காலம் வரை காத்திருந்தும், பழுவூர் அரண்மனைக்குள்ளே தேடியும், இவரைக் காணவில்லை. நாங்கள் சற்று முன் கண்ணயர்ந்திருந்த போது நாங்கள் எல்லோரும் அடுத்த அறையில் இவரைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம். இவர் எங்கே மறைந்திருக்கக் கூடும் என்றும், இதையெல்லாம் பற்றித் தங்களிடம் எப்படிச் சொல்லுவது, யார் சொல்லுவது என்றும் யோசனை செய்து கொண்டிருந்தோம். அதற்குள் இவராகவே எப்படியோ தங்கள் சந்நிதிக்கு வந்து சேர்ந்திருக்கிறார். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலாயிற்று!"

சக்கரவர்த்தி அப்போது மந்தாகினி தேவி இருந்த இடத்தை நோக்கினார். குந்தவை, பூங்குழலி முதலியோர் அந்தப் பெண்மணியின் நெற்றியிலிருந்த காயத்தை ஈரத் துணியினால் துடைத்து விட்டு மருந்து கலந்த சந்தனக் குழம்பை அதன்பேரில் அப்புவதைக் கவனித்தார்.

"விடங்கர் மகளே! உன் அத்தையின் நெற்றியில் காயம் எப்படி ஏற்பட்டது? கேட்டுச் சொல்வாயா?" என்றார்.

பூங்குழலி இரண்டு அடி முன்னால் வந்து, "கேட்டேன், பிரபு! ஆனால் அத்தை சொல்லும் காரணம் எனக்கே சரியாக விளங்கவில்லை...." என்றாள்.

''என்னதான் சொல்லுகிறாள்? நான் விளக்கை எறிந்ததால் ஏற்பட்ட காயம் என்று சொல்லுகிறாளா ?''

''இல்லை, இல்லை! மலைமேல் முட்டிக் கொண்டதால் காயம் பட்டதாகச் சொல்கிறார். இரத்தம் வழிந்ததைக் கவனிக்கவில்லை யென்றும் கூறுகிறார்...''

சுந்தர சோழர் அப்போது ஒரு மிக அபூர்வமான காரியம் செய்தார். கலகல வென்று நகைத்தார்! அம்மாதிரி அவர் சிரித்ததை மற்றவர்கள் பார்த்துப் பல வருஷங்கள் ஆயின. மீண்டும் மீண்டும் அவர் நினைத்து நினைத்துச் சிரித்தார். அனைவரும் அவரைக் கவலையுடன் உற்றுப் பார்க்கத் தொடங்கினார்கள்.

''முதன் மந்திரி! எதற்காக என்னை எல்லாரும் இப்படி உற்றுப் பார்க்கிறீர்கள்? எனக்குப் புதிதாகப் பைத்தியம் பிடிக்கவில்லை. பழைய பைத்தியந்தான் மிச்சமிருக்கிறது. இப்போது நான் சிரிப்பதின் காரணம் உங்களுக்கெல்லாம் தெரியவில்லையா? சோழ வள நாட்டில் இவள் மலையில் மோதிக் கொண்டு காயம் பட்டதாகக் கூறுகிறாளே ? அதை எண்ணித்தான் சிரித்தேன். மலையைப் பற்றிச் சொல்வானேன் ? இங்கே ஒரு சிறிய விக்கிரகம் செய்யக் கூடக் கல் கிடைக்காதே? சோழ சக்கரவர்த்தியின் தலையில் யாராவது கல்லைப் போட விரும்பினால் அதற்குக்கூட ஒரு கருங்கல் கிட்டாதே! இவள் மலை மீது மோதிக் கொண்டதாகச் சொல்கிறாளாமே? எந்த மலையின் மேல் மோதிக் கொண்டாள் ? பூங்குழலி! நன்றாகக் கேள்!'' என்றார்.

இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வானதியின் முகத்தில் அப்போது ஒரு பிரகாசம் உண்டாயிற்று. அவள் சட்டென்று இரண்டு அடி முன் வந்து சக்கரவர்த்திக்கு வணக்கம் செலுத்தினாள். '' ஐயா ! எனக்கு ஒன்று தோன்றுகிறது. கட்டளையிட்டால் சொல்லுகிறேன்!'' என்றாள்.

''வேளிர் மகளே! நீ வேறு இங்கே இருக்கிறாயா? உன்னை இத்தனை நேரமும் நான் கவனிக்கவே இல்லையே? இவ்வளவு தடபுடலுக்கும் நீ மூர்ச்சை அடைந்து விழாமல் இருக்கிறாயே? அதுவே ஆச்சரியந்தான்! உனக்கு என்ன தோன்றுகிறது? எதைப் பற்றி? சொல் !''

''ஐயா! இந்த அரண்மனைத் தோட்டத்தில் சிற்ப மண்டபம் ஒன்று இருக்கிறதல்லவா? அதற்குள்ளே இராவணன் தூக்கிப் பிடிக்கும் கைலாச மலை ஒன்று இருக்கிறது. ஒரு வேளை அதில் இவர் முட்டிக் கொண்டிருக்கலாம்!''

இவ்விதம் வானதி சொன்னதும் அத்தனை பேரும் வியப்புக் கடலில் மூழ்கிப் போனார்கள். '' இருக்கலாம், இருக்கலாம் !'' ''அப்படித்தான் இருக்கும்'' என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

குந்தவை வானதியின் நெற்றியைத் தொட்டுத் திருஷ்டி கழிப்பது போல் கையை நெரித்து, ''அடி என் கண்ணே! என்ன புத்திசாலியடி நீ! எங்களுக்கெல்லாம் தோன்றாதது உனக்குத் தோன்றியதே !'' என்றாள்.

பூங்குழலி அதைக் கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, தன்னுடைய ஊமை அத்தையிடம் சமிக்ஞை பாஷையில் பேசினாள். பின்னர்,

''ஆமாம்; சிற்ப மண்டபத்தில் உள்ள மலைதானாம்! அந்த மண்டபத்தை நான் பார்த்திருந்தால், எனக்கும் அது தெரிந்திருக்கும்!'' என்றாள்.

சக்கரவர்த்தி மந்தாகினியை உற்றுப் பார்த்துக் கொண்டே, ''ஆமாம்; வழி தெரியாமல் தவித்துச் சிற்ப மண்டபத்தில் மலைமேல் முட்டிக் கொண்டிருக்கிறாள். எங்கே போவதற்காக வழி தேடினாளோ, கடைசியில் இங்கே வந்து சேர்ந்தாள்!'' என்றார்.

''தங்களிடம் வருவதற்குத்தான் வழி தேடி இருக்கிறார். அதைப் பற்றிச் சிறிதும் சந்தேகம் இல்லை. நானே இவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். தங்களைத் தரிசிக்காமல் இவ்விடம் விட்டுப் போக மாட்டார் என்று.....''

''நான் நம்பவில்லை, முதன் மந்திரி! என்னிடம் இவள் வருவதாக இருந்தால் முன்னமே வந்திருக்க மாட்டாளா? இருபத்தைந்து வருஷமாக வந்திருக்க மாட்டாளா? இத்தனை நாள் பொறுத்திருந்து வருவானேன் ? என்னைப் பேயாக வந்து சுற்றுவானேன் ? ஆம், ஆம்! இவள் பேய் வடிவத்தில் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தேன். அதுவும் உண்மைதானே? பேயைப் போலத்தான் ஈழ நாட்டுக் காடு மலைகளில் அலைந்து திரிந்து வந்திருக்கிறாள். நான் இத்தனை காலமும் அரண்மனைச் சுகபோகங்களில் ஆழ்ந்து காலங் கழித்திருக்கிறேன். குற்றத்தின் சக்தியைத்தான் என்னவென்று சொல்வது? இவளைப் போன்ற உருவத்தைக் கண்டு எத்தனை தடவை என் உள்ளம் பிரமை அடைந்திருக்கிறது ? யார் கண்டது? இப்போது வந்ததைப் போல் இதற்கு முன்னாலும் இரகசியமாக வந்து என்னைப் பார்த்து விட்டுப் போனாளோ, என்னமோ? நான் பிசாசு என்று எண்ணி மிரண்டு வந்தேன்!.... இருபத்தைந்து ஆண்டு! இருபத்தைந்து யுகம்!''

கீதைக் கதைகள்



"அது அதற்கு அந்தந்த வேளையென்று ஈசன் நியமித்திருக்கையில் ஒரு காரியம் கைகூடுதலுக்குச் சகுனம் தடையாக இருக்கின்றது என்று பேசுதல் நிரீச்சுர வாதஞ் சார்ந்ததாகும்..."

14. வேளை

அவனின் காரியசித்தி குறைந்து வருவதாகக் கறுத்த பூனைக்குத் தோன்றியது.

இரையாக்க இச்சை வளர்த்திருந்த அதே எலி வீதியைக் கடந்து எதிர் வீட்டிற்குள் நுழைவதை அது கண்ணுறக் கண்டது.

பூனை எதிர் வீடு நோக்கிப் பார்த்தது.

அப்போதுதான் எதிர் வீட்டுக் கிழான் வீதியில் இறங்கிக் கொண்டிருந்தான். மொட்டைத் தலை. நெற்றியில் விபூதிப் பட்டை. கழுத்திலே ருத்திராட்சக் கொட்டை. கால்களில் மிதியடிக் கட்டை.

அவருடைய கண்களில் முதன் முதலில் தென்பட்டது பாய்ந்து வந்த கறுத்த பூனைதான்.

பூனையிலும் பார்க்க அவர் முகம் கறுத்தது.

"சனியன் பிடித்த பூனை!"

மான உணர்வில் பூனையின் மீசை துடித்தது.

"மானிடனே! ஏன் என்னை அநியாயமாக வைகின்றாய்?" - பூனையின் கேள்வி.

"மங்கள காரியம் ஒன்று இயற்ற வெளியே புறப்பட்டால், கறுத்த பூனையாகிய நீ, அபசகுனமாக என் முன்னால் வந்து நிற்கின்றாயே!" எனச் சலிப்புடன் கூறினான்.

"அப்படியா சங்கதி? உன் வீட்டிலுள்ள எலியைப் பிடிக்க நான் எத்தனையோ தடவை முயன்றேன். ஒவ்வொரு தடவையும் நீ குறுக்கிட்டாய். உன் குறுக்கீட்டினால் காரியம் கெட்டுவிட்டதென நான் முணுமுணுத்திருக்கிறேனா? வேளை கைகூடவில்லை என்றே நான் சமாதானம் அடைந்து வருகிறேன். அது அதற்கென்று அந்தந்த வேளை என்று ஈசன் நியமித்திருக்கையில் ஒரு காரியம் கைகூடுதலுக்குச் சகுனம் தடையாக இருக்கிறது என்று பேசுதல் நிரீச்சுர வாதம் சார்ந்ததாகும். உங்களால் பூனை இனத்துக்கு மாறாத களங்கம்" எனப் பூனை ஆத்திரத்தைக் கொட்டியது.

மனிதன் நாணத்தினால் தலை குனிந்தான்!

- எஸ். பொன்னுத்துரை

இவ்விதம் தமக்குத்தாமே பேசுகிறவர் போலச் சொல்லி வந்த சக்கரவர்த்தி திடீரென்று அநிருத்தரின் பக்கம் திரும்பி, "முதன் மந்திரி! நீர் ஏதோ குற்றம் செய்ததாகச் சொல்லி மன்னிப்புக் கேட்டீரே? அது என்ன குற்றம்?" என்றார் ஆத்திரத்துடன்.

அநிருத்தர், "சக்கரவர்த்தி! குற்றவாளியிடமே குற்றத்தைப் பற்றிக் கேட்பது தர்மமா?" என்றார்.

"பின்னே யாரிடம் கேட்கிறது? ஆம்; ஒருவரிடமும் கேட்க வேண்டியதில்லை. உம்முடைய முகத்திலேயே எழுதியிருக்கிறது. இவன் கடலில் விழுந்து இறந்துவிட்டதாக வந்துசொன்னீரே? அதுவே பொய்! இருபத்தைந்து வருஷங்களாக அந்தப் பொய்யை நீர் சாதித்து வந்தீர். நானும் நம்பி வந்தேன். உண்மையிலேயே உமது குற்றம் மிகப் பயங்கரமானது!......."

"அதற்கு நான் மட்டும் பொறுப்பாளி அல்ல, சக்கரவர்த்தி! கரையர் குல மகளும் பொறுப்பாளிதான்! அவர் கடலில் விழுந்தது என்னவோ உண்மை. பிறகு புனர் ஜன்மம் அடைந்தார். தங்களிடம் அவர் உயிரோடிருப்பதைச் சொல்ல வேண்டாமென்று வாக்குறுதி வாங்கிக் கொண்டார். வாக்குறுதியைக் கொடுக்காவிடில் மறுபடியும் உயிரை விட்டு விடுவேன் என்று சொன்னார். இவையெல்லாம் உண்மையா என்பதைத் தாங்களே அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்."

"கேட்க வேண்டியதே இல்லை! அவ்விதமே இருக்கும். ஆனாலும் நீங்கள் எல்லாருமாகச் சேர்ந்து எனக்கு எதிராகச் சதி செய்கிறீர்கள் என்று நான் கூறியதிலே தவறு ஒன்றுமில்லை அல்லவா?" என்றார் சுந்தர சோழர்.

"நான் செய்த குற்றத்துக்கு மன்னிப்பு இல்லைதான். மன்னிப்பு நான் கோரவும் இல்லை. ஆனாலும் பல வருஷ காலமாக என் மனத்திலிருந்த பாரம் இன்றைக்கு நீங்கி விட்டது. இனி எனக்கு விடை கொடுங்கள். திருவரங்கம் சென்று ஸ்ரீ ரங்கநாதருக்குச் சேவை செய்து என் நாட்களைக் கழிக்க அனுமதியுங்கள்!"

"அது முடியாத காரியம், பிரம்மராயரே! நீர் அன்று செய்த குற்றத்தினால் இன்று எத்தனையோ குழப்பங்கள் நேர்ந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் தீர்த்து வைத்து விட்டல்லவா நீர் ரங்கநாதருக்குச் சேவை செய்யப் போக வேண்டும்?" என்றார் சக்கரவர்த்தி.

(தொடரும்)

நாதம் எழாத பொம்மை வயலின் குழந்தையின் கோபத்துக்கு உள்ளாகிச் சுக்கு நூறாகியது!

ஜனார்த்தனன்



பிரதமர் நேருவுடன் மெனுஹின்

திசையெல்லாம் போற்றும் இசை மேதை

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து ஏழாம் ஆண்டு. நவம்பர் மாதம் 25ந் தேதி. நியூயார்க் நகரின் கார்னெகி ஹாலில் ஆயிரக் கணக்கான ரசிகர்கள் குழுமியிருக்கிறார்கள். மேடையில் நியூயார்க் ஸிம்ஃபனி வாத்திய கோஷ்டியினர் காத்திருக்கின்றனர். அரை நிஜார் அணிந்து, கையில் ஒரு வயலின் வாத்தியத்துடன் மேடைக்கு வருகிறான் பதினொரு வயதுள்ள ஒரு சிறுவன். நிசப்தமான சபையில் பரபரப்பு நிலவுகிறது. பீத்தோவன் (Beethoven) என்ற ஜெர்மானிய இசை மேதை இயற்றிய இசைத் தொகுப்புடன் வயலின் கச்சேரி ஆரம்பமாகிறது. ரசிகர்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றனர். கச்சேரி முடிந்து கரகோஷம் ஓய்வதற்குப் பல நிமிடங்கள் பிடிக்கின்றன. சிறுவன் பல தடவை குனிந்து நிமிர்ந்து ரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்கிறான். வாத்திய கோஷ்டியினர் அவனைத் தழுவிக் கொள்கின்றனர். மறு நாள் காலை தினசரிப் பத்திரிகைகள் ''வயலின் இசைக்கு ஒரு மேதை'' என்று கொட்டை எழுத்துக் களாலான தலைப்புடன் கச்சேரியின் வர்ணனையை வெளியிடுகின்றன.

இன்னும் சில தினங்களில் ஜவாஹர்லால் நேரு பரிசைப் பெறவிருக்கும் யஹூதி மெனுஹின்தான் அச்சிறுவன்.


நேருஜிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பாரத அரசாங்கத்தாரால் 1964ம் ஆண்டு நிறுவப்பட்ட, நேரு பரிசின் மதிப்பு ஒரு லட்ச ரூபாயாகும். சர்வதேச மனப்பான்மையை வளர்ப்பதற்கெனக் கடந்த 1965ம் ஆண்டு முதல் அளிக்கப்பட்டு வரும் இப்



பியானோ மேதை சகோதரி ஹெஃப்ஸிபாவுடன் மெனுஹின்

பரிசை இதுவரை ஐ. நா. பொதுக்காரியதரிசி ஊதாண்ட், மார்டின் லூதர் கிங், கான் அப்துல் கபார்கான் ஆகிய மூவரும் பெற்றுள்ளனர். நான்காவதாக 1968ம் ஆண்டுக்கான பரிசு யஹூதி மெனுஹினுக்கு அளிக்கப்படவிருக்கிறது.

ஹீப்ரு மொழியைக் கற்பிக்கும் ஆசிரியராகப் பணியாற்றி வந்த, மோஷே என்ற எளிய யூதருக்கு 1916ம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் யஹூதி மெனுஹின். குழந்தைப் பிராயம் முதல் இசை ஞானம் மிகுந்திருந்தது. சங்கீதப் பிரியர்களான மோஷேயும் அவரது மனைவி மருதாவும், தாம் கச்சேரி கேட்டு ரசிக்கும்போது தம் குழந்தையைக் கவனித்துக்கொள்ளத் தாதி ஒருவரை அமர்த்



வயலின் மேதை யஹூதி மெனுஹின்

திக் கொள்ள வசதி இல்லாத காரணத்தால், குழந்தையையும் தாம் செல்லும் நிகழ்ச்சிகளுக்கு எடுத்துச் செல்வதுண்டு. புட்டிப் பாலைப் பருகியவண்ணம் குழந்தை மெனுஹின் அழாமல் சங்கீதத்தையும் ரசித்துப் பருகினான். மூன்று வயதான குழந்தை மெனுஹினின் ஆசையைப் பூர்த்தி செய்ய அவனது பெற்றோர் ஒரு பொம்மை வயலினை வாங்கிக் கொடுத்தனர். நாதம் எழாத அந்தப் பொம்மை வயலின், குழந்தையின் கோபத்துக்குள்ளாகி, சுக்குநூறாகியது. பின்னர் தம் ஐந்தாவது வயதில் வயலின் வாத்தியமொன்றைப் பெற்றோர்களிடமிருந்து பெற்ற யெஹூதி மெனுஹின், சான்–பிரான்ஸிஸ்கோ நகரில் வசித்து வந்த ஸிக்மண்ட் அன்க்கர் (Sigmund Anker) என்பவரிடம் வயலின் இசை கற்கத் தொடங்கினார். வயதுக்கு மிஞ்சிய புத்தி நுட்பமுள்ள மாணவர்களுக்கு மட்டுமே இசை பயில்விப்பதை வழக்கமாகக் கொண்ட அவரிடம் இசை பயின்ற மெனுஹின், தமது ஆறாவது வயதில் மாணவர் இசை நிகழ்ச்சி ஒன்றில் கச்சேரி செய்ய மேடை ஏறினார். தொடர்ந்து சான் பிரான்ஸிஸ்கோ ஸிம்ஃபனி வாத்தியக் கோஷ்டியின் (Symphony orchestra) தலைவரான லூயி பர்ஸிங்கர் (Louis Persinger) என்பவரிடம் இசை பயின்று, தம் ஏழாவது வயதில் அக்குழுவினருடன் தொழில் முறையில் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மெனுஹினுக்கு ரசிகர்களிடம் நற்பெயர் கிட்டியது. இதற்குச் சில ஆண்டுகளுக்குப்பின் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியபடி நியூயார்க் கார்னெகி ஹாலில் நடந்த இசை விருந்து மெனுஹினை, இசை உலகுக்கு ஒரு மேதை என்று அறிமுகப்படுத்தியது.

இசையில் சிறந்து விளங்கிய யஹூதி மெனுஹின் பள்ளிப் படிப்பில் பிரகாசிக்கவில்லை. இதைக் கண்ட அவரது பெற்றோர்கள் மெனுஹினுக்கும், சிறு வயதிலேயே பியானோ வாசிப்பதில் சிறந்து விளங்கிய ஹெஃப்ஸிபா, யால்டா என்ற அவரது இரு சகோதரிகளுக்கும் வீட்டிலேயே கல்வி கற்பிப்பதென முடிவு செய்தனர்.

இரவல் வாங்கி வந்த பெஞ்சுகள் சமையல் அறையை வகுப்பறையாக மாற்றின. காலை ஐந்தரை மணிக்கு எழுந்திருந்த குழந்தைகள் மூவரும் ஏழு மணி வரை வீட்டு வேலைகளைக் கவனித்தனர். தொடர்ந்து மூன்று மணி நேரம் சங்கீத சாதகம். பின்னர், ஒரு மணி நேர ஓய்வு. பகல் உணவுக்குப் பிறகு அவர்கள் ஒரு மணி நேரம் தூங்க அனுமதிக்கப்பட்டனர். இதை அடுத்து மீண்டும் மூன்று மணி நேரம் இசைப் பயிற்சி. தொடர்ந்து இரண்டு மணி நேரம் விளையாட்டு. இரவு உணவு அருந்திய தகப்பனார் மோஷே, கணக்கு, சரித்திரம், ஹீப்ரு (யூதர் மொழி) முதலியவற்றையும், தாயார் மருதா, பிரஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளையும் குழந்தைகளுக்குப் பயிலுவித்தனர். குழந்தைகள் மூவரும் தெருவிலுள்ள மற்றக் குழந்தைகளுடன் விளையாடக் கூட மானவரை அனுமதிக்கப்படவில்லை. விடுமுறை தினங்களில் மெனுஹின் குடும்பத்தினர் நகருக்கு அப்பால் ஐந்து மைல் தூரத்தில் உள்ள கடற்கரைக்கு நடந்தே செல்வார்கள்;

அங்கு உல்லாசமாய்ச் சிற்றுண்டி அருந்துவார்கள்.

1924ம் ஆண்டில் யஹூதி மெனுஹினின் இசை அறிவைக் கண்டு வியந்த சிட்னி யெர்மன் (Sidney Ehrman) என்ற செல்வந்தர் பண உதவி செய்ய முன் வந்தார். மெனுஹின் குடும்பம் ஐரோப்பாவுக்குப் பயணமாகியது. பிரஸ்ஸல்ஸ் நகரின் பிரபல வயலின் இசைக் கலைஞர் யூஜின் ஸாயே (Eugene Ysaye) என்பவரிடம் இசை பயின்று பின்னர் பாரிஸ் நகருக்குச் சென்ற மெனுஹின், பிரபல இசை இயற்றுநரும் (Composer) வாத்திய கோஷ்டித் தலைவருமான ருமேனிய இசைக் கலைஞர் ஜார்ஜ் எனெஸ்கோ (George Enesco) என்பவரிடம் வயலின் பயிற்சி பெற விரும்பினார். பாரிஸ் நகரில் ஒரு நாள் எனெஸ்கோவின் இசை நிகழ்ச்சி முடிந்தவுடன் அவர் அறைக்குச் சென்று தாம் அவரிடம் வயலின் இசை பயில விரும்புவதைத் தெரிவித்தார் மெனுஹின். மறு நாள் காலை ஆறு மணிக்குத் தாம் கச்சேரிக்கென வெளியூர் செல்லவிருப்பதாகக் கூறினார் எனெஸ்கோ. தமக்கு நேரமில்லை என்று அவர் சொல்லாமல் சொல்ல, மெனுஹின் தாம் காலை ஐந்து மணிக்கே வந்து அவருக்கு வயலின் வாசித்துக் காட்டுவதாகக் கூறிச் சம்மதம் பெற்றார். குறிப்பிட்ட நேரத்தில் வயலின் வாசித்துக் காட்டிய மெனுஹினின் இசையில் மயங்கி நின்ற எனெஸ்கோ, அவரைத் தம் மாணவராக ஏற்றுக் கொண்டதுடன் தமது பயணத்தையே ஒத்திப் போட்டு விட்டார்!

மெனுஹினின் வாழ்க்கையில் இப்படி எத்தனையோ சுவையானதும் அதிசயமானதுமான நிகழ்ச்சிகள். ஒரு முறை ருமேனிய அரசி மேரி அவர்களின் சமூகத்தில் வயலின் வாசித்தார். ராஜகுல வழக்கப்படி ராணியின் கையை முத்தமிட வேண்டும். இந்தக் கௌரவத்தை மரியாதையுடனும் துணிச்சலுடனும் மறுதளித்தார் மெனுஹின். காரணம் கேட்ட போது, ''அமெரிக்காவில் ஒவ்வொரு பெண்ணும் ஒரு ராணி'' என்று மெனுஹின் பதில் அளித்தார். இதைக் கேட்டு அரசி மேரி கோபப்படவில்லை. மகிழ்ச்சியுடன் அவரைத் தட்டிக் கொடுத்துத் தாம் எழுதிய கதைப் புத்தகம் ஒன்றைப் பரிசாகவும் அளித்தார். மெனுஹினுக்கு அப்போது வயது பதினொன்றுதான்!

1927ம் ஆண்டில் நியூயார்க் நகரின் கார்னெகி ஹாலில் கச்சேரி நடந்த சில வாரங்களுக்குப் பின், அதே ஹாலில் மெனுஹினின் மற்றொரு கச்சேரிக்கு ஏற்பாடாகி இருந்தது. அக்கச்சேரிக்கென அந்த ஹாலில் அதிகப்படியாக முந்நூறு நாற்காலிகள் போடப்பட்டன. இருந்தும் டிக்கட்டுகள் அனைத்தும் பல நாட்களுக்கு முன்னமேயே விற்றுப் போயின. டிக்கட்டுகள் கிடைக்காமல் ஏமாற்றமடைந்த பலர் பலத்த போலீஸ் பந்தோபஸ்தையும் பொருட்படுத்தாமல், சன்னல்கள் வழியாக ஹாலுக்குள் குதித்தனர். சபை நிரம்பி வழிந்தது.

பெர்லின் நகரின் ஃபில்ஹார்மோனிக் வாத்திய கோஷ்டியுடன் ஒரே நிகழ்ச்சியில் Bach - E - Major, Beethoven, Brahms ஆகிய மூன்று கனமான இசைத் தொகுப்புகளை வாசித்துப் பெரும் புகழ் பெற்றார் மெனுஹின், 1929ல்.

1935ம் ஆண்டில் உலகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். ஒரே ஆண்டில் உலகத்தின் அறுபத்துமூன்று நகரங்களில் நூற்றுப் பத்து கச்சேரிகள் செய்தார்.

பிறவி மேதையாக விளங்குவதில் மெனுஹினுக்குத் திருப்தியில்லை. முறையான இசை அறிவு முதிர்ந்த மேதையாக மாற வேண்டும் என்றெண்ணி இரண்டு வருட காலம் இசை நுணுக்கங்களைத் தெரிந்து கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டார். **(அடுத்த இதழில் முடியும்)**

கள்ளப் பாட்டு!

அமெரிக்காவில் இப்போதெல்லாம் போலீஸாருக்கு மிகவும் தலைவேதனை அளிப்பது கள்ள நோட்டு அல்ல; கள்ளப் பாட்டு!

ரொம்பப் பிரபலமாகி ஏராளமாக விற்பனையாகும் இசைத் தட்டில் ஒன்றை வாங்கி அதையே பல பிரதிகள் எடுத்து மலிவான விலைக்கு விற்று விடுகின்றனர்.

டேப் ரிகார்டரில் போட்டுக் கேட்கத் தயாரிக்கப்படும் டேப் இசையையும் இவ்வாறே பல பிரதிகள் எடுத்து விற்கின்றனர் இசைக் கள்ளர்கள்.

போதாக்குறைக்குக் கள்ளத்தனமாகத் தயாரான இந்த இசைத் தட்டுகளையும் டேப்களையும் விமர்சனத்துக்காகப் பத்திரிகைகளுக்கு வேறு அனுப்புகிறார்களாம்!

என்ன துணிச்சல்!

ஆதாரம்: 'நியூஸ் வீக்'

நகல் அசல்



இல்லங்களில் வளர் செல்லங்கள்

மயிலே, மயிலே! இறகு போடு!



நுங்கம்பாக்கம் கிருஷ்ணமாச்சாரி சாலையில் ஆறும் எண்ணுள்ள பங்களா வாயிலில், மதில் சுவரை ஒட்டி காலை மாலை வேளைகளில் ஒரு சிறு கூட்டம் நின்று தோட்டத்துக்கு உள்ளே எதையோ வேடிக்கை பார்ப்பது வழக்கம். அப்படி வேடிக்கை பார்க்க என்ன இருக்கிறது. அங்கே? ஒரு மாமரத்தின் நிழலில் ஓர் அழகான மயில் அசைந்து ஆடி நடை போடுகிறது. மரத்தைச் சுற்றிலும் கம்பி வேலியும், மரத்தின் அடியில் கூரை வேய்ந்த ஒரு கூண்டும் அமைந்துள்ளன.

மேற்கு கோதாவரியைச் சேர்ந்த தொழில் விவசாயப் பிரமுகர் திரு எஸ். பி.பி.பி.கே. சத்தியநாராயண ராவின் பங்களா அது. மயில் வளர்க்க வேண்டும் என்ற ஆசை எவ்வாறு ஏற்பட்டது அவருக்கு? அவர் மனைவி ஸ்ரீமதி ராஜ ராஜேசுவரம்மா கூறுகிறார் : ''சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆந்திராவைச் சேர்ந்த பழங்குடி மக்கள் என் கணவருக்கு அன்பளிப்பாக ஓர் ஆண் மயிலையும் ஒரு பெண் மயிலையும் வழங்கினார்கள். பெண் மயில் இரண்டு மாதங்களுக்கு முன்பு நோய் கண்டு இறந்து விட்டது.'' அவர் குரலில் ஒரு விதச் சோகம் இழையோடுகிறது.

''என்ன நோய் அது? அடிக்கடி மயிலுக்கு நோய் வருமா ?''

''கோழிகளுக்கு வரக் கூடிய ஒருவித நோய் என்று கூறினார்கள் கால்நடை மருத்துவர்கள். அவர்கள் ஊசி போட்டார்கள் ; மருந்தும் கொடுத்தார்கள். அதனைக் காப்பாற்ற அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் வீணாகி விட்டன. மருத்துவமனையில் அடிக்கடி கழுத்தை முறுக்கிக் கொண்டதாம். வலி தாங்க முடியவில்லையோ, என்னவோ ? இறந்து விட்டது ! அதற்கு முன்பு எந்த நோயும் தலைகாட்டியதில்லை.''

''இந்த இழப்பினால் ஆண் மயில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்குமே ?''

''இரண்டு மூன்று நாட்கள் உணவு எதையும் தொடவில்லை. நாளடைவில் சரியாகி விட்டது. இப்போதெல்லாம் வழக்கப்படி உணவு உட்கொள்ளுகிறது'' என்றார் ஸ்ரீமதி ராவ்.

''என்ன உணவு அளிக்கிறீர்கள், வழக்கமாக ?''

''நவதான்யங்கள், கீரைகள், முட்டைக்கோஸ் எல்லாம் சாப்பிடும். கூண்டுக்குள் ஒரு பாத்திரத்தில் நீரும் இன்னொன்றில் தான்யங்களும் அன்றாடம் வைப்போம்..... பசித்த போது சாப்பிடும்.''

''மயிலின் விசேஷப் பழக்க வழக்கங்கள் என்ன ?''

''யாராவது வந்தால் உரத்த குரலில் கேவும். உள்ளே இருப்பவர்களுக்குக் கூடக் கேட்கும்! நாய் மாதிரி, புதிய மனிதர்களைக் கண்டால் குரலெடுத்துக் கேவுதல் மயிலின் விசேஷ குணம். பகலில் கூண்டைத் திறந்து விடுவோம். இரவில் கூண்டுக்குள் அடைத்து விடுவது வழக்கம். முன்பெல்லாம் வீட்டுக்குள் வர அனுமதித்தோம். சில சந்தர்ப்பங்களில் அது முரட்டுத்தனமாக நடந்துகொள்வதால் சின்னக் குழந்தைகளை ஏதாவது செய்து விடுமோ என்று அஞ்சிக் கம்பி வலைக்குள்ளேயே வளைய வரும்படி விட்டிருக்கிறோம். ஆண் மயிலிடம் காணப்படும் பொல்லாத்தனம் பெண் மயிலிடம் இல்லை. பெண் மயில் பரம சாது. கடைசியாக அது பதினாறு முட்டைகள் இட்டது. (ஒரே தடவையில்). ஆனால் அது சரியாக அடை காக்கவில்லை. செயற்கைமுறையில் பெட்டிக்குள் (Incubator) வைத்துக் குஞ்சு பொரிக்கச் செய்யவும் முடியவில்லை. மயிலின் முட்டை வாத்து முட்டையையும் விட அளவில் பெரியது. எனவே முட்டைகள் எல்லாம் வீணாகி விட்டன என்கிறார் அவர்.

''ஆண் மயில் தோகை விரித்து ஆடுமே ? இது ஆடுமா ?'' என்று கேட்டதும், ''ஆடும்; ஆனால் இப்போது அதன் வாலில் உள்ள இறகுகள் உதிர்ந்து வருகின்றன. மீண்டும் முளைக்கும். அப்போது ஆடினால் பார்க்க அழகாயிருக்கும்'' என்றார் ஸ்ரீமதி ராஜ ராஜேசுவரம்மா.

நமது தேசியப் பறவை தவிர, இவர்கள் வீட்டில் ஓர் அல்சேஷன், லாப்ரடார் ஆகிய இரு நாய்களும் வளர்ந்து வருகின்றன.

பேட்டி: 'பாணன்'

மயிலுக்கு வேறு பெயர்கள் : சிகி, கேகி, பர்ஹி, நீலகண்டம், புஜங்கபுக், மஞ்ஞை, கோவளம்.

மிகுதியாகக் காணப்படுவது : ராஜஸ்தானம்.

மயில் வேட்டையைத் தடை செய்து முதன் முதலாகச் சட்டம் இயற்றியவர் : அசோக சக்கரவர்த்தி.

ராமாயணம்

ராஜாஜி

ராவணன் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னான்: ''சீதையே! தாபச வேஷம் பூண்ட ஒரு பொய்யனைக் கட்டிக் கொண்டு நீ என்னென்னவோ பேசுகிறாய்! உன் பேரில் எனக்குள்ள பிரியத்தை நான் விட்டுவிட முடியவில்லை. உன் பேச்சுக்களைக் கேட்டு எனக்கு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டேன். உன் பேரில் எனக்கு ஏற்பட்டிருக்கும் பிரியமே உன்னைக் காத்தது. இல்லையேல் நீ இப்போது மாண்டிருப்பாய். நான் உனக்கிட்ட தவணையில் இன்னும் இரண்டு மாத காலமே இருக்கிறது. அதற்குள் நீ உன் மனத்தைத் திருத்திக் கொள். என் மனைவியாகி என் படுக்கையறைக்கு வருவாய். அதற்கு இஷ்டமில்லாவிடில் என் சமையல் சாலைக்கு அனுப்பப்படுவாய். அங்கே என் வேலைக்காரர்கள் உன் உடலை வெட்டித் திருத்திப் பலகாரமாகச் செய்வார்கள். அறிவாய்!'' என்றான்.

அரக்கர்கள் உணவில் மானிட மாமிசம் சேரும் என்பது பிரசித்தம். ஆனபடியால் ராவணனுடைய இந்த மிரட்டல் வெறும் முரட்டுப் பாஷையல்ல, நிஜமாகவே நடக்கக் கூடிய நிகழ்ச்சியைப் பற்றிய எச்சரிக்கை.

ஆயினும் சீதை மிகத் தைரியமாக அவனுக்குச் சொன்னாள்:

''ஐயோ! யாரும் இல்லையா உனக்கு, நல்ல உபதேசம் சொல்ல? இந்தப் பாவத்திலிருந்து உன்னைத் தப்புவித்து நல்வழியில் உன்னைச் செலுத்தும் நண்பர்கள் யாரையுமே நீ பெறவில்லையா? நீ ராமனுடைய தண்டனையிலிருந்து தப்பப் போவதில்லை. என்ன எண்ணி இந்தப் பாவத்தில் புகுந்து வருகிறாய்? காட்டு யானையைப் போன்ற ராமனுடைய விரோதத்தை முயலைப் போன்ற நீ சம்பாதித்தாய். அவன் பக்கத்தில் இல்லாத சமயம் பார்த்து என்னைத் திருடி வந்த அற்பனே, உனக்கு வெட்கம் இல்லையா? உன்னுடைய நாசம் நிச்சயம். விதியே உன்னை இவ்வாறு செய்யச் செய்திருக்கிறது. குபேரனுக்குத் தம்பியாகிய நீ, சூரன் என்று பெயர் பெற்றவனாகிய நீ, சதுரங்க சேனையுடைய நீ, ஏன் இந்த நீசக் காரியத்தை நீச வழியில் செய்தாய்?''

இவ்வாறு சீதை சொன்னதைக் கேட்ட ராவணன் கண்களை உருட்டிப் பயங்கரப் பார்வையோடு சீதையைப் பார்த்துப் பாம்பைப்போல் சீறினான்.

ராவணனுடைய கோபம் வர வர அதிகரித்ததைப் பார்த்து அங்கிருந்த அவனுடைய இளைய மனைவி தான்யமாலி என்பவள் பக்கத்தில் வந்து அரக்கனைத் தழுவி, ''அரசனே! உம்மை விரும்பாத இந்த அற்ப மானுட ஸ்திரீயைப் பற்றி ஏன் கஷ்டப்படுகிறீர்? இவளுக்கு உம்மை அடையும் பாக்கியமில்லை. அவ்வளவே. இவளுக்கு என்ன அழகு இருக்கிறது? இந்த அவலக்ஷணப் பூச்சியைப் பார்த்து ஏன் மோகித்து அலைகிறீர்? போகலாம், வாரும். நாம் சந்தோஷமாக விளையாடலாம்'' என்று அவனை மிகப் பிரியமாக இழுத்துக் கொண்டு போய் விட்டாள். அரக்கனும் சிரித்துக் கொண்டு அவளுடன் சென்றான்.



காவல் அரக்கிகளுக்கு "இவளை எப்படியாவது நீங்கள் வழிக்குக் கொண்டு வர வேண்டும்!" என்று உத்தரவிட்டு, பூமி அதிரத் தன் பரிவாரத்துடன் ராவணன் அசோக வனத்தை விட்டுப் போய் விட்டான். அவன் போனவுடன் ராட்சஸிகள் சீதையைச் சுற்றிக் கொண்டார்கள். ராவணன் முன் தைரியமாக இருந்த ஜானகி பயங்கர வடிவங்களான இந்த அரக்கிகள் தன்னைச் சுற்றி நின்று பேசுவதைக் கண்டு நடுங்கினாள்.

"உயர்ந்த குலத்தில் பிறந்து உலகம் புகழும் வீரனான ராவணன் உன்னை இவ்வளவு விரும்பும் போது நீ இல்லையென்று சொல்வது? மூடப் பெண்ணே! ராவணனை யார் என்று எண்ணுகிறாய்? பிரம்மாவினுடைய வம்சத்தில் நேராகப் பிறந்தவன் என்று தெரிந்து கொள். பிரம்மாவின் புத்திரனான புலஸ்த்ய பிரஜாபதியினுடைய சொந்தப் பேரன் ராவணேசுவரன். அநேக யுத்தங்களில் சத்துருக்களை யெல்லாம் வென்று புகழ்பெற்ற வீரன். இவனையா நீ புத்தியில்லாமல் அலட்சியம் செய்கிறாய்?" என்றாள் ஒருத்தி.

"கர்வப்பட்டுக் கெட்டுப் போகாதே! விச்ரவஸ் ரிஷியின் குமாரன் ராவணன். யாரோ என்று எண்ண வேண்டாம். அவனை நீ விரும்பிச் சந்தோஷமாயிரு. இவ்வளவு அவன் வேண்டிக் கொள்ள நீ மாட்டேன் என்பதா?" என்றாள் மற்றொருத்தி.

"தேவர்களை யெல்லாம் யுத்தம் செய்து துரத்தியடித்து ஜயமடைந்த நம்முடைய ராக்ஷசேசுவரன் உன்னை 'வா' என்கிறான். அவனுக்கு நீ மனைவியாகத்தான் போக வேண்டும். ஏழைப் பெண்ணே, இல்லா விட்டால் பிழைக்க மாட்டாய்!" என்றாள் இன்னொருத்தி.

"தன் மற்ற மனைவிகளையெல்லாம் உதாசீனம் செய்து உனக்கு அப்புறம்



அவர்கள் என்று உன்னை ராவணன் விரும்புகிறான். மிக உத்தம ஸ்திரீகளையெல்லாம் விட்டு நீதான் அழகி என்று உன்னிடம் அரசன் வந்து பிரார்த்திக்கிறான். நீயே பட்டமகிஷியாய் இரு என்று உனக்கு வாக்கு அளிக்கிறான். நீ ஏன் மூர்க்கத்தனம் செய்கிறாய்?'' என்றாள் மற்றொருத்தி.

''ராவணேசுவரனுக்குச் சமம் உலகத்தில் வேறொருவர் உண்டா? இது உனக்குத் தெரியவில்லையே! தானாக நல்ல பாக்கியம் வந்து உன்னை வேண்டுகிறது. நீ வேண்டாம் என்கிறாய்! உன் மடத்தனத்தை என்னென்று சொல்வது!'' என்றாள் வேறொருத்தி.

''தேவர்களும், சூரியனும், வாயுவும்கூடப் பயப்படும் ராக்ஷசேந்திரன் வந்து உன்னை வரிக்கிறான். அவனுக்குப் பிரிய பாரியையாக இருக்கும் அதிர்ஷ்டம் உனக்கு வந்திருக்கிறது. கர்வம் கொண்டு ஏமாந்து போகாதே! வந்த பாக்கியத்தை வேண்டாம் என்று தள்ளாதே!'' என்றாள் ஒருத்தி.

''நாம் சொல்ல வேண்டியதைச் சொன்னோம். இனி உன் இஷ்டம் நீ ஒப்புக்கொள்ளாவிட்டால் நீ சாக வேண்டியதுதான்'' என்றாள் இன்னொருத்தி.

68. புத்திமதாம் வரிஷ்டம்

தனியாகச் சிறை வைக்கப்பட்ட ஒரு ஸ்திரீ எவ்வளவு தைரியசாலியாக இருந்தாலும், எவ்வளவு இடமான உறுதி கொண்டவளாக இருந்தாலும் பல நாள் சிறையில் வைக்கப்பட்டு வாடி வதங்கிப் போனால், மனத் தாழ்ச்சி அடைந்து போவதில் ஏதொரு வியப்புமில்லை.

தன்னைக் காக்க வேண்டியவர்கள் வருவார்கள் வருவார்கள் என்று பல மாதங்கள் எதிர்பார்த்தாள். ராமனும் வரவில்லை. லக்ஷ்மணனும் வரவில்லை. மனமுடைந்து நின்றவளுக்குத் தைரியம் சொல்லுவதற்காக யாரும் வரவில்லை. ஏங்கி ஏங்கி மிகக் கஷ்டத்துடன் உயிரை வைத்துக் கொண்டிருந்தாள்.

ராக்ஷஸிகள் பேச ஆரம்பித்தார்கள்:

''நாங்கள் சொல்வதைக் கேட்க மாட்டாயா? உன் ஜாதி மனுஷ்ய ஜாதி. உனக்குப் புத்தியில்லை. ஒரு அற்ப மனிதனையே கட்டிக் கொண்டு அழுகிறாய். உனக்குத் தகுந்த அந்தப்புரம் ராவணேசுவரனுடைய அந்தப்புரம். எல்லாச் சுகங்களையும் அடையக்கூடிய இடம். அதை வேண்டாம் என்று தள்ளிவிட்டு உபயோகமற்ற புருஷனைப் பற்றியே தியானித்துக் கொண்டிருக்கிறாய். ஊரிலிருந்து துரத்தப்பட்ட துரதிர்ஷ்ட மனிதன் ஒருவனிடம் உனக்கு ஏன் இவ்வளவு பிரியம்? அவனை ஒரு நாளும் நீ அடைய மாட்டாய். ராவணன் சொல்வதைக் கேட்டுச் சுகத்தை அடை'' என்றார்கள்.

இதைக் கேட்ட சீதை கண்ணீர் விட்டு அழுதாள். ''மகா பாபமான வார்த்தைகளைச் சொல்லுகிறீர்கள். நான் ஒருநாளும் நீங்கள் சொல்வதைச் செய்ய முடியாது. ராமன் ஏழை என்றும் ஊரிலிருந்து துரத்தப்பட்டவன் என்றும் சொல்லுகிறீர்கள். அதுவெல்லாம் எனக்குத் தெரியும். இந்தக் காரணங்களைக் கொண்டு புருஷனை மனைவி விட்டு விடுவது மானுட வழக்கமல்ல. ராக்ஷசேசுவரன் ஒரு மானுடப் பெண்ணை விரும்பலாகாது. மானுட ஸ்திரீ எப்படி ராக்ஷசனுக்கு மனைவியாக முடியும்? சூரியனைச் சூரியனுடைய பிரகாசம் தொடர்ந்து நிற்பது போல்தான், நான் மணந்த ராமனைப் பற்றி நிற்கிறேன். சசிதேவி இந்திரனைப் பற்றி நிற்பது போல், வசிஷ்ட முனிவரை அருந்ததி பற்றி நிற்பது போல், நான் ராகவனைப் பற்றி நிற்கிறேன்'' என்றாள்.

இதைக் கேட்ட ராக்ஷஸிகள் இனி இவளிடம் சாந்தமாகப் பேசிப் பயனில்லை என்று, ''இவளைத் தின்று விடுவதே நலம்'' என்றார்கள்.

ஒருத்தி, ''எனக்கு மசக்கை. இவள் மார்பைக் கிழித்து இவளுடைய இதயத்தை நாளத்துடன் இழுத்தெடுத்துத் தின்ன வேண்டும் என்றிருக்கிறது'' என்றாள்.

மற்றொருத்தி, ''இவளைக் கழுத்தைப் பிசைந்து கொன்று விட்டு, துக்கத்தால் செத்துப் போனாள் என்று ராவணனுக்குச் சொல்லி விடுவோம். வீணாக அரசன் இவளை விரும்பித் துயரப்பட்டுக் கொண்டிருக்கிறான். 'செத்துப் போனாள்' என்று தெரிந்தால் பிறகு நம்முடைய அரசன் சுகமாக இவளை நினைக்காமல் தூங்குவான்'' என்றாள்.

''இவளுடைய கல்லீரலும் பிலீகமும் மிக ருசியாயிருக்கும்'' என்றாள் மற்றொருத்தி.

இன்னொருத்தி, ''இவளைக் கொன்று எல்லாரும் உட்கார்ந்து சந்தோஷமாகப் பங்கிட்டுக் கொண்டு சாப்பிட்டுத் தீர்ப்போம். வியஞ்சனங்களைக் கொண்டுவாருங்கள். கள்ளைக் கொண்டு வாருங்கள். இவளைத் தின்று விட்டுக் கள்ளும் குடித்துவிட்டு நிகும்பிலாதேவி கோயிலில் கூத்தாடுவோம்'' என்றாள். (தொடரும்)

விளங்கும் விஞ்ஞானம்

விண்வெளியில் வெற்றிடம்

சூரியனைப் பத்தடி விட்டமுள்ள ஒரு பந்தாகக் உருவகப்படுத்திக் கொள்ளுங்கள். எண்ணாயிரம் மைல்கள் ஓர் அங்குலத்துக்குச் சமம் என்ற விகிதத்தில் கணக்குப் போட்டால் சூரியன் பத்தடி குறுக்களவு உள்ளதாகிவிடும். இப்போது கிரகங்களைக் காண நடப்போம்.

சூரியனிலிருந்து கால் மைல் தூரத்திலேயே பூமியை அடைகிறோம். அது ஒரு திராட்சைப் பழம் அளவுள்ளதாக இருக்கிறது. வழியில் புதனையும் (Mercury) சுக்கிரனையும் (Venus) கடந்துதான் வந்திருக்கிறோம். பூமியிலிருந்து ஒரு கெஜ தூரத்தில் சந்திரன் காணப்படுகிறது. பூமியை அது சுற்றி வந்து கொண்டிருக்கிறது. திராட்சைக் கொட்டை அளவினதாக உள்ளது. இன்னும் நூறு கெஜ தூரம் போனால் செவ்வாய்க் கிரகத்தில் அடியெடுத்து (Mars) வைக்கிறோம். ஆனால், வியாழனை (Jupiter) அடைவதற்குள் நாம் கிட்டத்தட்ட ஒரு மைல் தூரம் நடந்திருப்போம். எல்லாவற்றையும் விடப் பெரிய கிரகமான வியாழனின் குறுக்களவு ஓர் அடி.

இதன் பிறகு சனி (Saturn யுரேனஸ், நெப்ட்யூன் ஆகிய கிரகங்கள் ஒன்றைவிட ஒன்று சிறியவையாகக் காணப்படுகின்றன. எல்லாவற்றையும் விட வெகு தூரத்தில் உள்ள புளுட்டோ ஒரு கோலிக் குண்டு அளவினதாகத்தான் இருக்கிறது. புளுட்டோ சூரியனிடமிருந்து ஏழு மைல் தூரத்தில் இருக்கிறது. அதன் பிறகு இதே விகிதாசாரத்தில் நோக்கினால் (அதாவது, சூரியனைப் பத்தடி விட்டமுள்ளதாய் உருவகப்படுத்திய நிலையில்) சூரிய மண்டலத்துக்கு அப்பால் வானவெளியில் இன்னொரு நட்சத்திரம் ஐம்பதாயிரம் மைல்களுக்கு அப்பால்தான் இருக்கிறது. இடையில் வேறு ஒன்றுமே கிடையாது.

ஆகக்கூடி, விண்வெளியில் வெட்டவெளி ஏராளம், ஏராளம்.

இந்த வெட்டவெளியில் எங்கேயாவது கெட்டுப் போய்விடாமல் கிரகங்கள் நமது திருஷ்டியில் தென்படக் காரணம், கிரகங்கள் அனைத்துமே ஏறத்தாழ ஒரே மட்டத்தில் சூரியனைச் சதா சுற்றி வருவதுதான். ஆகவே எல்லையற்ற ஆகாயத்தில் சூரிய சந்திரர்கள் எந்தப் பாதையைப் பின்பற்றுகின்றனவோ அதே பாதையை யொட்டி கிரகங்களும் காணப்படுகின்றன.

பெரும்பாலான கிரகங்களுக்குச் சந்திரன்கள் உள்ளன. வியாழனுக்குப் பன்னிரண்டு சந்திரன்கள் — இவற்றில் சில நமது சந்திரனை விடப் பெரியவை. நமது சந்திரனின் விட்டம் இரண்டாயிரம் மைல்கள் (ஆரம்பத்தில் சொன்ன உருவகக் கணக்கு அல்ல; இனி உண்மைக் கணக்குத்தான்). செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி வரும் இரு மிகச் சிறிய சந்திரன்கள் பத்து மைல் குறுக்களவே உள்ள சிறு பாறைகள்தாம்.

செவ்வாய்க்கும் வியாழனுக்கும் மத்தியில் இடைக்கச்சுப் போன்ற ஒரு நீண்ட அமைப்பில் ஆயிரக் கணக்கான பாறைகள் உள்ளன. இவையும் மற்ற கிரகங்களைப் போலவே சூரியனைச் சுற்றுகின்றன. சில ஐந்நூறு மைல் விட்டம் உடையவை. மற்றவை மிகச் சிறியவை. இவை யெல்லாம் சேர்ந்து ஒரு காலத்தில் ஒரே கிரகமாக இருந்திருக்க வேண்டும் என்றும் ஏதோ காரணத்தால் இக்கிரகம் வெடித்து இப்படிப் பல துகள்களாகச் சிதறி விட்டது என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.


இவற்றில் ஒரு சிறிய துகள் எப்போதாவது ஒரு முறை பூமியின் ஆகர்ஷண சக்திக்கு ஈடு கொடுக்க முடியாமல் தன் பாதையிலிருந்து விலகிப் பூமி நோக்கி ஈர்க்கப்பட்டு எரிநட்சத்திரமாக விழுகிறது.

இவை தவிர சுமார் 120,000 வால் நட்சத்திரங்கள் உள்ளன (Comets). இவை கிரகங்களைப் போல் சூரியனைச் சுற்றி வருபவையே. ஆயின் இவற்றின் நீள் வட்டப் பாதைகள் மிக மிக நீளமானவை. ஒரு முறை சூரியனைச் சுற்றி வரச் சராசரியில் இவற்றுக்கு 40,000 ஆண்டுகள் ஆகின்றன என்றால், இவற்றின் பாதைகள் எவ்வளவு நீளம் என்பது புரியும்.

பனிக்கட்டியால் இறுக்கமாக ஒன்று சேர்த்து இணைக்கப்பட்ட பாறைகளே ஒரு வால்நட்சத்திரமாகிறது. இதன் வால் 100,000,000 மைல் நீளமுள்ளதாகக்கூட இருக்கும். வாயுவே வால்போல் நமக்குத் தோற்றம் அளிக்கிறது. இந்த வாயு அடர்த்தியாக இராமல் மிகப் பரவலாய் உள்ளது. இதனால் ஒரோரு சமயம் பூமி இந்த வாலின் ஊடே போக நேர்ந்தாலும் நமக்கு வித்தியாசமாக ஏதும் தெரியாது. சில ஆண்டுகளுக்கு முன்னால் இவ்விதமே நடந்தது!

— மைக்கேல் ஆர்னல்டு

கிரகங்களுக்குச் செல்ல அமெரிக்கா நான்கு நாவியக்கு விண்வெளிக் கப்பல்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.



சிதம்பர ரகசியம்

கதை: கோமதிசுவாமிநாதன்

சித்திரம்: ராஜு

14





பங்களாவில்....
ரங்கதுரையின் அறையில்....
சமையல் அறையில்....
வேறு ஊரில் ஓர் இடம்....
தொடரும்

அத்தியாயம் 7



காணிக்கை

ஆர்வி

நேற்று வரையிலும் — அதாவது ஹைஸ்கூல் படிப்பு முடியும் வரையிலும் — பாஸ்கரன் இந்த மன்னி அன்னமிட்டு வளர்ந்தவன். தாய்க்குத் தாயாக அத்தனை பிரியத்தோடும் பரிவோடும் யார் இருந்திருக்கப் போகிறார்கள்? அண்ணாவிடம் அவன் நெருங்க மாட்டான். சலுகையெல்லாம் மன்னியிடந்தான். பத்தாவது வகுப்பில் ஆங்கில பாடத்தில் முதலாவதாக வர வேண்டியவன் மூன்றாவது இடத்துக்கு வந்து விட்டான் பாஸ்கரன். அண்ணா அவனிடம் பேசவேயில்லை. மன்னி சாப்பிட இலையைப் போட்டாள்.

''இன்னொரு இலை எதுக்கு?'' என்றார் பட்டாபி.

''உங்க தம்பி பாஸ்கருக்குத்தான்!''

''உஹ்ஹும். அப்ப இந்த இலையை எடுத்துடு. நான் சாப்பிடல்லே!'' என்று என்ன சொல்லியும் கேளாமல் அவர் பள்ளிக்கூடம் போய் விட்டார். அன்றைக்குப் பாஸ்கரனும் சாப்பிடவில்லை; மன்னியும் சாப்பிடவில்லை. மத்தியானம் சாமர்த்தியமாக மன்னி அவருக்குச் சாப்பாட்டைக் கொடுத்தனுப்பி விட்டாள். சாப்பிடாமல் அதைத் திருப்பியனுப்ப முடியாது. அப்புறம் மூன்று மணிக்கு மேல் பாஸ்கரனைக் கொல்லைக் கட்டில் உட்கார வைத்துச் சாதம் போட்ட பிறகுதான் அவள் போய்ச் சாப்பிட்டாள். மன்னி அப்படிப்பட்ட தெய்வம். அவள் கால் தூசி தன் சிரசில் படாவிட்டால் எந்த நாட்டுக்குப் போனாலும் அவனால் எப்படிச் சந்தோஷமாய் இருக்க முடியும்? அவள் அவனை ஊட்டி வளர்த்தாள். அவர் ஊக்கி உருவாக்கினார். அப்படி அவர்கள் அன்போடும் அக்கறையோடும் வளர்க்காமல் போயிருந்தால், இன்றைக்கு இல்லினாய்ஸ் பல்கலைக் கழக உபகாரச் சம்பளம் எங்கே அவனுக்குக் கிடைத்திருக்கப் போகிறது? இவர்களை விட்டுச் சென்னைக்குப் போய் ஆறேழு வருஷங்களாகியும் பாஸ்கரனுக்கு அண்ணாவிடமிருந்த அச்சம் போகவில்லை. முன்பு முகம் பார்த்துக்கூடப் பேசமாட்டான்; இப்பொழுது அப்படியில்லை. என்ன வேண்டுமானாலும் தாராளமாக, தைரியமாகப் பேசுவான். இருந்தாலும் இன்னமும் உட்கார்ந்து பேசுகிற அளவுக்கு அவன் வரவில்லை. உட்கார மாட்டான் என்று அவருக்குத் தெரியும்; அதனால் அவர் வற்புறுத்துவதுமில்லை.

''அண்ணாதானே, உக்கார்ந்து பேசலாம். உனக்கென்ன வயசாகல்லியா? இந்த வீட்டுக்கு வந்த புதிசிலே நானும் தான் எதிரிலே நின்னுகூடப் பேசமாட்டேன். இப்ப என்னைப் பாரு. எழுந்திருக்கக்கூட முடியறதில்லே. மதிப்பு, மரியாதையெல்லாம் மனசிலே இருந்தால் போதும். எத்தனை நாழி நிக்க முடியும் — கால் கடுக்க?'' என்று இன்றைக்கும் அவள் பாஸ்கரனுக்குப் பரிந்து கொண்டு சொன்னாள்.



''உன் மன்னி அப்புறம் எங்கிட்டே சண்டைக்கு வருவாள். உட்கார்ந்துதான் பேசேன்!'' என்றார் பட்டாபி, தம்பியிடம்.

அப்புறம்தான் பாஸ்கரன் உட்கார்ந்தான். எப்படித் தன் பெயரைக் கல்லூரியில் சிபாரிசு செய்தார்கள், எப்படி அமெரிக்காவில் தன்னைத் தேர்ந்தெடுத்து அழைத்தார்கள், எத்தனை மாதங்கள் அங்கே பயில வேண்டும், எப்போது திரும்பி வரலாம் என்றெல்லாம் மன்னிக்கு விவரமாக எடுத்துச் சொன்னான். அண்ணாவுக்கும் மன்னிக்கும் அத்தனை சந்தோஷம்; பெருமை. அதற்கப்புறம் தான் மாமா நாகநாதன் வந்து விட்டுப் போனது பற்றியும் அவருக்குப் பதில் சொல்லியனுப்பியதைப் பற்றியும் மெதுவாகச் சொன்னான்.

''நல்ல வேலை செய்தே? எல்லாம் கிடக்க இப்பக் கல்யாணத்துக்குத்தான் அவசரம் வந்துட்டுதாக்கும். நாகலக்ஷ்மி மாமிக்குத்தான் நம்மையெல்லாம் கண்டால் இளப்பமாச்சே. இப்ப மட்டும் தேவலையாமோ? சுலபமா அடிச்சிண்டு போயிடலாம் என்கிற எண்ணம். நாளைக்கே நீ அமெரிக்காவுக்குப் போயிட்டு வந்தா, நான் நீன்னு எத்தனையோ பேர் வருவா. இதைக் காட்டிலும் சௌகரியமான இடமும் கிடைக்கும்; பெண்ணும் கிடைப்பாள். பேசாமே போ சொல்றேன். ஏன்னா, நீங்க என்ன நினைக்கிறேள்? நான் சொல்றது சரிதானே — என்னவோ நீங்களே சிரிக்கிறேளே!'' என்றாள் மன்னி.

'' நீ பேசறதைப் பார்த்தால் சிரிப்பு வருது. அப்படி இருக்கு உன் பேச்சு. வேறே பொண் யாரையாவது மனசிலே நினைச்சிண்டிருக்கியோ?'' என்றார் பட்டாபி.

'' நான் எங்கே போவேன் அதுக்கு? நம்ம பாஸ்கருக்குன்னு வரப் போறவள் இனிமே புதிசாப் பிறக்கப் போறதில்லே. ஏற்கனவே பிறந்துதான் இருப்பாள். அதனாலே அப்படி என்ன அவசரம் வந்துட்டுதுன்னுதான் நானும் கேக்கறேன்! என்னமோ இதனாலே உறவே விட்டுப் போயிடுமாமே — இப்ப என்ன இந்த உறவாலே பெரிய சுகத்தையும் சௌகரியத்தையும் நாம கண்டுட்டோம்?''

பாஸ்கரனுக்கு இந்தப் பேச்சு பெரிய தெம்பைக் கொடுத்தது. அங்கிருந்த நாட்கள் எல்லாம் சோம்பேறித்தனமாக இருந்தாலும் சொர்க்கத்தில் இருப்பது போல் இருந்தது. வேளா வேளைக்கு வகை வகையாகச் சாப்பிடுவதும் கோயிலும் குளமும் கடைத் தெருவுமாய்ச் சுற்றுவதுமாகக் கழித்தான். மூன்றும் நாள் கோயிலுக்குப் போய் விட்டு வீட்டுக்கு வந்தபோது யாரோ ஒரு பெண் தன்னைக் கண்டதும் — வெளியோரமாக நின்று மன்னியிடம் பேசிக் கொண்டிருந்தவள் — பேச்சை முடித்துக் கொண்டு அவசரமாய்ப் புறப்பட்டுப் போனாள்.

அடேயப்பா, எத்தனை நீளமான பெரிய விழிகள்! இந்த மாதிரி ஒரு பெண்ணை நினைத்துக் கொண்டுதான் மன்னி அப்படிப் பேசினாளோ என்றுகூட நினைத்துக் கொண்டான்.

'' இப்பப் போனாளே, இவளைக் கோயிலிலும் குளத்திலும் அடிக்கடி

பார்க்கிறேனே, யார் இவள்?'' என்று அவன் மன்னியைக் கேட்டான்.

''உங்க அண்ணுகிட்டே படிச்சவள் தான். இப்பக் காலேஜிலே படிக்கிறள், ஹாஸ்டல்லே இருந்துண்டு. லீவுன்னு வந்திருக்காள். நீ கேட்டாப்பலேதான் அவளும் இப்பக் கேட்டாள். உனக்குப் பொழுது போகாதது மாதிரிதான் அவளும் கிடந்து தவிக்கிறள்!''

''பின்னே என்னைக் கண்டதும் ஏன் போயிட்டாள்?''

மன்னி சிரித்துக்கொண்டே, ''வரட்டும்; கேட்டுச் சொல்றேன்!'' என்றாள்.

அப்புறம் அவன் ஊருக்குப் புறப்படும் வரையில் அவளை இரண்டு மூன்று முறை பார்த்தானே தவிர, அவள் அந்த வீட்டுக்கு வரவில்லை. வழியில் தென்பட்டவள் வீட்டுக்கே வந்திருக்கலாம். ஏனே வரவில்லை!

* * *

சென்னைக்குத் திரும்பியதிலிருந்தே பாஸ்கரனுக்கு ஒய்ச்சல் ஒழிவில்லை. காலையில் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கு முன்னுலேயே யாராவது நண்பர்கள் வருவார்கள். காரிலேயோ ஸ்கூட்டரிலேயோ அழைத்துக் கொண்டு போய் விடுவார்கள். சாப்பிட வருகிற போதும் இதே கதைதான். கூடவே யாராவது வருவார்கள்; சாப்பிட்டு விட்டுப் போனல் திரும்பி வருகிற போது தான் நிச்சயம். நடுநிசிக்கு முன்னல் வந்தான் என்ற பேச்சேயில்லை. அப்படி ஒரு மூச்சாக அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தான். பார்வதிக்கு எரிச்சலாகக் கூட இருந்தது. நாலு வார்த்தை பேசக்கூட முடியாமல் இப்படியா ஒருவன் தலை தெறிக்க ஓடிய படியே இருப்பான்?

பயணத்துக்கான ஆயத்தங்கள் செய்வதும் அது சம்பந்தமாக யார் யாரையெல்லாமோ போய்ப் பார்ப்பதும் ஆலோசனைகள் கேட்பதுமாக இருந்த பாஸ்கரனுக்குத் தன் தாயாரின் வேதனையைப் பற்றியே தெரியாது. தில்லியிலிருந்து அவன் புறப்பட்டு வரவேண்டிய நாளைக் குறிப்பிட்டுக் கடிதம் வந்த அன்றைக்குத்தான் அவன் அம்மாவிடம் சிறிது நேரம் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

''வருகிற மூணும் தேதி — அதாவது சரியாக ஒரு மாசம்தான் இருக்கு, நான் புறப்பட. இங்கிருந்து தில்லிக்குப் போய், அப்புறம் அங்கிருந்து போகணுமாம்!'' என்றான் பாஸ்கரன்.

பார்வதியின் முகத்தில் அவன் எதிர்பார்த்த மகிழ்ச்சியைக் காணுதது அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

''என்னம்மா இது, என்னமோபோல இருக்கே?''

''அது சரி; உனக்கு மாமா விட்டுச் சமாசாரம் ஏதாவது காதிலே விழுந்ததோ?'' என்று கேட்டாள் பார்வதி.

ஏதாவது விபரீதமாக நடந்து விட்டதோ என்று பாஸ்கரனுக்குத் திகைப்பாக இருந்தது. ''எனக்கு ஒண்ணும் தெரியாதே. எதைப் பத்தி?'' என்று சிறிது கலவரத்தோடு விசாரித்தான்.

''அஜிதாவுக்கு வேறே இடம் பார்த்தாச்சாம். அநேகமாய் நிச்சயமானது போலத்தானும்!''

''ஓகோ... அப்படியா?''

''என்ன அப்படியான்னு கேக்கறே? உனக்கு இதிலே வருத்தமில்லேயோ?''

''எனக்கு என்ன வருத்தம்? நிச்சயமானது வரையிலே சந்தோஷப்பட வேண்டியதுதானே?''

''ரொம்பப் பெரிய இடமாம்!''

''தேவலையே. அதுக்காக வருத்தப் படச் சொல்றியா?''

''அவாளே லட்ச ரூபாய்க்குச் செய்யப் போறளாம்! இவாளுக்கு ஒரு பைசா செலவு இல்லையாம்.''

''பேஷ், பேஷ்!''

பார்வதிக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

''என்ன பேஷ் வேண்டிக் கிடக்கு? நீ சந்தோஷப்படறே. எனக்கு என்னமோ வருத்தமாய் இருக்கு. இதைக் கேட்டதிலேயிருந்து வயத்தெரிச்சலாக் கூட இருக்கு. வலிய வந்த லக்ஷ்மியைக் காலாலே உதைச்சாளும். பேஷ், பேஷ்னு பெரிசா ரசிக்கிறன்!''

''எனக்கு என்னமோ சந்தோஷமாத்தான் இருக்கு!''

''நீயே சந்தோஷப்பட்டுண்டு இரு; நான் போறேன்!''

''யாரு பையன், உனக்கு யாரு சொன்னு, அதெல்லாம் சொல்லாமல் போறியே. அதையெல்லாம் கேட்டு இன்னும் கொஞ்சம் சந்தோஷப்படு வேனே இல்லேயோ!''

''எல்லாம் நாகலக்ஷ்மியேதான் வந்து சொன்னுள். இனி இந்த வீட்டுப் பக்கம் எங்கே வரப் போறுள்னு நெனச்சேன். இதுக்காகவே மெனக்கெட்டு வந்து சொல்லிட்டுப் போனுள். நல்ல வேளையாய்ப் போச்சாம், நாமா வேண்டாம்னு சொன்னது. இல்லாட்டா இத்தனை பெரிய இடம் கிடைக்காமல் போயிருக்குமாம். பையன் பம்பாயாம். அண்ணுவுக்கு வேண்டியவராம், பையனேட அப்பா. பெரிய கோடீசுவரராம். மில்லாம், பங்காம், பெரிய பிஸினெஸ்ஸாம். பெருமை பிடிபடல்லே நாகலக்ஷ்மிக்கு. சித்த நாழியிலே கொட்டித்

தீர்த்துட்டுப் போயிட்டா. அவன் பேரு முரளி போலிருக்கு. இவ எடுத்து வளர்த்தது போல அவன் பேரை ஆயிரம் தடவை சொல்லிப்புட்டா. கல்யாணத்தை அப்புறமா வச்சுக்கலாம்னு கூட எல்லாரும் சொன்னுளாம். முரளியோட அப்பா உடனே வச்சுண்டுடலாம்னு டிரங்கிலே கூப்பிட்டுச் சொல்லிப்புட்டாராம். விமானத்திலே வந்து பார்த்தாராம்; அவருக்கு அஜிதாவை ரொம்பப் பிடிச்சுப் போச்சாம். பெண்ணையும் மாப்பிள்ளையையும் கல்யாணம் ஆனவுடனே அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் ஹனிமூனுக்கு அனுப்பறேன்னு சொல்லிட்டாராம். இன்னும் என்னென்னவோ சொன்னுள். எனக்குத் தான் திருப்பிச்சொல்லத் தெரியல்லே.''

''அதான் முக்கியமானதையெல்லாம் சொல்லிப்புட்டியே; இன்னும் என்ன சொல்லணும் ?''

''அவளுக்கு நேரமேயில்லியாம். இருந்தாலும் நாம எதிர்பார்த்திண்டு இருக்கப் போறமேன்னு சொல்லிட்டுப் போக வந்தாளாம்.''

''அது வேறயா? அஜிதாவுக்கு இத்தனை பெரிய அதிர்ஷ்டம் வர்றதுக்கு இருக்கிற போது நம்மகிட்டே வருத்தப் படுவானேன் ?''

''வருத்தம் எங்கே பட்டாள் ? பெருமையடிச்சிண்டுன்னு போருள்!''

''அப்படின்னு நீ எதுக்காக வருத்தப்படறே ?''

''அத்தனை அதிருஷ்டமான பெண்ணை நீ வேண்டாம்னு ஒரே தாண்டாத் தாண்டினியேன்னுதான் !''

''அவளைக் கல்யாணம் பண்ணிண்டா நான் அமெரிக்கா போக முடியாது. அமெரிக்கா போறதானுல் கல்யாணம் பண்ணிக்க முடியாது. இதுதான் இப்போது இருக்கிற நிலைமை. நீ ரெண்டுலே ஒண்ணுக்குத்தான் ஆசைப்படலாம். வீணு எதுக்காக மனசை அலட்டிக்கிறே ! ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொண்ணு. நடந்தது எல்லாம் நல்லதுக்குன்னு போவியா ? நடக்காததுக்கு விசாரப்படறியே!'' என்று சொல்லி விட்டுப் போனுன் பாஸ்கரன்.

பாஸ்கரனைப் பற்றி எல்லாரும் புகழ்ச்சியாகக் கொண்டாடியதைக் கேட்டுப் பார்வதிக்குப் பெருமையாக இருந்தாலும் அண்ணுவுடைய சம்பந்தம் இடைக்காமல் போனது அங்கலாய்ப்பாகவே இருந்தது. அது அவளுடைய சந்தோஷத்தைப் பாதியாகக் குறைத்து விட்டது. நாகலக்ஷ்மி சொன்னதில் எவ்வளவு தூரம் உண்மை இருந்ததோ என்னவோ, கல்யாண ஏற்பாடுகளெல்லாம் கற்பனைக்கும் எட்டாத அளவில் நடைபெற்று வந்தன. கல்யாணச் சம்பிரதாயங்களைக் கேட்கிற சாக்கில் பார்வதியை அழைத்து வரச் சொல்லி அங்கே நடைபெறும் தடபுடல் ஏற்பாடுகளைக் காட்டினுள் நாகலக்ஷ்மி. ஒரு பக்கம் வைரப் பரீட்சை நடப்பதென்ன, ஒரு பக்கம் புடவைகள் பார்ப்பது என்ன, இன்னெரு பக்கம் பந்தல் அலங்கார ஜோடனைகள் நடப்பதென்ன — நாகலக்ஷ்மி என்னவோ பட்டத்து மகாராணி அரசு செலுத்துவது போல் ஆக்கினை புரிவதைக் கண்டு, பார்வதி பிரமித்துப் போனுள். இவ்வளவு பெரிய திட்டத்தில் நடக்கப்போகும் கல்யாணத்துக்கு ஏற்றமாதிரி அவளுக்கு என்ன யோசனை சொல்லத் தெரியும்? சம்பிரதாயம் ஒன்று என்றால் நாகலக்ஷ்மியின் திட்டம் ஒன்பது மடங்காக இருக்கும் போது வாயைத் திறந்தாலே பைத்தியக் காரத்தனமாக இருக்கும் போலிருந்தது. பார்வதி வாயடைத்துப் போய், கடுகாகச் சிறுத்து நின்றதைக் கண்டு நாகலக்ஷ்மி மிடுக்கோடு உள்ளூற நகைத்துக் கொண்டாள்.

'இந்த நாகலக்ஷ்மியோடு சம்பந்தம் செய்து கொள்ள உனக்குத் துளித் தகுதியாவது இருக்கிறதா?' என்று பார்வதியிடம் பார்வைக்குப் பார்வை அவள் சவால் விடுவது போலிருந்தது.

மறு முறை அவளுக்கு அழைப்பு வந்த போது மாப்பிள்ளை வந்திருந்தான். மாப்பிள்ளையாவது மாப்பிள்ளை! ராஜகுமாரன் மாதிரி இருந்தான் அவன். அவனே உட்கார்ந்து பெண்ணுக்குச் செய்திருந்த நகைகளையும் தேர்ந்தெடுத்திருந்த புடவைத் துணிமணிகளையும் பார்த்து அபிப்பிராயம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கண்டு பார்வதி திகைத்தே போனுள்.

அஜிதாவும் நாகலக்ஷ்மியும் அவனோடு அட்டகாசமாய் உட்கார்ந்து ஜூடாக விவாதித்தது இன்னும் புதுமையாக இருந்தது.

பார்வதி ஓர் ஓரத்தில் உட்கார்ந்திருந்த போது அஜிதா தற்செயலாக அந்தப் பக்கம் வந்தவள், ''என்ன அத்தை, பாஸ்கரனைக் கண்ணிலேயே காணோம்?'' என்று கேட்டுக்கொண்டே போனுள்.

''அவனுக்கு நேரம் எங்கே இருக்கு? மூணும் தேதி புறப்படணும்னு அலைஞ்சிண்டிருக்கான்!'' என்று பின்னுலேயே போய்ச் சொன்னுள் பார்வதி.

அஜிதா நின்றுகூடப் பேசவில்லையே என்று பார்வதிக்குப் பெரும் குறை தான். இருந்தாலும் இவ்வளவு பேசி

யதே பெரிய சாஸனம் செய்து வைத்தது போல் இருந்தது.

மாப்பிள்ளை முரளியிடம் சமையற்காரி பற்றிப் பெருமையாகப் பேசின நாகலக்ஷ்மி பார்வதியை அறிமுகப்படுத்தாமலே இருந்து விட்டாள். தன்னை அவமானப்படுத்துவதற்காகவே கூப்பிட்டு அனுப்புகிறாள் என்று பிறகுதான் புரிந்தது பார்வதிக்கு. ஆனால் எந்தச் சமயத்துக்கு நினைவாக விட்டுப் போகாமல் கூப்பிட்டனுப்ப வேண்டுமோ, அப்பொழுது பேசாமல் இருந்து விடுவாள் என்று பார்வதி எதிர்பார்க்கவில்லை. நிச்சயதார்த்தத்தின் போது வரச் சொல்லவும் இல்லை; வண்டியனுப்பவும் இல்லை.

''ஒண்டியாகக் கிடந்து திண்டாடுகிறேனே, உங்க தங்கை வந்து எட்டிப் பார்த்தாளா? வேண்டாதபோதெல்லாம் வந்து நின்னாளே, சமயத்துக்கு வந்தாளா? யார் செய்த புண்ணியமோ, நாம அந்தச் சகதியிலே விழாமல் தப்பிச்சோம் !'' என்று தன் கணவரிடம் நிச்சயதார்த்தம் நடந்தபோது மறக்காமல் சொன்னாள் நாகலக்ஷ்மி.

''வண்டியனுப்பிச்சயோ ?''

''இவ்வளவு பெரிய காரியம் நடக்கிறச்சே, இதுதான் கவலை எனக்கு ! வண்டியை ஒவ்வொரு தடவையும் அனுப்பாட்டா என்ன, ஒரு டாக்ஸியை வச்சிண்டு வரப்படாதா ?''

'' தெரிஞ்சிருக்காது ; அதுதான் வரலை.''

'' விட்டுக் கொடுத்திடாதீங்கோ, அருமைத் தங்கைக்கு. ஊரே புடைபுடைச்சிருக்கு ; இவளுக்கு மட்டும் தெரியாமெ போயிட்டுதாக்கும். நானே மறந்திட்டதா இருக்கட்டும். இவளுக்கு வர்றதுக்குப் பாத்தியமில்லையோ? அத்தனையும் அருமை! வயித்தெரிச்சல்! இவளைத் தெரியாதா என்ன, எனக்கு!''

''அம்—மா! முரளி உங்கிட்டே என்னமோ கேட்டாராம். நீ வரப்போறதா அவர் உட்கார்ந்திருக்கார். நீ அப்பாகிட்டே சண்டை போட்டுண்டிருக்கே இங்கே!'' என்று சொல்லிக் கொண்டே அஜிதா அங்கே வந்தாள்.

''அதான் பார்த்துக்கோ. முகூர்த்தத்தை மூணும் தேதி வச்சுக்கணும்னு சொல்லணும். நடுவிலே அந்த அல்பத்தை நினைச்சதுலே அத்தனையும் மறந்து போயிட்டுது. இதோ, போய்ச் சொல்றேன்!'' என்று சொல்லி விட்டுப் போனாள் நாகலக்ஷ்மி.

''முகூர்த்தம் மூணும் தேதியாம். அதிலே என்ன விசேஷம் தெரியுமோ உங்களுக்கு?'' என்று அப்பாவைக் கேட்டாள் அஜிதா.

''தெரியாதே....''

''உங்களுக்குத் தெரியாது; ஆனா அம்மாவுக்குத் தெரியும். தெரிஞ்சுதானே சொல்றாள் வேணும்னு. அன்னிக்குத் தான் பாஸ்கரன் அமெரிக்காவுக்குப்புறப்படறான். அன்னிக்கே முகூர்த்தத்தை நடத்தணும்னு அம்மாவுக்கு வீம்பு !''

இதைக் கேட்டுக் கொண்டே திரும்பி வந்த நாகலக்ஷ்மி, ''அதேதான், வச்சுக்கறேன். ஏன், எனக்கு அப்படி வீம்பு இருக்கப்படாதா?'' என்று கேட்டாள்.

அஜிதாவின் கழுத்திலே மாங்கல்யம் ஏறிய அதே வேளையில் பாஸ்கரன் டில்லி விமானத்தில் ஏறிக் கொண்டிருந்தான். தனக்கு நிகர் யாருமில்லை என்று நாகலக்ஷ்மி கற்பனை விமானத்தில் பறந்து கொண்டிருந்தபோது பாஸ்கரன் 'காரவெல்' விமானத்தில் பறந்து கொண்டிருந்தான்.

அத்தியாயம் 8

காரவெல் விமானத்தில் சென்றபோது நிலத்தைச் சரிவரப் பார்க்கக் கூட விடாமல் அங்கங்கே மேகக் கூட்டங்கள் தடுத்தன. அஜிதாவைக் குறிப்பிட்டு அம்மா சொன்ன ஒரு விஷயம் அவன் மனத்தில் இன்னும் உறுத்திக் கொண்டேயிருந்தது.


'' அஜிதாவுக்குக் கிடைச்சிருக்கிற அத்தனை பெரிய அதிருஷ்டம் நமக்கு இல்லையோ, என்னமோ! அதுதான் நம் புத்தியைக் கலைச்சிட்டுது'' என்றாள்.

அவனுடைய அம்மாவின் வருத்தம் அவனுக்குப் புரிந்தது. அஜிதா தனக்கு மருமகளாக வராததற்காக ஒன்றும் அவள் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. பாஸ்கரன் அத்தனை பெரிய அதிருஷ்டக்காரனாக இருக்க மாட்டானோ என்றுதான் அவளுக்குக் கவலை.

''ஏம்மா — அதை இப்படி மாற்றியும் சொல்லிக்கலாமே ; என் அதிருஷ்டத்துக்கு அந்த அஜிதா கொடுத்து வைக்கவில்லை. நாளைக்கு நான் எப்படி இருக்கப் போறேனோ, அவள் எப்படி இருக்கப் போறாளோ — அதையெல்லாம் யார் கண்டது ?''

''எதையோ சொல்லித் தேற்றிக்க வேண்டியதுதான் !''

அஜிதாவை மணந்து கொள்ளத் தயங்கியது பெரிய பிசகாகத்தான் இருக்குமோ என்று இப்போது தோன்றிக்


ஸ்விஷ் கொண்டு ஷேவ் செய்து கொள்பவரை
ஒருக்காலும் தோற்கடிக்க
முடியாது.
Swish
STAINLESS
அதன் பாலிமர் பூச்சு கொண்ட
மல்டிஃபேஸெட் ஓரம் காரணமாக,
3 ஸ்விஷ் பிளேடுகள், 5 பிளேடுகளுக்குச்
சமமாக உழைக்கின்றன..

கொண்டேயிருந்தது. மாமாவிடமும் மாமியிடமும் இன்னும் சிறிது சாமர்த்தியமாகப் பேசி, சாதுரியமாக நடந்துகொண்டிருந்தால் அஜிதாவைத் தனக்காகக் காத்திருக்கும்படி அவனால் செய்திருக்க முடியும். ஏனோ அவன் அப்படிச் செய்யாமல் போனான்! தப்புத்தான் அது. அமெரிக்காவிலிருந்து படிப்பும் பயிற்சியும் முடிந்து திரும்பியதுமே, இந்த அஜிதாவும் தனக்குக் கிடைப்பதாய் இருந்தால், தன்னுடைய எதிர்காலம் எத்தனை பனிச்சென்று இருக்கும் என்று எண்ணிப் பார்த்தான். அது வீணாகி விட்டதே என்று அவனுக்கு வேதனையாக இருந்தது. இனி என்ன செய்ய முடியும்? அவளை மறந்துவிடுவது ஒன்றுதான் வழி.

அவனைப் போலவே அமெரிக்காவின் பல பகுதிகளுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு பல மாணவர்களும் மாணவிகளும் தில்லியில் வந்து கூடியிருந்தார்கள். அவர்களையெல்லாம் தனித்தனியே அறிமுகம் செய்து கொண்ட அவன், தன் வாழ்க்கையின் முக்கியமான திருப்புமுனை இது என்பதை உணர்ந்தான். அத்தனை பேரும் எங்கெங்கிருந்தோ வந்தவர்களாகத் தோன்றவில்லை; கூடப் பிறந்த சகோதர சகோதரிகள் மீண்டும் ஒன்றுகூடியிருப்பது போல் தோன்றினார்கள். பழைய உறவுகளெல்லாம் பொய்; இந்த உறவுதான் உண்மை என்பது போலப் பழகினார்கள்; ஜெட் விமானத்தில் ஏறிப் பயணத்தைத் தொடங்கினார்கள்.

அவனோடு இல்லினாய்ஸ் வரையில் கூடவே வந்தவன் ஹரிநாராயண் குப்தா. பாட்னா பகுதியைச் சேர்ந்த அவன் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். துருதுரு வென்ற கண்களும் குஞ்சம்போல் முன் நெற்றியில் வந்து விழும் கிராப்புமாக இருந்த அவன், பாலம் விமான நிலையத்திலேயே பாஸ்கரனோடு ஒட்டிக் கொண்டு விட்டான். எங்கே போனாலும் பாஸ்கரன் பின்னாலேயே போனான். இதை அவர்களோடு வந்திருந்த அனைவருமே கவனித்தார்கள். சிலர் இவர்களுடைய அந்நியோந்நியத்தைக் கண்டு வியந்தார்கள். சிலருக்கு இது பரிகாசமாகக் கூட இருந்தது. வந்திருந்த பெண்களில் ஒருத்தியான டாக்டர் மிஸ் சோபனாவுக்குப் பாஸ்கரனும் குப்தாவும் இணை பிரியாமல் இருந்ததும் நெருக்கமாகப் பழகியதும் என்ன காரணத்தாலோ பொறுக்கவில்லை. அவள் கொஞ்சம் குறும்புக்காரி. பார்ப்பதற்கும் மற்றப் பெண்களைவிட நன்றாக இருந்தாள்.

பாஸ்கரன் வீரசோழபுரத்துக்குப் போயிருந்த போது பல முறை சந்தித்த கல்லூரி மாணவியின் சாயலாக அவள் இருந்தாள். அங்க அமைப்புக்குப் பொருத்தமான ஆடைதான் புது மோஸ்தராக இருந்ததே தவிர, மற்றப்படி உருவம், உயரம், முகவெட்டு ஆகிய எல்லாவற்றிலும் அவர்களுக்குள் நிறைய ஒற்றுமை இருந்தது. மிஸ் சோபனா ஜோஷியைவிட அந்தக் கல்லூரி மாணவி இன்னும் கொஞ்சம் இளமையாக இருப்பாள். இதே பாணியில் அந்த மாணவியும் ஒப்பனை செய்துகொண்டால் அவளுக்கு அது எடுப்பாகவும் இருக்கலாம். அவ்வளவுதான் வேற்றுமை.

மிலான் நிலையத்தை விட்டு விமானம் புறப்பட்டபோது அந்த மிஸ் சோபனா ஜோஷி பாஸ்கரன் ஸீட்டுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். வீரசோழபுரத்துப் பெண்ணோடு அவளை ஒப்பிட்டுப் பார்த்த பாஸ்கரனுக்கு இது வியப்பாக இருந்தது.

மிஸ் சோபனா ஜோஷி அவனைப் பார்த்து மெல்லப் புன்னகை செய்தாள். பதிலுக்கு அவனும் புன்னகையை வரவழைத்துக் கொண்டான்.

''இது குப்தாவின் இடமாச்சே! நான் வந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்துக் கோபித்துக் கொள்வாரோ?'' என்று இனிய குரலில் கேட்டாள். ''உங்களிடமிருந்து உங்கள் நண்பனைப் பிரிக்கலாமோ நான்?''

''சே, சே! இதற்குப் போய் அவன் ஒரு நாளும் கோபித்துக் கொள்ளமாட்டான்!'' பாஸ்கரனும் அவளைப் போல் ஆங்கிலத்திலேயே பேசினான்.

''உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லையே!''


''அழகான பெண் வந்து இப்படிப் பக்கத்தில் உட்காருகிறேன் என்றால் எவனாவது ஆட்சேபிப்பானா? தாராளமாய், ஆனந்தமாய் உட்காரலாம்.''

இருவரும் பெரிய நகைச்சுவையை ரசித்தமாதிரி விழுந்து விழுந்து சிரித்தார்கள். பிறகு சற்று நேரத்துக்குள்ளே இருவரும் மிகவும் சகஜமாக, சந்தோஷமாகச் சிரித்துப் பேசத் தொடங்கிவிட்டார்கள். ஹரிநாராயண் குப்தா இவர்களையே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்துப் பாஸ்கரனுக்குப் பரிதாபமாக இருந்தது. நடுநடுவில் அவனை உற்சாகப்படுத்துவது போல் புன்னகை புரிந்து கொண்டிருந்தான்.

மிகவும் கூர்மையான பார்வையுடைய சோபனா ஜோஷி இதைக் கவனித்து விட்டு, ''இந்த ஹரிநாராயண் ஒரு குழந்தை!'' என்றாள் அவனைச் சுட்டிக் காட்டி. (தொடரும்)



குடும்பத்தினர் அனைவரும்
திட ஆரோக்கியத்துடன் திகழ
ஃபாஸ்ஃபோமின்
ஃபாஸ்ஃபோமின்
• சக்தியை அதிகரிக்கிறது
• பசியைத் தூண்டுகிறது
• வலிவைப் பெருக்குகிறது
• நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கூட்டுகிறது.
Phosfomin
VITAMINS ELIXIR
There's health in Phosfomin for all the family
SQUIBB
SARABHAI CHEMICALS
இ.ஆர். ஸ்க்விப் & ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட்டின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்காகும். ஸாராசந்த் ப்ரேம் சந்த் பிரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.
ஃபாஸ்ஃபோமின்...
பழரஸ மணம் கமழும்
பச்சை நிற விடமின்
டானிக்.
Shilpi HPMA-35A/70 Tam.



50 (I)

எல்லாருமே ஒரு பராசக்தியை நம்பிப் பிழைத்து வருகிறார்கள். கடவுளைப் பற்றி நம்பிக்கை இல்லை என்று சொல்லிக் கொள்பவர்களுங்கூடத் தங்களையும் அறியாமல் கடவுளை நம்பித்தான் வருகிறார்கள்.


ஒவ்வொருவனுக்கும் தன்னம்பிக்கை உண்டு. அந்தத் தன்னம்பிக்கையை மனித வர்க்கம் முழுவதற்கும் வைத்துப் பெருக்கிக் கணக்கிட்டோமானால் அதுவே கடவுள் நம்பிக்கையாகிறது. ஜீவராசிகள் அனைத்தும் சேர்ந்தால் அதுவே கடவுள். உயிர்கள் அனைத்துமே பராசக்தியின் அம்சம். நீர்த் துளிகள் எல்லாம் சேர்ந்து சமுத்திரமாகிறது. கடலினின்று பிரிந்து போன நீர்த் துளிகளைப் போல் உயிர்கள் சக்தியற்று நிற்கின்றன. ஆயினும் கடலுக்கும் நீர்த் துளிக்கும் உள்ள சம்பந்தம் அழிந்து போகாது. தெய்வத்தினின்று பிரிந்து நிற்கும் உயிர்களும் தெய்விக சக்தியை முற்றிலும் இழந்து விடவில்லை. நம்முடைய 'தன்னம்பிக்கை' யெல்லாம் அந்தத் தெய்விகத்தினுடைய அம்சமேயாகும். நீர்த் துளிக்கு யாரேனும், "நீ கடலைச் சேர்ந்த பொருள்" என்று சொல்லி உணர்த்துவித்தால் அதுவும் தன் பெருமையை அறிந்து களிக்கூத்தாடும்.

(ஹரிஜன் 3-6-39)

பகவானுடைய தரிசனம் அடைவது எப்படி? நம்முடைய உள்ளத்தில் ஆண்டவன் கோயில் கொண்டிருப்பதை நிச்சய பக்தியுடன் உணர்வதே கடவுள் தரிசனம்.

தாயின் அன்பைக் குழந்தை எவ்வாறு அறிகிறது? பிறர் வந்து நிரூபித்து அறிவதில்லை; தானும் அதைப் பற்றி விமரிசனம் செய்வதில்லை. தாயின் அன்பைத் தானாகவே உணர்ந்து அனுபவிக்கிறது. தாயின் அன்பைப் பிறருக்கு எடுத்து விளக்கக் குழந்தைகளுக்குத் தெரியாது. தாயின் அன்பு குழந்தைக்குப் பிரத்தியட்ச தரிசனம் தருகிறது. அவ்வாறே கடவுளின் உண்மையும். கடவுள் ஒரு நிரூபணைப் பொருள் அல்ல. அனுபவப் பொருள். துளசிதாஸர் அனுபவித்திருக்கிறார். சைதன்ய பகவான் அனுபவித்திருக்கிறார். ராமதாஸர் அனுபவித்திருக்கிறார். இன்னும் எத்தனையோ மகான்கள் அனுபவித்து மக்களுக்கு உபதேசமும் செய்திருக்கிறார்கள். பள்ளிக்கூட ஆசிரியர்களின் பாடங்களை மாணவர்கள் ஒப்புக் கொள்வது போல் பக்தர்களுடைய அனுபவங்களையும் சமய தேசிகர்களுடைய உபதேசங்களையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆசாரியர்களுடைய அனுபவங்களை நாம் இல்லை என்று சொல்லலாகாது. ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் அடைந்த பேரானந்த அனுபவத்தை நாமும் அடைய முயல வேண்டும்.

(யங் இந்தியா 9-7-25)



14. நினைவுப் போதை

பேராசிரியர் கமலசாமி முரளியிடம் மனம் விட்டுப் பேசினார்.

"சாரதாவுக்கு என் மீது கோபம் இருப்பது நியாயந்தான்.... இதையெல்லாம் அவளால் பொறுத்துக்கொள்ள முடியாதுதான்.... ஆனால், சில சமயங்களில் வெறுப்பு நிறைந்த பார்வையை என் மீது அவள் செலுத்தும்போது என்னால் பொறுக்க முடியவில்லை."

"பெண்கள் இதைச் சாதாரணமாக எண்ணுவதில்லை...." என்றான் முரளி, அவரைச் சமாதானப்படுத்த.

"எஸ்.... எஸ்.... யூ ஆர் கரெக்ட்.. ஆண்களுடைய கண்ணோட்டம் வேறு, பெண்களுடைய கண்ணோட்டம் வேறு. இதனால்தான் எதையும் கண்டிப்புடன் சாரதாவிடம் சொல்லவோ, அவளுடைய போக்குக்குத் தடை விதிக்கவோ என்னால் முடியவில்லை. என்னுடைய கவலையெல்லாம் நிம்மதியான வாழ்வுக்குத் தகுந்த பாதையை விட்டு விட்டுக் கரடுமுரடான வழியை அவள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறாளே என்பதுதான்....." என்று கூறிய கமலசாமி, சிறிது நேரம் பேச்சை நிறுத்திவிட்டுச் சிந்தனையில் ஈடுபட்டார். திடீரென்று கைக் கடிகாரத்தைப் பார்த்தார். மணி பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

இருவரும் வீடு திரும்பியபோது சாரதா, வாசல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

"எங்கே நடு ஜாமம் வரைக்கும்?" என்று கேட்டாள்.

"தூக்கம் வரவில்லை. கொஞ்ச நேரம் பார்க்கில் பேசிக் கொண்டிருந்தோம்" என்றார் கமலசாமி.

"ஏன் இங்கிருந்து பேசக் கூடாத இரகசியமா?"

"இப்போது நீ குறுக்கு விசாரணையில் இறங்கியிருக்கிறாய்" என்றார் கமலசாமி, சிரித்துக் கொண்டே. முரளி இந்தப் பேச்சைக் கவனிக்காதவன் போல் தன்னுடைய காரையே பார்த்துக் கொண்டு நின்றான்.

"முரளி, காலையில் போகலாம்" என்றார் கமலசாமி.

"இல்லை..... ஆபீஸில் வேலை இருக்கிறது. இரண்டு உதவி ஆசிரியர்கள் லீவு எடுத்திருக்கிறார்கள். இன்னொரு நாள் வருகிறேன்" என்று கூறிவிட்டுக் காரை நோக்கி நடந்தான்.

அவனுடைய கார் மறையும் வரை வராந்தாவில் நின்று கவனித்துக் கொண்டிருந்த கமலசாமி, ஒரு நீண்ட பெருமூச்சுடன் தம்முடைய அறைக்குள் நுழைந்தார். அவருடைய நெஞ்சில் கனத்துக் கிடந்த வேதனை, சற்றுக் குறைந்திருப்பது போல் உணர்ந்தார்.

* * *

தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டாள் சாரதா. உள்ளத்தில் பொங்கிய உற்சாகம், உடலெல்லாம் பரவி அவளைத் தூங்க விடாமல் கும்மாளம் அடித்தது. சிவராமனின் நினைவு, நெஞ்சில் நிரம்பி இனிமையைப் பொழிந்து கொண்டிருந்தது. அன்று அவன் எவ்வளவு வாஞ்சையுடன் அவளோடு பேசினான்! அவனுடைய பார்வையும், பேச்சும் அவளை எவ்வளவு உணர்ச்சி வசப்படுத்தி விட்டன!

கல்லூரியில் படித்த காலத்தில் அவனை எண்ணி, எண்ணி மருகிய நினைவுகள் வட்டமிட்டன. ஒதுங்கியே யிருக்கும் அவனுடைய இயல்பும், யாரையும் சட்டை செய்யாத போக்கும், சாரதாவின் இதயத்தில் மாளாத வேட்கையை உண்டாக்கி விட்டன. அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே ஒருவித போதையை உணர்ந்தாள். பலமுறை கமலசாமியைக் காண அவன், அவள் வீட்டுக்குச் சென்றபோதெல்லாம் அவள் அடைந்த பரபரப்பும் குதூகலமும் அவளை நிலைகொள்ளாமல் தவிக்க வைத்துவிடும். அவனுடைய கனிவான பார்வைக்கு அவள் ஏங்கித் தவித்த நாட்களுக்குக் கணக்கேது?

அவனுடைய தவிப்பையும், பார்வை பேசும் மொழியையும் புரிந்து கொள்ளாமலா சிவராமன் இருந்திருப்பான்?...



புரிந்து கொள்ளாதவனைப் போல் அவன் காட்டிய அலட்சியம் எத்தனையோ முறை அவளைக் கண் கலங்க வைத்திருக்கிறது.

ஒரு நாள் இருவரும் கல்லூரி நூலகத்தில் தனி இடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது அவன் கேட்டான்:

''சாரதா! வாழ்க்கையில் உன் லட்சியம் என்ன?'' இந்தக் கேள்வி சாரதாவைக் குழப்பியது. இதற்கு என்ன பதில் சொல்வது? பதில் சொல்ல முடியாமல் சிறிது நேரம் திகைத்தபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சொல்லு, சாரதா! உன் லட்சியம் என்ன ?''

''ஒரு சாதாரணப் பெண்ணுக்கு என்ன லட்சியம் இருக்க வேண்டுமோ, அந்த லட்சியந்தான்'' என்றாள்.

'' அதாவது, கண்ணுக்குப் பிடித்தவனை மணப்பது, பிள்ளைகளைப் பெறுவது, பிறகு ஓய்ந்து விடுவது... இது தானே? இதைத்தான் சாக்கடையில் புரளும் பன்றிகூடச் செய்கிறதே. பெண் என்றால், வெறும் இயந்திரம் இல்லை, சாரதா. பிறப்பது குறிக்கோளற்றுச் சாவதற்கல்ல. உலகத்தில் நடந்திருக்கும் புரட்சிகளில் ஈடுபட்ட பெண்கள்



எத்தனை பேர் தெரியுமா? குடும்ப வாழ்க்கையைப் பெரிதாக எண்ணிக் கொண்டிருப்பதா லட்சியம்?''

சிவராமனைப் பயத்தோடு வெறிக்கப் பார்த்தாள் சாரதா. அவன் பேசிக் கொண்டே போனான்.

''உன்னுடைய அறிவும், அழகும் வீட்டுக்குள் ஒருவனுடைய சுயநலத்துக்கு விருந்தாகி விடக் கூடாது, சாரதா! சாதாரணமாக என் கண்களில் தென்படும் பெண்களையெல்லாம் விட நீ எவ்வளவோ உயர்ந்தவள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். மற்றவர்களைப் போல் அற்ப ஆசைகளையும், மிகச் சாதாரண கற்பனைகளையும் சுமந்து திரியும் சோம்பேறியாக இருந்து விட மாட்டாய் என்றுதான் நம்புகிறேன்'' என்று கூறிவிட்டு அவளோடு அவளை உற்றுப் பார்த்தான். இருவர் கண்களும் கலந்து உறவாடின.

அவனுடைய எண்ணங்களும், இலட்சியங்களும் அவளைத் திணற வைத்தன.

ஆரம்பத்தில் சிவராமனுடைய பேச்சும், லட்சியத்தைப் பற்றிய தீவிரமும் அவளுக்குப் பயத்தை உண்டாக்கின. ஆனால், போகப் போக அவற்றில் ஒரு வித ஈடுபாடும், உற்சாகமும் தோன்றுவதை உணர்ந்தாள்.

தன்னுடைய லட்சியப் பாதையின் திசையில் சாரதாவும் திரும்பியிருக்கிறள் என்பதை உணர்ந்த போது சிவராமன் அடைந்த உற்சாகத்துக்கு அளவே இல்லை. அப்போதுதான் படிப்பை விட்டு விட்டு அவன் வயநாடு செல்ல வேண்டி வந்து விட்டது. அவன் போகப் போகும் காரியமும், இடமும் இரகசியமாதலால் சாரதாவிடம்கூடச் சொல்லாமல் மறைந்து விட்டபோது, அவள் மனம் தவித்து இரகசியமாகக் கண்ணீர் சிந்தினாள்.

யாரிடம் போய்ச் சொல்லி அழ முடியும்? முரளியிடம் கேட்டாள். அவனுக்கும் சிவராமன் சென்ற இடம் தெரியாது. போகும்போது ஒரு வார்த்தை கூடச் சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டானே என்னும் ஏமாற்றம், அவள் மனத்தை அடைத்தது. இது ஒருதலைக் காதல்தானே என்று அஞ்சினாள்.

ஒரு மாதத்துக்கு மேல் பித்துப் பிடித்தவளைப் போல்தான் திரிந்தாள். பிறகு கவனத்தைப் படிப்பில் தீவிரமாகச் செலுத்துவதில் வெற்றி கண்டாள். ஓராண்டுக்குப் பிறகு சிவராமன் மீண்டும் வந்தபோது சாரதா அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடேது!

அதன் பிறகு சிவராமனுடைய தொடர்பு வளர்ந்தது.



கொஞ்சம் கொஞ்சமாகச் சிவராமன் அவள் மனத்தைப் பக்குவப்படுத்துவதில் முனைந்தான். ஆரம்பத்தில் கட்சிக் கொள்கைகளைக் கேட்டு முகத்தைச் சுளித்தவளை இப்போது கட்சிச் சித்தாந்தங்களில் ஒரு மேதையாக்கி விட்டான்.

கட்சியின் சித்தாந்தங்களை எவ்வளவுதான் அவளுடைய மனம் ஒப்புக் கொண்டாலும், அதனுடைய நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்தாள். கட்சியில் சேர்ந்து பணியாற்றவும் தயங்கினாள்.

கம்யூனிஸ்ட் கட்சி மகாநாடு நடந்த போது சாரதாவும் அந்தக் கூட்டத்துக்குச் சென்றிருந்தாள். மகாநாட்டுப் பந்தலில் காந்தாமணியைக் கண்டதும் திடுக்கிட்டாள். தன்னோடு படித்த காந்தாமணி கட்சியில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறள் என்பதை அறிய வியப்பாயிருந்தது. மகாநாட்டில் அவள் சுறுசுறுப்புடன் ஓடித் திரிவதையும், அடிக்கடி சிவராமனோடு நெருங்கிச் சிரித்துப் பேசுவதையும் கண்டதும் சாரதாவுக்கு மனம் புழுங்கியது. சிவராமனும் அவளோடு சிரித்துப் பேசுவதைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள் சாரதா. காந்தாமணியின் பேச்சும், சிரிப்பும், சாரதாவுக்கு எரிச்சலை மூட்டின. அன்று பகல் முழுவதும் இனம் புரியாத மனத் தவிப்பில் சிக்கித் தவித்தாள். மாலையில் சிவராமனைச் சந்திக்க அவனுடைய வீட்டுக்கே சென்றாள்.

"காந்தாமணி எங்கே வந்தாள்? மகாநாட்டில் அநாவசியமாகச் சுற்றிக் கொண்டிருந்தாளே?" என்றாள் சாரதா. சாரதாவின் பேச்சில் பொதிந்திருந்த எரிச்சலைச் சிவராமன் கவனிக்காதது போல் உரக்கச் சிரித்தான்.

"அநாவசியமாகவா திரிந்து கொண்டிருந்தாள்...? அவள்தான் இந்த மகாநாட்டில் நிகழ்ச்சிக் குழுவின் தலைவி. இந்த மகாநாடு இவ்வளவு பிரமாதமாக நடந்ததற்கே அவள்தான் காரணம்!"

அவளைப் பற்றிக் கூறியபோது சிவராமன் அடைந்த பரபரப்பையும், உற்சாகத்தையும் சாரதா கவனிக்கத் தவறவில்லை.

காந்தாமணியின் துணிச்சலையும் திறமையையும், கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலிருந்தே கட்சியின்மீது அவள் கொண்டிருந்த வெறியையும் சிவராமன் வானளாவப் புகழ்ந்த போது, சாரதா ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். கம்யூனிஸ்ட் கட்சியில் தான் சேர்ந்து விடுவது என்ற அவளுடைய முடிவைக் கேட்டதும், சிவராமன் மிகுந்த உற்சாகத்தால் அவளுடைய கைகளைப் பற்றிக் கொண்டான்.

சிவராமனின் இதயத்தில் நிரந்தர இடத்தைப் பற்றிக் கொள்ளச் சாரதா எதையும் செய்யத் துணிந்தாள்.

அவளைக் கட்சியில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் ஈடுபட்டான் சிவராமன்.

அன்று மாலைதான் தலைமைக் காரியாலயத்திலிருந்து சாரதாவைக் கட்சியில் சேர்க்கலாம் என்று அனுமதி வந்தது. அதைச் சாரதாவிடம் காட்டி விட்டுச் சிவராமன் அடைந்த உற்சாகமும், அவள் கைகளை வாஞ்சையோடு பற்றிக்கொண்டு அவன் பார்த்த பார்வையும் அவள் நெஞ்சில் பரபரத்துக் கொண்டிருந்தன. அந்தப் பார்வையையும், ஸ்பரிசத்தில் தோன்றிய உணர்வையும் இதற்கு முன் அவள் அவ்வளவு தெளிவாக உணர்ந்ததில்லை. அவற்றுக்காகத்தானே அவள் ஏங்கிக் கிடந்தாள்?

அவள் கண்களுக்குள் புகுந்த அவன் பார்வை, இன்னும் கண்களில் அப்பிக் கொண்டு குறுகுறுப்பது போலிருந்தது. அவன் தொட்ட இடத்திலிருந்து உணர்ச்சி அலைகள் பெருகி, உடல் முழுதும் பரவிச் சிலிர்க்கச் செய்தன. நினைவுப் போதையோடு கட்டிலில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள்.

பக்கத்து அறையிலிருந்து வந்து கொண்டிருந்த கமலசாமியின் குறட்டை ஒலி, அவளுடைய நினைவுக்குத் தாளம் போடுவது போலிருந்தது.

• • •

பேராசிரியர் கமலசாமியின் வீட்டிலிருந்து இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் புறப்பட்டான் முரளி. நேரே 'பாரதமணி' காரியாலயத்துக்குச் சென்றான். இரவு அச்சாக வேண்டிய செய்திகளை வகைப்படுத்தித் தொகுப்பதில் ஈடுபட்டிருந்தான் சாமிநாதன். இரண்டு உதவி ஆசிரியர்கள் வரவில்லையாதலால் அந்த அறையில் சாமிநாதனும், ராமபத்திரனும்தான் இருந்தார்கள். முரளியைக் கண்டதும் பரபரப்புடன் எழுந்து வந்தான் சாமிநாதன்.

"என்ன... ஏதாவது முக்கிய செய்தி உண்டா?" — முரளி கேட்டான்.

"கிராமப் பகுதிகளில் நிலத் தொழிலாளர்களைக் கிளர்ச்சி செய்யும்படி கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் தூண்டுகிறார்களாம். அறுவடைக்குக் கூலி அதிகம் கேட்டுத் தகராறு செய்கிறார்களாம். பதற்ற நிலை ஏற்பட்டிருக்கிறதாம்..."

"வேறு ஏதாவது செய்தி உண்டா?"

"விஜயவாடாவில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சுப்பா ரெட்டி கொலை செய்யப்பட்டாராம். போலீசார் தீவிரமாகப் புலன் விசாரணையில் ஈடுபட்டிருக்கிறார்களாம்..."

"கொலைக்குக் காரணம் தெரியுமா?"

"இன்னும் தெரியவில்லை. கொலையாளியும் யாரென்று இன்னும் தெரியவில்லையாம்."

"தலைவர் கொலையுண்டதால் ஆந்திராவில் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் ஆர்ப்பாட்டம் ஏதும் செய்யவில்லையா?"

"இல்லை .... மயானத்தில் கட்சிக்காரர்கள் கூடி இறுதி மரியாதை செலுத்தினார்களாம். கொலைக்காக எவ்வித ஆர்ப்பாட்டமும் இதுவரையில் அங்கு நடந்ததாகத் தெரியவில்லை....!"

"சரி... இந்த நியூஸை 'ஃபாலோ' பண்ணு..." என்றான் முரளி.

"கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரையே கொலை செய்யவேண்டுமானால், எவனோ ஒரு துணிச்சல்காரன்தான் செய்திருக்க வேண்டும்..."

"அதற்குள் எந்த முடிவுக்கும் வந்து விடாதே. செய்தியைத் தொடர்ந்து கவனி. பிறகு உன்னுடைய முடிவைக் கூறலாம்... மிஸ்டர் ராமபத்திரன் மட்டும்தானே உனக்குத் துணையாக இருக்கிறார்? நீங்கள் இருவருமே பார்த்துக் கொள்வீர்களா, நானும் இருக்க வேண்

பளிச்சிடும் செய்தி!

புதிய ஃபோமெக்ஸ்

உன்னதமான க்ளீனிங் பவுடர்

அதிக சக்தி மிக்கது!
ஃபோமெக்ஸ் துரிதமாகச் சுத்தப்படுத்துகிறது. பாத்திரங்களும், கப்-சாஸர் முதலியவையும், தரைகளும் உண்மையில் சுத்தமாகப் பளிச்சிடுகின்றன!

அதிக மதிப்பு!
விலையைப்பாருங்கள்! சிறந்த அதிக சக்தியுள்ள பவுடருக்கு எவ்வளவு குறைவான விலை!

அதிக பவுடர்!
எடையைப் பாருங்கள்! உங்களுக்கு ஒவ்வொரு ஃபோமெக்ஸ் பேக்கிலும் எவ்வளவு அதிகமான க்ளீனிங் பவுடர் கிடைக்கிறது!

அதிக பயனைத் தருவது



இலவசம்!
நீங்கள் வாங்கும் புதிய ஃபோமெக்ஸ் பேக் ஒவ்வொன்றுடனும் ... 4 ... கிடைக்கின்றன.

FONSA F-10-TAM

ப்ரகாஷ் அலிகெம் தயாரிப்பு • [illegible] லிமிடெட்

டுமா? எனக்கு அசதியாக இருக்கிறது'' என்றான் முரளி.

''நீங்கள் போங்கள், சார்! நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்றான் சாமிநாதன்.

முரளி, சோர்ந்து போய்க் காரில் ஏறினான். அவனுடைய உள்ளமும் உடலும் சோர்வுற்றிருந்தன. காரைச் செலுத்திக் கொண்டு கம்யூனிஸ்ட் கட்சிக் கட்டிடத்துக்கு வந்தபோது, கூட்டங் கூட்டமாகச் சிலர் கூடி நின்று பேசுவது தெரிந்தது. அந்தத் தெருவின் இருப்பத்தில் சிவராமன் சிலரோடு பேசிக் கொண்டிருப்பதைக் கண்டதும், காரை நிறுத்தினான் முரளி.

காரைக் கண்டதும் சிவராமன் தனியாகக் காரை நெருங்கி வந்தான். காருக்குள்ளிருந்தே முரளி கேட்டான்:

''விஜயவாடாவிலிருந்து வேறு ஏதாவது செய்தி உண்டா?''

''அதற்குள் பத்திரிகைகளுக்கும் வந்துவிட்டதா செய்தி?'' என்று வியப்புடன் கேட்டான் சிவராமன்.

''பின்னே என்ன, கட்சித் தலைவரல்லவா கொலை செய்யப் பட்டிருக்கிறார்?''

''நாளை இங்கே கடையடைப்புக்கு ஏற்பாடு நடக்கிறது. கண்டன ஊர்வலமும் உண்டு'' என்றான் சிவராமன்.

''ஆந்திராவிலேயே அமைதியாக இருக்கிறார்களே, இங்கே என்ன வந்தது?'' என்றான் முரளி அலட்சியமாக.

''காலையில் 'பாரதமணியை'ப் பார்த்து விட்டு உன்னுடைய மறியல் வேலையை நடத்தேன்.''

''விஜயவாடாவில் அமைதி என்றால் இங்கேயும் அப்படியே இருக்க வேண்டும் என்பதில்லை. நாளைக் கட்டாயம் மறியல் இங்கு நடக்கும்'' என்றான் சிவராமன் அழுத்தமாக.

''கண்டன ஊர்வலம் என்றாயே, யாரைக் கண்டித்து?''

''கொலை செய்தவர்களைத்தான்.''

''கொலை செய்தது யார்?'' — முரளி ஆவலோடு கேட்டான்.

''தெரியவில்லை... முதலாளி வர்க்கத்தின் சதியாகத்தானிருக்கும். கட்சி இதற்குப் பழி வாங்காமல் ஓயாது.''

''அந்தக் கொலை முதலாளி வர்க்கத்தின் சதியென்றால், இதற்குள் ஆந்திர கம்யூனிஸ்ட் கட்சி பொங்கி எழுந்திருக்குமே. குறைந்தது நாலைந்து கார்களாவது எரிந்திருக்கும்; இரண்டு மூன்று இடங்களில் கல் வீச்சு நடந்திருக்கும்; மாபெரும் ஊர்வலத்தை நடத்தியிருப்பார்கள்; ஆஸ்பத்திரியில் பத்துப் பேராவது சேர்க்கப் பட்டிருப்பார்கள். ஆனால் அங்கு ஒன்றுமே நடக்காதது



" மாப்பிள்ளே! அடே! வாங்க! இப்போதாவது மனசு மாறி வந்தீங்களே. தலை தீபாவளிக்கு வராமலேயே இருந்திடுவீங்களோன்னு பயந்துட்டேன்."



''ஆமாம்! மனசு மாறி வைர மோதிரத்துக்குப் பதிலாக இரண்டு சவரனிலே கமலை செயினும், ஒரு சவரனில் மோதிரமும், ஒரு ஸ்கூட்டர் வாங்கப் பணமும் கொடுத்தால், அடுத்த வருஷம் தலை தீபாவளி வெச்சுக்கலாமான்னு சொல்ல வந்தேன்...''

-இட்டு

போல் அமைதி நிலவுகிறதே...'' என்றான் முரளி அலட்சியமாக.

''அப்படியானால் கொலை செய்தவனை நீ தெரிந்து வைத்திருக்கிறாயா?'' என்று பரபரப்புடன் கேட்டான் சிவராமன்.

''எனக்குத் தெரியாது. ஆனால் நீ நினைக்கிறது மாதிரி முதலாளி வர்க்கத்தினர் இதைச் செய்திருக்க மாட்டார்கள்!''

''அதெப்படி உனக்குத் தெரியும்?''

''ஊகந்தான். கொலை நடந்தவுடனே கொந்தளிப்பு ஏற்படவில்லை யல்லவா?''

''அப்படியானால் கொலையாளி யார் என்பதையும் ஊகிப்பதுதானே?'' என்றான் சிவராமன், எக்காளமாக.

''அதையும் ஊகித்து விட்டேன்... ஆனால் இப்போது சொல்வதற்கில்லை.''

''ஏனோ?''

''நீ நம்பப் போவதில்லை.''

''நம்புகிறேன்... சும்மா சொல்லு'' என்றான் சிவராமன், அலட்சியமாக. முரளி காருக்குள் உட்கார்ந்தவாறே சிவராமனின் கையைப் பற்றி அருகே இழுத்து அவன் காதில் தான் நினைத்ததை இரகசியமாகக் கூறினான்.

சிவராமன் திடுக்கிட்டுப் போய்ச் சிலையாகச் சமைந்து விட்டான். பயத்தினால் அவன் உடம்பு சிறிது நடுங்கவும் தொடங்கியது.

''இதை இரகசியமாக வைத்துக் கொள். வெளியே சொல்லிவிடாதே.

போகப்போக நான் சொன்னது உண்மை என்று புரிந்து கொள்வாய்.... அநேக மாக என் ஊகம் தப்பாது'' என்று கூறிவிட்டுக் காரைச் செலுத்திக் கொண்டு போய்விட்டான் முரளி.

நின்ற இடத்திலேயே சிலை போல் அசையாமல் நின்று கொண்டிருந்தான் சிவராமன். அவன் காதுக்குள் முரளி இரகசியமாகக் கூறிய செய்தி, அவனை அதிர வைத்து விட்டது. திடீரென்று பய உணர்ச்சி கவ்விக் கொண்டது. உடல் வியர்த்துக் கொட்டியது. தோளை யாரோ பற்றுவது போன்ற உணர்வு தட்டியதும் சுய நினைவடைந்தான். பக்கத்தில் கட்சித் தொண்டன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

''ஹைதராபாத்திலிருந்து தலைவர் ஐயா போனில் பேசினார். நல்லதம்பி ஹைதராபாத்திலிருந்து இன்று புறப்பட்டு விட்டாராம். நாளை இங்கே ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு செய்யவேண்டுமாம். விஜயவாடாவிலும் மற்ற இடங்களிலும் நாளை ஆர்ப்பாட்டம் நடக்குமாம்'' என்றான் தொண்டன்.

''நல்லதம்பி வந்தால் முழு விவரமும் தெரியும்'' என்று முனகிக் கொண்டே கட்சிக் கட்டிடத்தை நோக்கி நடந்தான் சிவராமன்.

மறு நாள் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு பெரிய ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்தது. செங்கொடிகளை ஏந்திக் கொண்டு தொண்டர்கள் கோஷங்களைக் கூவிய வாறு சென்றார்கள்.

''முதலாளி வர்க்கம்...''

''ஒழிக....''

''விஜயவாடா கொலைக்கு...''

''பழி வாங்கியே தீருவோம்...''

''புரட்சி...''

''ஓங்குக!''

கோஷத்தின் உக்கிரத்தையும் கூட்டத்தின் உணர்ச்சியையும் கண்ட கடைக்காரர்கள் மடமட வென்று கடைகளை அடைத்து விட்டார்கள். அடைக்காத ஒன்றிரண்டு கடைகளுக்கு முன் கற்கள் சரமாரியாகப் பாய்ந்தன. ஒரு கடைக்காரர் கடை வாசலிலேயே அடிபட்டுச் சுருண்டு விழுந்தார். பாதையின் ஓரத்தில் ஒதுங்கி நின்ற ஓர் அரசாங்க பஸ்ஸைக் கண்ட சில தோழர்கள், உற்சாகத்துடன் அதை நோக்கி ஓடினார்கள். பஸ்ஸில் உட்கார்ந்திருந்த பிரயாணிகள் பதறிப் போய்க் கீழே இறங்கினார்கள். பெண்கள் அலறினார்கள். குழந்தைகள் வீறிட்டார்கள். பிரயாணிகள் இறங்கியதும் பஸ்ஸைக் தலைகீழாகக் கவிழ்த்தார்கள். பிறகு பெட்ரோலை ஊற்றி பஸ்ஸுக்குத் தீயிட்டார்கள்.

பற்றி எரிந்த பஸ்ஸை வேடிக்கை பார்த்த கூட்டம் உற்சாகத்தால் கூக்குரலிட்டது. மாலை ஆறு மணிக்குப் பிறகுதான் ஊரில் அமைதி நிலவியது. போலீஸ்காரர்கள் துப்பாக்கிகளுடன் மிகவும் சுறுசுறுப்புடன் தெருக்களில் திரிந்து கொண்டிருந்தார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியினர் அன்றிரவு மைதானத்தில் பொதுக் கூட்டம் நடத்தினார்கள்.

மேடையில் சிவராமனின் பேச்சு உணர்ச்சி மயமாக இருந்தது. கூட்டத்துக்குச் சாரதாவும் போயிருந்தாள். ஓர் ஓரத்தில் ஒதுங்கி நின்று பேச்சை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த சாரதா, தன் பக்கத்தில் யாரோ நின்று தன்னை உற்றுப் பார்ப்பதை உணர்ந்து திரும்பினாள். சாமிநாதன், தோளில் காமிராவுடன் நின்றுகொண்டிருந்தான்.

''வணக்கம்... அவர் வரவில்லையா?'' சாமிநாதன் ஓர் அசட்டுச் சிரிப்பைச் சிந்திக் கொண்டு கேட்டான்.

''எவர்?'' என்று சாரதா புரியாமல் கேட்டாள்.

''முரளி சார்...''

''ஓ...! நீங்கள் 'பாரதமணி'யில் உள்ளவர்தானே...? உங்கள் முரளிக்கு இந்தக் கட்சிக் கூட்டம் பிடிக்காது'' என்றாள் சாரதா.

''எப்படிப் பிடிக்கும்...? இன்று இந்தக் கட்சி நடத்திய புரட்சியின் லக்ஷணத்தைப் பார்த்தால்...''

''ஏன், அதற்கு என்னவாம்?''

''ஒரு பஸ் எரிந்து இன்னும் புகைந்து கொண்டிருக்கிறது. ஒரு கடைக்காரர் கல்லடி பட்டுக் கண்களை இழந்து ஆஸ்பத்திரியில் கிடக்கிறார். இரண்டு போலீஸ்காரர்களுக்குப் பலத்த கல்லடி. பல கடைகளில் கடைக்காரர்கள் உள்ளே விழுந்த கற்களை வெளியே எடுத்துப் போட்டு விட்டுக் கண்ணீர் சிந்தியபடி நிற்கிறார்கள். இதுதான் புரட்சி! விஜயவாடாவில் ஒருவர் செத்தால், இந்த ஊரில் கல்லெறி. தென்னை மரத்தில் தேள் கொட்ட, பனை மரத்தில் நெறி கட்டிய கதைதான்'' என்றான் சாமிநாதன்.

''ஓஹோ... இவ்வளவு நடந்திருக்கிறதா?'' என்று கேட்டாள் சாரதா, வன்முறைகள் இந்த அளவுக்கு நடந்திருக்கின்றன என்பதை அப்போதுதான் உணர்ந்தவளாக.

''அவ்வளவையும் போட்டோ எடுத்திருக்கிறேன். நாளைக் காலையில் 'பாரதமணியைப்' பாருங்கள்'' என்றான் சாமிநாதன்.

(தொடரும்)

சிறந்த அழகின் ஆதாரம்: அனுதினமும் உட்கொள்ளுங்கள்



அழகின் ரகசியம் ஆரோக்கியம் என்பதை நீங்களும் அறிவீர்கள். உங்களின் சுறுசுறுப்பு, தெளிவான சருமம், ஒளி சிந்தும் விழிகள், பளபளப்பான, எழில் வாய்ந்த கேசம் இவை எல்லாம் உங்கள் அழகின் கண்ணாடி.

இவையனைத்தையும் நிரந்தரமாகப் பாதுகாக்க உங்களுக்கு சமச்சீருணவு தேவை. பெரும்பான்மையோர் ஆரோக்கியத்திற்கு எது தேவையோ அதைச் சாப்பிடுவதில்லை—போதாக் குறைக்கு சீதோஷ்ண நிலையும் அயர்ச்சியடையச் செய்து விடுகிறது.

ஆனால் மனம் தளர வேண்டாம். உங்களுக்கு அத்தியாவசியமான போஷணைசத்தை 'விடாமினெட்ஸ்' ஃபோர்டேயிலிருந்து பெறலாம். அதில் 11 வைட்டமின்களும் 5 தாது உப்புக்களும் அடங்கியுள்ளன.

உங்கள் மருந்து வியாபாரியிடமிருந்து இன்றே 'விடாமினெட்ஸ்' ஃபோர்டே வாங்குங்கள்.

'விடாமினெட்ஸ்' ஃபோர்டே — ஜீவ சத்து நிறைந்த மின்னும் சிவப்பு மாத்திரைகள். ஒரு நாளைக்கு ஒரு மாத்திரை. சாப்பிட்டால் அழகுக்கும் ஆரோக்கியத்திற்கும் தேவையான சத்துக்கள் கிடைத்துவிடும்.

VT 8457

'விடாமினெட்ஸ்' ஃபோர்டே

டிரேட் மார்க்


ரோஷ்

'நாளொன்றுக்கு 15 பைசாவிலும் குறைந்த செலவில் ஆரோக்கியமும் சக்தியும் பெறுங்கள்'

'ரோஷ்' தயாரிப்பு

ஏகபோக விநியோகஸ்தர்கள் : வால்டாஸ் லிட்.





மங்களமறைக்கோயில் மங்காது பொலியட்டும்!

தஞ்சையில் முதல் மூன்று நாயக மன்னர்களின் மதியமைச்சராகத் திகழ்ந்தார் மகான் கோவிந்த தீக்ஷிதர். அந்த அரசை ஸ்தாபித்தது மட்டுமின்றி அது தர்ம ராஜ்யமாகத் திகழுவதற்கும் அரும் பணி ஆற்றினார் 'ஐயன்' என அன்போடு அழைக்கப்படும் * ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர். அவர் செய்த அநேக சத் காரியங்களில் தலைசிறந்து நிற்பது கும்பகோணத்தில் அவர் நிறுவிய ராஜா வேத பாடசாலை. குடந்தையில் தாம் யாகம் செய்த இடத்திலேயே வேள்விகளை வகுத்துக் கூறும் வேதங்களை வாழ்விப்பதற்காக இந்தப் பாடசாலையை எழுப்பினார். நானூற்று இருபத்தெட்டு ஆண்டுகளாக முறிவின்றி நடந்து வருவது இம்மறை நிலையம். சங்கீத மும்மணிகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீக்ஷிதர் உள்படப் பல பெருந்தகைகள் வேதம் பயின்ற பெருமை இந்தப் பாடசாலைக்கு உண்டு.

இப்பாடசாலை தொடங்கப்பட்ட காலத்தை விட இப்போது மக்கட் தொகை பன்மடங்காகியுள்ளது. ஆனால் துரதிருஷ்டவசமாக வேதம் பயில்வோரின் எண்ணிக்கை அன்றிருந்ததைவிட மிக மிகக் குறைந்துவிட்டது. வேத வித்தைக்கு ஊக்கமும் ஆக்கமும் தருவோரும் குறைந்து விட்டனர். ஒரு காலத்தில் சர்வகலாசாலையாகத் திகழ்ந்த ராஜா பாடசாலை இப்போது எத்துணையோ சிரமங்களுடன் முப்பத்தியாறு குழந்தைகளுக்கு, நம் தர்மத்தின் ஆணி வேரான புனித வேதத்தைப் போதித்து வருகிறது. ரிக், யஜுஸ், ஸாமம் ஆகிய மூன்று வேதங்களிலும் தலைக்குப் பன்னிரண்டு மாணாக்கர்கள் உள்ளனர். மாணாக்கர்களுக்கு உண்டி, உறையுள் எல்லாம் பாடசாலையிலேயே அளிக்கப்படுகின்றன. சிறந்த தேர்ச்சி பெற்ற பண்டிதோத்தமர்களைச் சம்மானித்து, அவர்கள் மூலம் கல்வி போதிக்கப்படுகிறது.

இப்பாடசாலையின் வருடாந்தர வருவாய் ரூ. 20,000. செலவோ ரூ. 34,000 ஆகிறது. நில வரம்புச் சட்டங்களுக்குப் பின் வருவாய் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மகா புருஷர் ஒருவரால் நிறுவப்பட்டுப் பற்பல தலைமுறைகளாகச் சீருடனும் சிறப்புடனும் நடந்து வந்த இந்த வேதக் கோயில் நலிவுறாமல் காக்க வேண்டியது நமது சநாதன தர்மத்தில் பற்றுடைய அனைவரது கடமையுமாகும். ''ஆஸ்திகர்கள் மிகவும் புராதனமான இந்தப் பாடசாலை நன்கு நடப்பதற்குப் பூரணமாய் உதவி செய்து வேத தர்மத்தைக் காப்பாற்றுவதன் மூலம் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக'' என்று ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு அவர்களும் பணித்திருக்கிறார்கள்.

இப்பாடசாலையில் ஐயன் கோவிந்த தீக்ஷிதர் நட்ட அரச மரமும், (படம்) வன்னி மரமும் இன்றும் பசுமையாக உள்ளன. அது போலவே இங்கு வேதப் பயிற்சியும் பட்டுப் போகாமல் நாள்தோறும் தளிர்ப்பதற்கு நம்மால் இயன்ற உதவி அனைத்தும் புரிவோமாக! அதனால் இங்கு தீக்ஷிதரால் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நவ வியாகரண பண்டிதரான வீர ஆஞ்சநேயனின் அனுக்கிரகத்தைப் பெறுவோமாக!




ஹனுமார்

திரவியம் அனுப்ப வேண்டிய முகவரி :

பொருளாளர், ராஜா வேத பாடசாலை, யாகசாலைத் தெரு, கும்பகோணம்.

---

* ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரின் வாழ்க்கை வரலாறு குறித்த திரு ரா. கணபதியின் கட்டுரை இவ்வாண்டு 'கல்கி' தீபாவளி மலரில் வெளியாகியுள்ளது.



விடுமுறை! விடுமுறை! விடுமுறை!



எல்லா விஷயத்திலும் பின் தங்கியது நம் நாடு என்று சொல்லிவிடக் கூடாது. சில விஷயங்களில் நமக்கு ஈடு யாரும் இல்லை. உதாரணம் விடுமுறை நாட்கள்! வேறு எந்த நாட்டிலும் இத்தனை நாள் விடுமுறை கிடையாதாம்.

பல மொழி, பல மதத்தினர் வாழும் நாடு ஆதலால் இருக்கும் வசதி(!)களில் ஒன்று விடுமுறை. பல இனத்தவரையும் திருப்தி செய்ய அரசாங்கம் எளிதில் தரக் கூடிய ஒரு சலுகை விடுமுறை.

எல்லா ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை.

மாதா மாதம் இரண்டாம் சனிக்கிழமை விடுமுறை.

இந்து மதத்தில் பண்டிகைகளுக்கு என்ன பஞ்சம்! பொங்கல், தீபாவளி, விநாயகர் சதுர்த்தி, ஆயுத பூஜை என்று எத்தனையோ!

முஸ்லிம்களைத் திருப்தி செய்ய, மொகரம், பக்ரீத், மிலாடி நபி இருக்கின்றன.

கிறிஸ்துவர்களுக்கு ஈஸ்டரும் கிறிஸ்துமஸும். மற்றவர்களுக்கு நானக் ஜயந்தி, புத்த பூர்ணிமை என்று சில.

தமிழருக்கு ஒரு வருஷப் பிறப்பு, தெலுங்கருக்கு ஒரு வருஷப் பிறப்பு, ஆங்கிலேயருக்கு ஒன்று. முஸ்லிம்களுக்கு ரம்ஜான்.

சுதந்திரத்துக்குப் பிறகு மகாத்மா காந்தி பிறந்த நாள், சுதந்திர தினம் என்று இரண்டு புது விடுமுறைகள். அப்புறம், 1950 முதல் குடியரசு தினம் சேர்ந்து கொண்டது.

இதெல்லாம் தவிர, பிராந்திய விடுமுறைகள்: திருவள்ளுவர் தினம், மே தினம், குரு பூர்ணிமா என்று இப்படி.

இவை போக, அந்தந்த வருஷத்தில் நடைபெறும் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களுக்கெல்லாம் விடுமுறை விட்டாக வேண்டாமா? சென்ற பத்தாண்டுகளில் இது ஒரு தேசிய மரபாகி விட்டது.

அப்புறம் இருக்கவே இருக்கிறது, இழவு விடுமுறைகள்! உலகில் பிறந்தார் எல்லோரும் மறையத்தான் மறைகிறார்கள். ஆனாலும் பதவியில் இருப்பவர் மறையும்போது நாடு முழுவதும் ஒரு நாள் இரண்டு நாள் விடுமுறை எடுத்துக் கொள்ளா விட்டால், மற்றவர்கள் மறைவுக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்!

ஆக, சுதந்திரம் பிறந்த பிறகு நாட்டிலே, ஜனப் பெருக்கத்துக்கு அடுத்தபடி விடுமுறைப் பெருக்கம் நாள்தோறும் செழித்து வளரக் காண்கிறோம். ஊக்கமும் உற்பத்தியும் குறைந்து, இதனால் தேசியக் கடனும் அதிருப்தியுமே ஏறக் காண்கிறோம்.

அரசாங்க முழு ஆதரவில் இத்தனை விடுமுறைகள் என்றால், தொழிலாளரும், மாணவரும் வேண்டுவது இன்னும், இன்னும், இன்னும் விடுமுறைகள்தாம்! குறைந்த வேலை — அதிகச் சம்பளம், குறைந்த வேலை நாள் — அதிக விடுமுறை; குறைந்த வேலை நேரம் — அதிக ஓய்வு நேரம்; குறைந்த பொறுப்பு — நிறையச் சலுகை என்பதே தேசிய கோஷமாகலாம்.

ஆமாம், இந்த விடுமுறைகள் பற்றி எனக்குச் சில சந்தேகங்கள்:

சந்தேகம் 1: இங்கிலாந்திலேயே ஜனவரி முதல் தேதி விடுமுறை இல்லை. ஆனால் நமக்கு விடுமுறை. இது எப்படி? 1912ஆம் ஆண்டு, புத்தாண்டு தினத்தில், அன்றைய நமது பிரிட்டிஷ் அரசர் டில்லியில் 'சக்கரவர்த்தி' என்று முடிசூட்டிக் கொண்டார். அந்த ராஜ தர்பாரை நினைவூட்டும் வகையில் அன்று தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் தேதி விடுமுறை விடப்பட்டது என்கிறார் சரித்திராசிரியர். இந்தப் பழமையை நினைவூட்டிக் கொண்டாடவா இன்னும் இந்த விடுமுறை?

சந்தேகம் 2: எந்த நாட்டிலும் ஒருமுறைதான் சுதந்திரம் பெறுவார்கள். அதைத்தான் தேசிய நாளாகக் கொண்டாடுவார்கள். 1930 ஜனவரி '26ம் தேதி தேசிய காங்கிரஸ் ஒரு சுதந்திரத் தீர்மானம் நிறைவேற்றியது. அடுத்த ஆண்டுகளில் அந்த நாளைச் சுதந்திர நாளாகக் கொண்டாடியது. அன்று நாட்டுத் தலைவர்கள் சுதந்திரப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்கள். இந்த நினை

யில் 1949 கடைசியில் அரசியல் சாஸனம் முற்றுப்பெற்றதும் எந்தத் தேதியிலிருந்து அதை அமுலுக்குக் கொண்டு வருவது என்று யோசித்தபோது, பழைய ஜனவரி 26 என்றே தீர்மானித்துச் செயலாற்றினார்கள். அதை ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம். இது சரி.

இடையில் பதவி மாற்றம் நிகழ்ந்த 1947 ஆகஸ்டு 15ம் தேதியையும் கொண்டாடத் தொடங்கி விட்டோம். எந்த நாட்டிலும் இப்படி இரண்டு விடுமுறை இருக்காது. டில்லியில் பார்த்தால் ராஷ்டிரபதியும் வெளிநாட்டுப் பிரமுகரும் கலந்து கொள்ளும் ஜனவரி 26 என்பது கோலாகலமான திருவிழாவாக இருக்கிறது. இது போதுமே. ஆகஸ்டு 15 விடுமுறை எதற்கு? பிரதமர் கொடி ஏற்றி, அரசியல் சொற்பொழிவு ஆற்றுவதற்கா?

சந்தேகம் 3: நாட்டில் ஒவ்வோர் இனத்தவரின் புத்தாண்டுத் தொடக்கத்தையும் விடுமுறை விட்டுக் கொண்டாடுகிறோமே. இதிலே ஒன்று விட்டுப் போயிருக்கிறதே. யாரும் கவனித்ததாகவும் தெரியவில்லை. அரசாங்கத்தில் (வரவு-செலவு) வருஷ ஆரம்பம் எந்தத் தேதி? அந்த ஏப்ரல் முதல் தேதியையும் விடுமுறையாக அறிவித்துவிடலாம் என்கிறேன். அந்த நாளை இந்த நாட்டு மக்கள்-தினமாகவே கொண்டாடி விடலாம்! பொருத்தமாக இருக்கும்!

கிரி — வாசன்

தீபாவளி செய்தி அறிக்கை



ஏ. கு. வி. சாம்

தீபாவளிச் செய்தி அறிக்கை; வாசிப்பது சாப்பாட்டு ராமன். இன்றைக்குத் தில்லியில் நடந்த ஒரு விவாதத்தின் போது ஓர் அங்கத்தினர் இட்லி, போண்டா போன்ற பயங்கர ஆயுதங்களை எதிர்க்கட்சி அங்கத்தினர் மேல் விட்டெறிந்தார். அவரைச் சபாநாயகர் வெளியேற்றி விட்டு, மாமியார் வீட்டுப் பட்சணங்களைச் சாப்பிடுவதைத் தவிர்க்கவே அவர் அப்படி நடந்து கொண்டிருக்கலாம் என்று தாம் அபிப்பிராயப்படுவதாகச் சொன்னார்.



பட்சணக் கடைகளைத் தேசியமாக்க வேண்டும் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டதும் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் மூக்கைத் துண்டினால் மூடிக் கொள்ளவே, திட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நரகாசுரனுக்குக் கடற்கரையோரம் சிலை வைக்க வேண்டும் என்று 'மாப்பிள்ளைகள் சங்கம்' செய்த தீர்மானத்தை எதிர்த்துக் கண்டனம் நிறைவேற்றி யிருக்கிறார்கள், மாமனார் சங்கத்தினர்.

ஸ்கூட்டர், தங்கம் விலையேற்றத்தைப் பற்றி ஒன்றும் செய்ய முடியாதது குறித்து பாமரனான ஓர் அங்கத்தினர் வருத்தப்பட்டு, அமைச்சரின் மனத்தைத் தம் மனைவி செய்த பட்சணங்களோடு ஒப்பிட்டுப் பேசினார்.



ஹோட்டலில் சாப்பிடுவோர் மகாநாடு 'கோவா'வில் நடந்தது. ஒவ்வொரு ஹோட்டல்காரரும் சிறிய அளவில் லட்டுக்குப் பதிலாகக் கடப்பாரை போன்ற பொருள்களைக் கொடுக்க வேண்டும் என்று சிலர் கேட்டுக் கொண்டனர்.



'கல்'லார் கல்லூரி மாணவர்கள் கடந்த ஒரு வாரமாக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். அவர்கள் முதல்வரிடம் சமர்ப்பித்துள்ள கோரிக்கையில், "தீபாவளி நாள் அன்று மட்டுமாவது 'ஹாஸ்டல் மெஸ்'ஸை மறந்துவிட்டு வெளி ஹோட்டலில் சாப்பிட அனுமதிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டதாக எமது நிருபர் கூறுகிறார்.

பம்பாய் ஞாபகமறதிப் பேராசிரியர் ஒருவர் சிகரெட்டைக் கீழே வைத்து விட்டு வாயில் வைத்திருந்த 'ஆட்டம் பாம்'மைக் கொளுத்தி விட்டார் என்று சமீபத்தில் வந்த சரடுகள் கூறுகின்றன.

தமிழ்நாடு அரசியல்வாதி ஒருவர் மத்திய அரசாங்கத்திடம் 'தீபாவளி' என்னும் பெயரை 'ஒளி மய நாள்' என்று மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், தமிழ், வருடப் பிறப்பன்று அதைக் கொண்டாட அனுமதியளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். கோரிக்கையை அவர் செந்தமிழில் கேட்கவே எல்லாரும் விழித்ததாகத் தெரிகிறது.

நேற்று காலையில் 'ஒலிம்பிக்' மைதானத்தில் ஆரம்பித்த 'அல்வா இழுப்பு போட்டி' இன்னும் விடாமல் தொடர்ந்து நடந்துகொண்டேயிருக்கிறது!



இத்துடன் செய்திகள் முடிவடைகின்றன!



உள்ளே இருப்பதென்ன?
உம்மையன்றி யாரே அறிவார்

உங்களுடைய விலைமதிப்பற்ற உடைமைகளான நகைகள், பூர்வீக சொத்து, சட்டபூர்வ தஸ்தாவேஜுகள் முதலியவற்றை திருடர்களிடமிருந்தும் நெருப்பிலிருந்தும் பத்திரமாகப் பாதுகாக்கும் ஒரே வழி, பாங்க் ஆஃப் பரோடாவில் ஒரு ஸேஃப் டெபாஸிட் லாக்கரை வாடகைக்கு எடுத்துக் கொள்வது. வாடகை, மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கும் சிறிது கூட, அவ்வளவேதான்!

நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ

பாங்க் ஆஃப் பரோடா

தலைமைக் காரியாலயம்: மாண்ட்வி, பரோடா
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் 500 க்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன.

Shilpi-BOB-13/70

எடுக்காத படத்துக்கு எடுப்பான விமரிசனம்!

இண்டிகேட் புரொடக்ஷன்ஸ் பிரும்மாண்டமான அளவில் தயாரித்திருக்கும் 'சர்வாதிகாரி' திரைப்படம் முதலில் இருந்து கடைசிவரை பிரமிக்கச் செய்யும் வகையில் அமைந்திருக்கிறது. 'மனச்சாட்சி' புகழ் இந்திரா காந்தியே இப்படத்தின் கதாநாயகியாக நடிப்பதோடு, இப்படத்தின் கதையையும் எழுதிக் கதாசிரியையாக அறிமுகமாகிறார். தொடக்கத்தில் ராஷ்டிரபதி தேர்தலில் ஆரம்பமாகும் கதை, பாங்குப் பிரச்னையில் புகுந்து, ராஜாக்கள் பிரச்னைக்கு வந்து, முடிவில் உத்தரப் பிரதேசக் காட்சியில் உச்சகட்டத்தை அடைகிறது.

இப்படத்தின் வசனத்தை, ''ஆமாம் சாமி'' புகழ் கோபால ரெட்டி எழுதியிருக்கிறார். உத்தரப் பிரதேசக் காட்சியில் அவரது வசனங்கள் வெகு ஜோர்.

கதையை எழுதி இருப்பவரே கதாநாயகியாகவும் நடிப்பதால், நடிப்பில் ஒரு வேகம் இருக்கிறது. சர்வாதிகாரியாக நடிப்பதற்கென்றே பிறந்தவர்போல் ஒவ்வொரு கட்டத்திலும் திறமையாக நடித்திருக்கிறார். ஏன், உண்மையான சர்வாதிகாரியையும் மிஞ்சி விடுகிறார் என்றுகூடச் சொல்லலாம்!

ஞாபக மறதிக்காரராகச் சிரிப்பு நடிகர் ஜெகஜீவன்ராம் நடிக்கிறார். ஞாபகமறதியாக வரி கட்டாமல் இருந்து விட்டு, கேள்வி கேட்கும்போது அவர் எதை எதையோ சொல்லுகையில் தியேட்டரே சிரிப்பொலியில் மூழ்கி விடுகிறது. ஞாபகமறதியை அடிப்படையாகக் கொண்டு சிரிப்புக் காட்சிகளை அமைத்திருப்பது சிறப்பான அம்சம்.



பெரும் பெரும் ஏமாற்றங்களை அடையும் கதா பாத்திரமாக சுப்பிரமணியம் நடிக்கிறார். சென்னையில் அவர் அடையும் ஏமாற்றம் ரசிக்கத் தக்க வகையில் படமாகியிருக்கிறது. அந்தக் கட்டத்தில் அவர் நடிப்பின் உச்சிக்கே சென்று விடுகிறார். பெருத்த ஏமாற்றம் அடையும் அந்தக் கட்டத்தில் அவரது முகத்தில் காணப்படும் சோகம் — சோக பாவத்தை அவர் முகத்துக்குக் கொண்டு வரும் விதம் — அப்பப்பா அந்தக் காட்சியை ஒரு முறை என்ன? பல தடவைகள் பார்த்து ரசிக்கலாம்.

அறிக்கைகள் விடுவது, எதிரிகளைப் பயமுறுத்துவது, சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்வது, பிடிக்காதவர்களைக் கவிழ்ப்பது முதலிய கட்டங்களை மிக மிகப் பிரமாதமாகப் படமாக்கியிருக்கிறார்கள் இண்டிகேட் புரொடக்ஷன்ஸார்!

அநேகமாக எல்லாக் காட்சிகளுமே தில்லி சோஷலிஸ்ட்டுடியோவில் படமாகியிருக்கின்றன. உத்தரப் பிரதேச வெளிப்புறக் காட்சி வெகு அருமையாக அமைந்திருக்கிறது. அயல்நாடுகளில்எடுக்கப்பட்ட காட்சிகளும் இடம் பெற்றிருப்பது இப்படத்தில் சிறப்பு அம்சம்.

கையெழுத்துப் போடும் கட்டத்தை ரஷ்யாவில் படம் ஆக்கியிருக்கிறார்கள். ருஷ்ய நாட்டின் எழிலார்ந்த சூழ்நிலையை இந்த வண்ணப் படத்தில் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கலர்ப் படத்தில் சிவப்பு நிறம் மட்டும் கொஞ்சம் தூக்கலாக இருப்பது ஏன்? காமிராமேன் தவறா? அல்லது ஃபிலிமில் கோளாறா?

''இடர் இடர் என்று மாறுவோம்
திகைக்கச் செய்யும் பொய்
கூறுவோம்''

என்ற பாடல் ஒன்று மட்டும் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. பின்னணிப் பாடகர் சவானின் குரல் இந்தக் கட்டத்தில் கணீர் என்று ஒலிக்கிறது.

இப்படத்தை கிரி டைரக்ஷன் செய்துள்ளார். ராஜாக்கள் பிரச்னை, உத்தரப் பிரதேசக் காட்சி ஆகிய இடங்களில் இவரது முத்திரை ரப்பர் ஸ்டாம்பு போல் பளிச்சிடக் காண்கிறோம்.

மொத்தத்தில் ''பாலும் தேனும்'' போல இல்லை.

கற்பனைப் படத்துக்கு விமர்சனம் தந்தவர் : ராம. கட. நீதிதாசன்

சில சமயங்களில் நன்மையைக் கருதிச் சில கஷ்டங்களை நாமாகவே தேடிக் கொண்டு விடுகிறோமா? அப்படித்தான் எனக்குத் தோன்றிற்று. ஆஷாவை அழைத்துக் கொண்டு சென்னையில் கால் வைத்ததுமே எனக்கு என் மீதே கோபம் தோன்ற ஆரம்பித்து விட்டது. தாய் மண்ணை மிதிக்க வேண்டும் என்ற தீவிர ஆசைதான் எனக்கு அப்பொழுது இருந்தது. இந்த அரைப் பைத்தியத்துடன் ஒரு வார காலம் இருந்த பிறகு என் ஆசையை நினைத்து நான் மிகவும் வருந்தினேன்.

ஆஷாவின் தோற்றமே விசித்திரமாக இருக்கும். ஒல்லியான சரீரம். ஆயினும் பெண்மையின் அழகு பொலிய அம்பாளின் விக்கிரகம் போல் இருப்பாள் அவள். சுருட்டை சுருட்டையான கேசம் அவள் முகத்தில் பறந்து விளையாடும். அந்தக் கூந்தலை அலட்சியமாக இழுத்துப் பின்னுடி ஒரு ரிப்பனால் வரிந்து கட்டிவிடுவாள். பிறகு எத்தனை சுருள் கற்றைகள் சுழன்று வந்தாலும் அவைகளை இடக் கையால் தள்ளிக் கொண்டே நாளைக் கடத்துவாள். அவளது எழில் முகத்தை அவள் கண்ணாடிகள் தாம் கெடுக்கும். மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு அவள் நம்மைப் பார்த்தால், கவிதை என்கிற தெய்வமே நம்மை நோக்குகிறதோ என்று தோன்றும்.

அபார சங்கீத ஞானம் அவளுக்கு. படிப்பிலும் மேதாவி அவள்.

அவள் தந்தி வாத்தியங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறாள். அதன் சம்பந்தமாகத்தான் சென்னை வந்து சில வாத்தியங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆவல் கொண்டாள், சில பெரியோர்களைப் பார்த்துப் பேச அவாக் கொண்டாள்.


இவளுடைய அசட்டுத்தனத்தை நினைத்து அவள் பெற்றோர் கவலையுற்று, பிறகு என்னை அழைத்து அவளுக்குத் துணையாக அனுப்பினார்கள். நானும் டெல்லிக்குப் போய் இந்து வருடங்களாகியும் சொந்த ஊர் வரப் பண வசதியின்றி அங்கேயே இருந்தேன். என்மாமா முதலிய உறவினர்களைக் காண வாய்ப்புக் கிடைத்ததே என்ற உற்சாகத்தில் புறப்பட்டு விட்டேன்.

அவளுடன் வர ஒப்புக் கொண்டோமே என்று நொந்து கொண்டே வந்தேன். சென்னையில் என் மாமா வீட்டுக்குப் போய் விட்டால் கவலையில்லை. என்கடைசி மாமா தியாகுவும், அவன் மனைவி கங்காவும் நல்ல ஜோடி. அவன் வீணையை எடுத்து வாசிக்கவேண்டும். அவளே வீணையோ அல்லது வீணைக்குத்தான் குரல் வந்து விட்டதோ என்று பிரமை தட்டும். அவனுடன் அதே ஞானத்துடன் தியாகு புல்லாங்குழல் வாசிப்பான். ஆஷாவிடம் இதெல்லாம் சொல்லிப் பெருமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் எங்கள் பாட்டி கொண்டு வந்த பழைய வீணை ஒன்று உண்டு. அதன்மீதுள்ள தந்த வேலைப்பாடுக்கே விலை மதிப்பிட முடியாது. மற்ற வீணைகளில் ஸ்வரம்தான் கேட்கும். எங்கள் மாமா வீட்டு வீணை சாகித்தியமே பேசும்.

ஆஷா அதைப் பார்க்காமல் விடுவாளா? இளம்பி விட்டாள். உடன் நானும் வந்து விட்டேன். இனி பதினைந்துநாட்கள் கழித்து நான் அவளுடன் டில்லி திரும்ப வேண்டும். ஆஷாவின் சேஷ்டைகளைப்பார்த்தால், இன்றே திரும்பிவிட மாட்டோமா என்றிருக்கிறது!

மாமா வீட்டின் வாசலைக் கண்டதும் நான் பெருமூச்சு விட்டேன். வண்டியிலிருந்து இறங்கிய ஆஷா என் பின்னுடி வராமல் உயரே ஓடும் தந்திக் கம்பிகளை என்னவோ ஆராய்ந்தாள். அதையும் ஒரு வாத்தியம் என்று நினைத்துக்



கொண்டாளோ? இயாகு மாமா வெளியே வந்து எனக்கு உதவி செய்தான்.

''நான் கொடுத்த தந்தி வரவில்லையா, மாமா?'' என்று நான் கேட்டேன்.

''இல்லையே? யார் இவன்? கடிதம் போடக் கூடாதா?'' என்று அவன் என்னைத் திருப்பிக் கேட்டான்.

''அவனுக்குத் தமிழ் தெரியாது. இந்தி தான் தெரியும். தந்தி வாத்தியங்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்துகிறான். அவனுக்குத் துணையாக நான் வந்திருக்கிறேன்'' என்றேன், சுருக்கமாக.

மாமா எப்போதும் என்னை மிகவும் ஆவலோடு அழைப்பான். அவர்களோடு சேர்ந்து நான் கஞ்சிரா வாசிப்பதுண்டு. மேலும், கங்கா எனக்கு மிகவும் நெருங்கிய தோழி. இன்று ஏனோ அவள் உற்சாகமே காட்டவில்லை. ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்தவளுக்கு இதுதானா வரவேற்பு?

நான் சலிப்புடனே வீட்டினுள் போனேன். ஆஷாவும் கங்காவும் சோபாவில் உட்கார்ந்திருந்தனர். ஆங்கிலத்தில் தன் ஆராய்ச்சிகளை விவரித்துச் சொல்லிக் கொண்டிருந்தான் ஆஷா. கங்கா உயிரே இல்லாமல் அமர்ந்திருப்பது தெரிந்தது. ''ஹாய், கங்கா!'' என்று ஒரு போலி உற்சாகத்தைத் தருவித்துக் கொண்டு பேசலானேன்.

''வா, உஷா!'' என்று உயிரற்ற குரலில் அழைத்தாள் அவள்.

குழந்தைகளை ஏன் அழைத்து வரவில்லை என்றுகூடக் கேட்கவில்லை அவள். என் பாட்டியைத் தேடிக் கொண்டு உள்ளே போனேன்.

''வா, வா. அந்த வருஷக்காரச்சே?'' பாட்டியின் அங்கலாய்ப்பைக் கேட்டதும் கொஞ்சம் தெம்பு பிறந்தது எனக்கு.

ஆஷாவை அழைத்து வந்து அறிமுகப் படுத்தினேன்.

குளித்து, சாப்பிட்டு எல்லாம் முடிந்த பிறகு பாட்டியிடம் அந்தரங்கமாகப் பேசப் போனேன். என்னவோ இங்கேயேதான் எப்போதும் குடியிருப்பவன் போல் ஆஷா சகஜமாகப் பேசிச் சிரித்துக்கொண்டிருந்தான்.



புத்தக அலமாரிகளைத் துழாவிக் கொண்டிருந்தான். இயாகுவும் கங்காவும் அவனைக் கவனித்தார்களோ, அவனுக்குப் பதில்தான் சொன்னார்களோ, எனக்குத் தெரியவில்லை. உடனே போய்ப் பார்க்க வேண்டும் என்று ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம் இந்த வீட்டில் ஏற்பட்டுள்ள மாறுதலைப் பற்றிக் கேட்கத் துடித்தது மனம். கேட்டும் விட்டேன்.

''ஏன் பாட்டி, இயாகுவும் கங்காவும் பேசவில்லையா? ஆஷாவை அறிமுகப்படுத்தினபோது யாரோ மூன்றாவது வீட்டு மனிதர்களைப்போல் நடந்து கொண்டார்களே?''

"அந்தப் பிள்ளை என்றைக்குப் பிறந்ததோ, அன்றைக்குப் பிடித்தது..."

"இன்னும் சரியாகவில்லையா?"

"சரியாவதற்கு விட்டால்தானே? குழந்தையைப் பார்த்தால் பாலகிருஷ்ண விக்கிரகம் மாதிரி இருக்கிறான். நடு நடுவிலே என்னவோ வெறி வந்து விடுகிறது."

"டாக்டர்களை அழைத்துக் காட்டவில்லையா?"

"இவர்களுக்கு இதில் தாபத்தை விட அவமானம்தான் அதிகமாக இருக்கிறது. தங்கள் மேலான தகுதிக்கு இப்படி ஒரு பிள்ளை பிறக்கலாமா என்று..."

"சரி, இப்ப எப்படிச் சமாளிக்கிறீர்கள்?"

"குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஆள் போட்டிருக்கிறது."

பாட்டி சொல்லி முடிக்கவில்லை. கண்ணாடி உடையும் சத்தம் கேட்டது. நான் முன் பக்கம் ஓடினேன். நான்கு வயதுக் குழந்தை கையில் இரத்தத்துடன் கண்ணாடித் துண்டுடன் நின்றது. இட்டப்போய் எடுக்க முடியாமல் அண்டினவரைக் கண்ணாடியால் கீறப் பார்த்தது குழந்தை. தாதி சட்டென்று கைமீது ஓங்கி அறை விட்டுக் கண்ணாடிச் சில்லை விழச் செய்துவிட்டுக் குழந்தையைத் தூக்கிச் சென்றாள். இத்தனைக்கும் யாருடைய குழந்தையையோ பார்ப்பது போல் தியாகு பார்த்துக் கொண்டு நின்றான்.

சமயம் பார்த்து ஆஷா கலகலவென்று சிரித்தாள். கங்கா வேலைக்காரியின் பின்னடியே போய் அந்தக் குழந்தையின் முதுகில் ஓர் அறை விட்டாள். குழந்தையோ தாதியின் தோளில் பல்லை வைத்து ஆழக் கடித்தது.

"குழந்தைக்கு என்ன பெயர்?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள் ஆஷா.

கங்கா என்னைப் பார்த்து, தணிவான குரலில், "பிசாசு,அதுக்குப்பெயர்" என்றாள்.

நான் ஆஷாவிடம் எதையோ சொல்லி மழுப்பினேன். "இல்லையே, அவர்கள் என்னவோ 'பிசாசு' என்றார்களே" என்று அவள் விளக்கம் கேட்டாள். சங்கடத்துடன் எதையோ பதில் சொன்னேன்.

ஆஷா தியாகுவிடம் போனாள். "மிஸ்டர் தியாகராஜன்! எந்த டாக்டர் பார்க்கிறார்? அவனுக்கு மூளையிலே கோளாறு, மனசிலே அதிர்ச்சியா, நரம்பிலே தளர்ச்சியா? என்ன சொல்கிறார்கள் வைத்தியர்கள்?" என்று அங்கு சரமாரியாகப் பொழிந்தாள்.

தியாகு என்ன பதில் சொல்லுவான்?

எனக்கு ஆஷா பெரிய தலைவலியாக இருப்பாள் போலத் தோன்றியது. நான் உடனே வீணையைத் தேடிக் கொண்டு போனேன். அதைத் தட்டித் துடைத்துச் சுருதி சேர்த்தேன். அதைக் கேட்டதும் ஆஷா குழந்தை போல் அங்கே ஓடி வந்தாள். தந்திகளை மீட்டினாள். அப்படியே சொக்கிப் போனாள்.

"கங்காஜி, கங்காஜி, தயவுசெய்து இங்கே ஓடி வாருங்கள். உடனே ஒரு கிருதி கேட்க வேண்டும் எனக்கு" என்று கூவினாள் அவள்.

கங்கா பின்புறமாகப் போய்விட்டாள். தியாகு முன் பக்கம் போய் ஒரு தினத் தாளில் மறைந்து கொண்டு விட்டான்.

"ஆஷா, இப்பொழுதெல்லாம் அவர்களுக்கு வேலை இருக்கும். வா... நீ இதன் அமைப்பைப் பார்த்துக் கொள்ளேன்" என்று அவளை மெள்ளத் திருப்பி அழைத்து வந்தேன்.

ஆஷா உடனே தன் காகிதங்களை எடுத்து வந்து வீணையைப் பற்றிக் குறிப்பெடுத்து, அளவெடுத்து, படம் வரைந்து, அவள் வேலையில் ஈடுபட்டாள்.

நான் சிறிது பெருமூச்சு விட்டுக்கொண்டு முன் கூடத்துக்கு வந்தேன். "மாமா! குழந்தைக்கு வைத்தியமே கிடையாதா?" என்று நேரிடையாகவே கேட்டேன்.

"அவனுக்கு ஒன்றுமில்லை. பிடிவாதம்தான். அது ஒரு வியாதியா?"

"பிடிவாதமில்லை. பிடிவாதமாகத்தான் இருக்கட்டுமே? அதற்கும் ஒரு மாற்றுத் தேட வேண்டாமா?"

"அவன் அம்மாமாதிரி அவன் இருக்கிறான். அதில் ஒன்றும் அதிசயமில்லை!" என்று கூறினான் மாமா, மேலே பேசப் பிடிக்கவில்லை என்பதைக் குறிப்பாகக் காட்டுபவன்போல்.

"சரி, உனக்கு இரண்டு குழந்தைகள்தானா? இன்னமும் அந்த அவுட் ஹவுஸில்தான் குடியிருக்கிறீர்களா? அவர் எப்படி இருக்கிறார்?" என்று என்னை மெதுவாகக் குசலம் விசாரித்தான்.

நான் அவனுக்குப் பதில் சொன்னேன். "ஆஷாவின் வீட்டுக்கு அவுட் ஹவுஸ் அது. அவளுக்கு மொழிபெயர்க்கவும், துணை இருக்கவும் என்னை அவர்கள் செலவில் அனுப்பி வைத்தார்கள். வந்திருக்கிறேன்..."

கொஞ்ச நேரம் ஏதேதோ பேசினேன். பிறகு எழுந்து உள்ளே போனேன். பின்புறம் துணி தோய்த்துக் கொண்டிருந்தாள் கங்கா. "கங்கா! நீ வீணை வாசிப்பதே இல்லையா?" என்று கேட்டேன்.

"அதுதான் ஒரு குறைச்சல்? அதைச் சொல்லித்தான் அந்த அவளை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாயா நீ?" என்று மெள்ளக் கேட்டாள் கங்கா.

அதுதான் வாய்ப்பு என்று பயன்படுத்திக் கொண்டேன். "நீயும் மாமாவும் சேர்ந்து வாசிப்பதை அவள் கேட்க வேண்டும் என்றே நாங்கள் வந்தோம்..."

"சரி, இனி நீங்கள் திரும்பிப் போகலாம்."

"நான் போகாமல் இங்கேயே இருக்கப் போகிறேனா? இத்தனை வருஷங்கள் கழித்து வந்திருக்கிறேன். இப்படித்தான் இருப்பீர்களா இரண்டு பேரும்? பழைய சிநேகம் அற்றுப் போகும்படி என்ன ஆகிவிட்டது?" என்று பளிச்சென்று கேட்டேன்.

"எங்கள் பிணைப்பில் சுருதி சுத்தமோ, லயக் கச்சிதமோ, ராக கம்பீரமோ, லாலித்ய கனமோ — ஒன்றுமில்லை."

நான் ஆஷாவைத் தேடிக் கொண்டு போனேன். அவள் குழந்தை ராஜூவின் அறையில் அமர்ந்து 'பிச் பைப்'பை வாசித்துக் காட்டிக் கொண்டிருந்தாள். எலியைப் பிடிக்கப் போகிற பூனைமாதிரி அமர்ந்திருந்தான் ராஜூ.

"ஆஷா, 'பிச் பைப்'பை அவன் உடைத்து விட்டால் சுருதிக்கு என்ன செய்வாய்? இங்கே வா" என்று கூப்பிட்டேன் ஆஷாவை.

ஆஷா வந்தாள். "உஷா! குழந்தை எவ்வளவு அழகாக இருக்கிறான் பார்த்தாயா?" என்று கேட்டாள்.



தன்னடக்க
முள்ள
தனிப்பெருமை
தவழவே
தாவண்கெரே
வாயில்கள்
தாவண்கெரே காட்டன் மில்ஸ் — பண்டைய மரபை இன்றைய வடிவாகப் படைக்குமிடம்!
lam.dcm.2 Tam



ரூ. 50,000
வெல்க
முதல் பரிசு ரூ. 20,000
இரண்டாவது பரிசு ரூ. 5,000
மூன்றாவது பரிசு ரூ. 2,500
AFGHAN SNOW
ஆப்கான் ஸ்னோ

"ஆமாம்... நீ நூல் நிலையம் பார்க்க வேண்டும் என்றாயே, வா போகலாம்" என்று சொல்லி அவளை இழுத்துக் கொண்டு வெளியே கிளம்பினேன்.

நாங்கள் திரும்பி வந்த போது மாமா அலுவலகத்துக்குப் போய் விட்டான். பாட்டியும் தாத்தாவும் ஏதோ கல்யாணத்துக்குச் சென்றிருந்தார்களாம். கங்காதான் எங்களுக்குச் சாப்பாடு போட்டாள். ஆஷா முதலில் மௌனமாகச் சாப்பிட்டாள். நூல் நிலையத்தில் பார்த்த புத்தகங்களை நினைத்துக் கொண்டிருந்தாள் போலும். நானும் நிம்மதியாக வயிறாரச் சாப்பிட்டேன். அதன் பிறகு அடுப்படியில் சுத்தப்படுத்தப் போனேன். என்னோடு சங்கமே வைத்துக் கொள்ள விரும்பாதவள் போல் கங்கா, "உஷா, நான் படுத்துக் கொள்ளப் போகிறேன்" என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

ஆஷா அவள் பின்னாலேயே செல்வதைப் பார்த்தேன். ஆயின் என்ன செய்வது? எப்படியோ போகட்டும் என்று அடுப்படியைச் சுத்தம் செய்து விட்டு, சாப்பாட்டு மேஜையைத் துடைத்து எல்லாம் முடித்துக்கொண்டு முன் பக்கம் வந்தேன்.

ஊஞ்சலில் ஆஷா படுத்துக் கொண்டிருந்தாள். கங்கா எதிரே சோஃபாவில் சாய்ந்திருந்தாள். என்னைக் கண்டதும், "மியூஸியம் போகலாமா?" என்று கேட்டாள் ஆஷா.

நான் அவளைப் பார்த்தேன். அவள் புடவையின் தலைப்பில் ஒரு பெரிய கிழிசல் தெரிந்தது.

"புடவையை மாற்றிக்கொள், ஆஷா. நானும் இதோ தயாராகிறேன்" என்றேன்.

"எனக்குச் சோம்பலாக இருக்கிறது.... கங்காஜி, பார்த்தீர்களா? இந்தப் புடவையை உங்கள் ராஜாதான் கிழித்து விட்டான். நீங்கள்தாம் புதுப் புடவை வாங்கித் தர வேண்டும்" என்றாள் ஆஷா, கங்காவின் முகத்தின் முன் அந்தக் கிழிசலைக் காட்டியபடி.

நான் சாப்பாட்டறைக்கு ஓடியேவிட்டேன்.

நாங்கள் இருவரும் மாலை வெகு நேரம் கழித்துத்தான் திரும்பினோம்.

தியாகு ஊஞ்சலில் படுத்திருந்தான். தாத்தா வாசலில் அடுத்த வீட்டுப் பையன்களை வைத்துக் கொண்டு, "ஒரு புலி, ஒரு புல் சுமை, ஓர் ஆடு. இவை மூன்றும் அக்கரைக்குப் போக வேண்டும். புலியும் ஆடும் தனியாக இருந்தால் ஆட்டைப் புலி தின்றுவிடும்; ஆடும் புல்லும் இருந்தால் புல்லை ஆடு தின்றுவிடும். ஒரே ஒரு படகுதான்..." என்று கதை சொல்லிக் கொண்டிருந்தார்.

இந்த வீட்டுக் கதையும் ஏறக்குறைய அப்படித்தானே இருக்கிறது?

நாங்கள் உள்ளே போனோம். பாட்டியும் மாலை ஆகாரம் முடித்து முன் பக்கம் வந்துவிட்டாள். கங்கா எங்களுடன் சாப்பிட்டாள். ஆஷா கங்காவிடம் ஓயாமல் பேசினவண்ணம் இருந்தாள்.

கங்கா அமைதியாகப் பதில் சொன்னாள். "என்றைக்கு நீங்கள் திரும்பப் போகிறீர்கள்?" என்று என்னைக் கேட்டாள்.

அவளுக்குப் பதில் என்ன சொல்வது? எனக்கு வந்த கோபத்தை அடக்கப் பாடுபட்டுக்கொண்டிருக்க, பாவம் புரியாத ஆஷா பாட்டைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்துவிட்டாள். கங்கா சங்கீதமா பேசுவாள்? மனிதத் தன்மையே அவளிடம் காணோமே?

"என்ன உஷா? கங்காஜி எந்தக் கீர்த்தனையைக் குறிப்பிடுகிறார்? தியாகராஜரையா? அவருக்கு அதுதானே பிடிக்கும்? கணவன் பெயர் கொண்டவர்..."

அவள் வேடிக்கையை அவளேதான் ரசிக்க வேண்டும். எவ்வளவோ ருசி இருப்பது போலத் தெரிகிறதே, அவளுக்கு. அது நடைமுறைக்கு உதவாதா? கங்கா அவளிடம் சிறிது கூட மதிப்பு வைக்கவில்லை என்பதுகூடவா ஆஷாவுக்குப் புரியாது? கணவனும் மனைவியும் ஒருவர் முகத்தைக் கூட ஒருவர் பார்ப்பதில்லை என்பது குத்திட்டு நிற்கிறதே? ஆஷாவைக் கண்டால் எனக்கு ஒரு மேதாவியாகவே தோன்றவில்லை. அவள் ஒரு படு முட்டாள். அதைக் கட்டிக் கொண்டு நான்...

"கங்காஜி! நீங்கள் இப்ப ஒரு பாட்டு வாசித்துத்தான் ஆக வேண்டும். வீணை ஒன்றும் பழுதாகவில்லை. சரி பார்த்துவிட்டோம். வீணைக்கும் உங்கள் விரலுக்கும் உள்ள சொந்தம் சாமான்யமானதா? நீங்கள் தொட்டவுடனேயே எழுந்து விடும் வீணை" என்று நச்சரித்தாள் ஆஷா.

நான் தலை நிமிரவேயில்லை. பாட்டியிடம் போய் அமர்ந்து விட்டேன்.

"அவளிடம் பேச்சுக் கொடுக்க வேண்டாம் என்று உன் சிநேகிதியிடம் சொல்லு, உஷா. அவள் கத்த ஆரம்பிச்சா, அப்புறம் சந்தைக் கடை, கள்ளுக் கடை கூடத் தோற்றுப் போய்விடும்" என்றாள் பாட்டி.

நான் என்ன செய்ய முடியும்? காவேரிப் பிரவாகத்தை விரல் கொண்டு நிறுத்த முடியுமா? எப்படியோ எதுவோ நடக்கட்டும் என்று நான் பேசாமல் இருந்து விட்டேன்.

ஆனால், என்ன மாயமோ, அல்லது ஆஷாவின் தொல்லையைத்தான் பொறுக்க முடியவில்லையோ, தெரியவில்லை — கங்கா வீணைக்கு முன் அமர்வது தெரிந்தது. ஆஷா தம்புராவை எடுத்துச் சுருதி மீட்டலானாள். ஆஷா சொன்னது போல் தன் தாயின் ஸ்பரிசத்துக்காக ஏங்கின குழந்தைபோல் வீணை கங்காவிடம் கொஞ்சியது.

நான் இருந்த இடத்திலிருந்தே கேட்டுக் கொண்டிருந்தேன். இந்த அமைதியைக் குலைப்பதற்கென்றே கங்கணம் கட்டிக் கொண்ட மாதிரி தியாகு மாமா ஊஞ்சலை ஆட்டியபடியே இருந்தான். அதன் வளையத்தில் எண்ணெய் இல்லாமல், 'கிரீச் கிரீச்' என்று அபஸ்வரம் ஒலித்தது. ஆஷா கங்காவை மேலும் மேலும் தூண்டினாள். அவளோ என்னை வெட்டி விடுபவள் போல் பார்த்தாள். ஆனால் வீணை நிற்கவில்லை.

சிறிது நேரத்துக்கெல்லாம் திடீரென்று "ரசனையற்ற ஜன்மங்களுடன் இருப்பதை விடச் சாவதே மேல்!" என்றாள் கங்கா. வீணையின்மீது போர்வையை இழுத்துவிட்டாள். ஆஷாவின் கெஞ்சுதல் அதன்பின் பயனளிக்கவில்லை.

நானே ஆஷாவை அடக்கினேன். "ஆஷா, என் மாமாவுக்குத் தலைவலி. நீ சும்மா கங்காவை வற்புறுத்தாதே" என்று எச்சரித்தேன்.

1982ன் உலக அழகி
எப்படி இருப்பாள்?

(68ம் பக்கம் பார்க்க)

"தலைவலியா? இவருக்கா? புல்லாங்குழல் எடு, சரியாகி விடும். கங்காஜி மட்டும் வாசிக்கிறுளே என்று பொறுமையாக இருக்கும். அதுதான் தலைவலி. மாமு, ஒரு பாட்டு நீங்கள் வாசியுங்கள்" என்று சொல்லிப் புல்லாங்குழலை நீட்டினுள் ஆஷா.

"அது எங்கே இருந்தது?" என்று இடறென்று எழுந்து கேட்டான் மாமா.

"பீரோ மேலே இருந்தது. சரி பார்த்தேன். சரியாக இருக்கிறது" என்று கூறின ஆஷா அதைத் தன் வாயில் வைத்து மால்கோஷில் ஓர் இழுப்பு இழுத்தாள்.

அதன் பிறகு தியாகு அவளிடமிருந்து அதை வாங்கி வஸந்தா ராகம் வாசித்தான். பிறகு தோடி வாசித்தான்.

அன்று நல்விருந்துதான். வாசித்தவர்கள் மனம் என்ன பாடு பட்டதோ!

ஆஷா மெய் மறந்தாள். நானும் சற்றுக் கவலையை மறந்தேன். அன்று இரவு படுக்கையில் விழுந்ததுமே ஆஷா உறங்கிவிட்டாள். எனக்குத்தான் தூங்கவே முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்திருந்தேன்.

அப்பொழுதுதான் 'பிச் பைப்' வாசிப்பது கேட்டது. ஆஷாதான் ஏதாவது நிசியில் ஒரு கச்சேரி ஆரம்பித்து விட்டாளோ என்று திடுக்கிட்டு எழுந்தேன். அவள் என் அருகில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

"அப்பாவை அடிப்பேன்... கடிப்பேன்... அடிப்... அடிப்..." என்று ராஜாவின் அலறல் சட்டென்றுகேட்டது. யாரோ அவன் வாயைப் போட்டு அழுத்துவது போலக் கேட்கவும், அவன் இருக்கும் அறைக்குப் பாய்ந்தேன். தாதிதான் அவனை மடியில் போட்டு அவன் வாயைப் பொத்திஅடக்கிக்கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் கையை எடுத்தாள். ராஜா எழுந்து என்னிடம் ஓடி வந்து என் கால்களைக் கட்டிக் கொண்டான். அப்பொழுதுதான், நான் கவனிப்பதற்குள் வேறு ஒரு வழியாகத் தியாகு விரைந்து போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. ராஜாவைக் குனிந்து கட்டிக் கொண்டேன். தாதி அவனை மெதுவாக அழைக்கவும், என்னை விட்டு அவன் மார்போடு ஒட்டிக் கொண்டான். அவள் என்னவோ சொல்லி மடியில் போட்டுத் தட்டவும் ராஜா தூங்கி விட்டான்.

"குழந்தையை அடிக்காதே. பாவம், விவரம் தெரியாது, பார்" என்றேன்.

"நானும் மனுஷிதானே? தூங்க வேண்டாமா, சாப்பிட வேண்டாமா?"

நான் வந்து விட்டேன். அவளோடு வாதம் செய்வதற்கு எனக்குப் பொறுமை இல்லை. இங்குள்ள சிக்கல் மிகவும் பெரிய சிக்கல் என்பது இப்பொழுதுதான் புரிந்தது. வேதனையும் அருவருப்பும் என்னை வதைக்க வதைக்க மீண்டும் படுக்கையில் விழுந்தேன்.

காலையில் நான் பல் தேய்த்துக் கொண்டிருந்தபோது மாமா அங்கு வந்தான். "நீங்கள் யாராவது கொஞ்சம் அந்தக் குழந்தையைக் கவனிக்க வேண்டும். முழுக்க முழுக்கத் தாதியிடமே விட்டால்?" என்றேன்.

"அவனுக்கு அவளிடம் மிகவும் பாசம் உண்டு" என்றான் அவன்.

எனக்குத் தலைவலி உடைத்துக் கொண்டிருந்தது. நான் பதில் சொல்லவும் இல்லை, அவன் காக்கவுமில்லை. போய்விட்டான்.

காப்பியுடன் மாத்திரைபோட்டுக்கொண்டு தலையை இறுகக் கட்டிக் கொண்டு படுத்து விட்டேன். ஆஷா கொஞ்ச நேரம் என்னிடம் இருந்தாள். பிறகு நூல் நிலையத்துக்குப் போவதாகக் கிளம்பினாள். தனியாக அவளை அனுப்ப எனக்குப் பயமாக இருந்தது. "நான் போகிறேன் உஷா. இந்த நரகத்தை விட்டு எனக்கும் ஓய்வு கிடைக்கும்" என்றாள் கங்கா.

இருவரையும் தனியாக விட்டால் என்ன சம்பாஷணை நடக்குமோ? ஆஷா எதைப் புரிந்து கொள்வாளோ, எதை வேடிக்கையென்று நடுக் கூடத்தில் உடைப்பாளோ? இல்லைக்கே சுமந்து செல்வாளோ? கடவுள் விட்ட வழி என்று நான் இருந்து விட்டேன்.

அன்று முழுவதும் நான் எழுந்திருக்கவேயில்லை. ஆனால் நான் இல்லாமல் வீடு துண்டு துண்டாகவும் விழுந்து விடவில்லை. மாலை நேரம் மீண்டும் கச்சேரி நடந்தது. பழைய நினைவுகள் வந்தன. ஆஷா பஜன்கள், அபங்கள் எல்லாம் அற்புதமாகப் பாடினாள். இருந்தாலும், என்வரையில் ஆஷா ஆராய்ச்சிக் கட்டுரையோடு நிறுத்திக் கொள்ளக் கூடாதா, சங்கீதக் கச்சேரி வேறு எதற்காக வைக்கவேண்டும் என்று கவலையாக இருந்தது.

"அட பாவி!" என்று இடையே ஒரு கிறல். நான் எழுந்து ஓடினேன். ராஜா பம்பரத்தின் ஆணியால் தம்பூராச் சுரக்காயை அடிக்கப் போய்விட்டான் போலும்.

"எங்கே போனே நீ?" என்று தாதியை விரட்டினாள் கங்கா.

"அட போ அம்மா! கண்ணிலே மண்ணைத் தூவுறான் அவன்" என்று துடுக்காகப் பதில் சொன்னாள் வேலைக்காரி. அவளுக்கு இந்தத் துணிச்சல் வர எது பலம் தந்தது?

கங்காவைத் துரும்பாக மதித்து விட்டாளே அவள்!

ராஜாவை இழுத்து என் மடியில் இருத்தப் பார்த்தேன். முடியவில்லை. ஆஷா தம்புராவைக் கீழே வைத்தாள். ராஜாவை அழைத்து அவன் விரல்களைக் கொண்டு அதை மீட்ட வைத்தாள். பம்பரம் விழுந்தது. நான் எடுத்து வைத்தேன். ராஜா தம்புராவை எமப் பிடி பிடித்தான்.

நான் மனசால் தலையில் அடித்துக்கொண்டேன். அந்தத் தம்புரா கங்கா பரிசாகப் பெற்றது. அது ஆஷாவின் அசட்டுத்தனத்தினால் உடைந்து விடுமோ என்று நடுங்கினேன். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

அன்று முதல் நாங்கள் இருந்த பத்துநாட்களும் தினமும் கச்சேரி நடந்தது. தியாகுவும் சேர்ந்து வாசிப்பான். நானும் கஞ்சிரா வாசிப்பேன். என் இதயம்தான் கூடவே அடித்துக் கொள்ளும். ஏனென்றால், ஒவ்வொரு நாளும் ராஜாவை மடியில் அமர்த்திக்கொண்டுதான் ஆஷா தம்புரா சுருதி போடுவாள்.

ஸூப்பர் ஸர்ஃப் கொண்டு ஒரே ஒரு சலவை. மற்றெந்தப் பவுடரினாலும் செய்த சலவையை விட மிக அதிக வெண்மை.





விரிவான ஆராய்ச்சிக்கூட பரிசோதனைகள் பன்முறை நிரூபித்துள்ளன: போட்டியிடும் மிகச் சிறந்த வேறெந்தப் பவுடரினாலும் வெளுத்த துணிகளைவிட, ஸூப்பர் ஸர்ஃப் கொண்டு வெளுத்த துணிகளின் வெண்மையே அதிகம். காண்போர் எவரையும் பொறாமைப்பட வைக்கும் கற்பனை கடந்த வெண்மை. இதற்குக் குறைவான எதனையும் ஏற்காதீர்கள். இந்தியாவின் தலைசிறந்த ரகம்: ஸூப்பர் ஸர்ஃப்.

இதுவே பரிசோதனை

சம அழுக்குள்ள 2 ஆடைகளை எடுங்கள். ஒன்றை ஏதாவதொரு பவுடரினால் வெளுக்கவும்.

மற்ற ஆடையினை ஸூப்பர் ஸர்ஃப் கொண்டு வெளுக்கவும் (அரை வாளி நீருக்கு 3 டேபிள்ஸ்பூன்)



ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்

(வெண்மையூட்டும் சாதனம் எதுவும் சேர்க்கத் தேவையில்லை).

லின்டாஸ்-SU. 98-140 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

என் சலிப்பும் இற்றுப் போவதற்குள் ஆஷா தஞ்சாவூர் போக வேண்டும் என்றாள். இருவரும் கிளம்பினோம். ராஜா ஆஷாவை விடவே மாட்டேன் என்று கூறிவிட்டான். அன்று எங்கள் பிரயாணம் நின்றது. ஆனால் ராஜாவுக்குத்தான் புத்தி தெளிந்துவிட்டதா? அல்லது ஆஷாவுக்குத்தான் புத்தி பேதலித்துவிட்டதா என்று புரியவில்லை. அன்று முழுவதும் ராஜாவுடன் ஆஷாவும் புரண்டாள். அவன் ஒரு காகிதம் கிழித்தால் இவள் மூன்று கிழித்துப் போட்டாள். அவன் சொம்புத் தண்ணீர் கொட்டினால் இவள் ஒரு குடமே கொட்டினாள். அன்றிரவு அவனும் அயர்ந்து தூங்கினான். நாங்கள் அச் சமயம் பார்த்துக் கிளம்பினோம்.

ஆஷா தஞ்சாவூரையும் அதன் கலைப் பொக்கிஷங்களையும் கண்டு வியந்த வண்ணம் ஸரஸ்வதி மஹாலிலேயே குடியிருந்தாள். ஆயிரமாயிரம் கேள்விகள் கேட்டாள். கனைகனையாக எழுதித் தள்ளினாள். எனக்குத்தான் மீண்டும் சென்னைக்கும் சிக்கலுக்கும் போகவேண்டுமே என்று நினைவாக இருந்தது.

நாங்கள் சென்னை திரும்பியபோது, தியாகு மாமா ரயிலடிக்கே வந்திருந்தான். "டாக்டர் திருச்சியிலிருந்து இந்த ரயிலில் வருகிறாராம். இப்படியே நேரே நம் வீட்டுக்கு வருவாராம். என் நண்பன் என்னை அழைத்து வந்தான்" என்றான்.

"யாருக்கு என்ன உடம்பு?" என்று கேட்டேன்.

"ஏன், ராஜாவுக்குத்தான்!" என்றான் தியாகு மாமா.

வைத்தியரையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனோம். ராஜா தன் தாயை விட்டால் ஆஷாவிடம்தான் ஒட்டிக்கொண்டான். வைத்தியர் பரிசோதனை செய்துவிட்டுப் போனார்.

"உஷா, நாம் நாளைக்கே தில்லிக்குக் கிளம்ப வேண்டும்" என்றாள் ஆஷா.

"டிக்கட் கிடைக்க வேண்டுமே?" என்று இழுத்தேன்.

"வாங்கியாச்சு! கங்கா சொன்னாள், வாங்கி வைத்துவிட்டேன்" என்றான் மாமா.

என்னைவிட ஆஷா கங்காவிடம் நெருங்கிவிட்டாளா? அவளுக்குத்தான் அந்த நியதி ஒன்றும் கிடையாதே? தன் போக்கில் கேட்டிருப்பாள். ஆனால் கங்கா எப்பொழுது தன் உச்சாணிக் கொம்பிலிருந்து இறங்கிக் கீழே வந்தாள்? கணவனிடம் பேசி விஷயம் சொல்லும் அளவுக்கு மனசைத் திறந்துவிட்டது எப்போது?

அன்று மாலை கச்சேரியின்போது பாட்டியும் வந்து அமர்ந்தாள். பாட்டியும் வீணையில் ஒரு நோட் வாசித்தாள்.

" 'ஆசை' என்று உங்கள் அம்மா பெயர் வைத்தது நல்லதாப் போச்சு. எங்கள் குடும்பத்திலே..." என்று ஆரம்பித்தாள் பாட்டி.

"ஓ, நன்றி அதிகமா?" என்று சொல்லி ஆஷா கைகொட்டிச் சிரித்தாள்.

இவளுக்குத் தமிழ்கூடப் புரிய ஆரம்பித்துவிட்டது போலும்.

மறுநாள் ரயிலடிக்குத் தியாகுவும் கங்காவும் வந்தார்கள்.



"ஐயையே! இந்த வாண வேடிக்கை வெடிக்க இப்பவும் பயப்படறீங்களே மாப்பிள்ளே! அந்தக் காலத்திலே நான் எவ்வளவு 'கேப்'களை வெடிச்சிருக்கேன், தெரியுமா?"

ரயில் கிளம்பிய பிறகுதான் ஆஷா எங்கள் குடும்பத்தைப் பற்றி என்னிடம் பேசினாள். "உஷா! என்ன கச்சேரி? மிருதங்கத்திலே ஒரு தட்டு, தம்புராவிலே ஒரு மீட்டல், வீணையிலே ஒரு முடுக்கு, குழலிலே ஒரு ஊதுக்கு — எல்லாம் சரியாகி விட்டது. சுருதி சேர்ந்து விட்டது. இல்லையா? ராஜாவுக்கு வேண்டியது அன்பும், சங்கீதமும்தான்—இந்த என் எண்ணத்தையேதான் வைத்தியரும் சொன்னார், கவனித்தாயா? இப்போதெல்லாம் மியூஸிக் தெரபி பழக்க மாகிவிட்டது. அன்பு, மியூஸிக் இரண்டுமே அவர்கள் கையில் இருந்த மருந்துதான்" என்று கூறி விட்டுக் குழந்தை மாதிரி சிரித்தாள்.

நான் கவனித்த லட்சணம் என்னைத் தலை குனிய வைத்தது. ஆஷா அரைப் பைத்தியம் என்று நான் நினைத்தேன். என் மாமாவின் குடும்பத்துக்கு நம்பிக்கையின் உருவமாக வந்த அவள், நான் முழுப் பைத்தியம் என்பதை நிரூபித்து விட்டாள். நான் பேச்சினால் வழி காட்டப் பார்த்தேன். அவள் தன் செயலினால் சாதனையே புரிந்து விட்டாள்.

"ஒரு புலி, ஒரு புல் கட்டு, ஓர் ஆடு" என்று என் தாத்தாவின் குரல் என்னுள் கேட்டது.

எல்லாச் சிக்கலையும் ஒரு சாமர்த்தியமான படகோட்டி சமாளித்து விடுவான் என்று எனக்குப் பாடம் தெரிந்து விட்டது.

போரில் வீரர்;



எழுத்தில் தீரர்!

ஆர். சுவாமிநாதன்

அலெக்ஸாண்டர் ஸோல் ஷெனிட்ஸன் இந்த வருஷத்து இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெறுகிறார். ரஷிய எழுத்தாளரான இவர் இன்னமும் சோவியத் ரஷியாவிலேயே வசித்து வந்தாலும், இவரது பெரும்பாலான எழுத்துக்கள் — முக்கியமானவை என்று கருதப்படுகிற இரண்டு நாவல்கள் — வெளி நாடுகளிலேதான் பிரசுரமாகி யிருக்கின்றன. ரஷிய அதிகார வர்க்கம் அவ்விரு நாவல்களையும் ரஷியாவில் வெளியிட மறுத்து விட்டது. இவரது முதல் நாவல் மட்டும்தான் இவர் சொந்தத் தேசத்திலேயே முதலில் பிரசுரிக்கப் பட்டது; அந்த நாவலின் பிரதிகளும் தற்பொழுது கிடைப்பதில்லை. வந்த பதிப்புக்கள் அத்தனையும் தீர்ந்து போய் விட்டன; புதிதாக மீண்டும் வெளியிட அதிகார வர்க்கம் மறுத்து விட்டது.

சொந்த நாட்டிலேயே ஓர் எழுத்தாளனுக்கு இப்படிப்பட்ட வரவேற்பா என்றால், அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. ஸோல் ஷெனிட்ஸன் மனித சுதந்திரத்தைப் பற்றி முக்கியமாய் எழுதுகிறவர். சோவியத் ரஷியாவிலும் மனித சுதந்திரம் அதனுடைய ஸ்தானத்தை அடைந்தே தீரும் என்ற மனோ திடத்துடனும், உணர்ச்சி பூர்வமாகவும் அவர் எழுதுகிறார். அவர் உணர்ச்சி வசப்படுவதில் அர்த்தம் இருக்கிறது. ஐம்பத்திரண்டு வருட வாழ்க்கையில் பதினொரு வருடங்களைச் சிறையின் உள்ளும், சைபீரியாவுக்குத் துரத்தப் பட்டும் கழித்திருக்கிறார்.

ஸோல் ஷெனிட்ஸன் 1918ல் தெற்கு ரஷியாவில் காக்கஸஸ் பிரதேசத்தில் பிறந்தவர். கணிதமும் பௌதிகமும் படித்து 1941ல் பட்டம் பெற்றார். இரண்டாம் உலக யுத்தத்தில் பங்கேற்று யுத்தகளத்தில் தீரத்துக்காக இரண்டு முறைகள் பதக்கம் பெற்றார். 1945ம் வருடம் தம் நண்பனுக்கு எழுதிய கடிதங்களில் ஸ்டாலினைப் பற்றிய அலட்சியமான குறிப்புக்களுக்காக—ஸ்டாலினை இவர் "அந்த மீசைக்கார ஆசாமி" என்று குறிப்பிட்டிருந்தார். கடிதங்கள் ராணுவத் தணிக்கையில் பறிமுதல் செய்யப்பட்டன — எட்டு வருடங்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார்; அது முடிந்ததும் மூன்று வருடங்கள் சைபீரியாவுக்குத் துரத்தப்பட்டார்.

இவரைத் துன்புறுத்தியது போதாதென்று அதிகார வர்க்கத்தினர் இவருடைய இளம் மனைவி நதாஷ்யாவையும் கஷ்டப்படுத்தினார்கள். அது பொறுக்க மாட்டாமல் அவளை விவாகரத்து செய்து கொள்ளத் தூண்டினார். நதாஷ்யாவும் இவரை விவாகரத்து செய்து விட்டு வேறு ஒருவரை மணந்து கொண்டாள். ஆனால் ஸோல் ஷெனிட்ஸன் சிறையிலிருந்து விடுதலையானதும் நதாஷ்யா இரண்டாவது கணவனை விவாகரத்து செய்து விட்டு இவருடனே வந்து சேர்ந்து கொண்டாள்; பிற்பாடு இவருடன் சைபீரியாவுக்கும் பயணமானாள்.

1957ல் புனர்வாழ்வு பெற்ற ஸோல் ஷெனிட்ஸன் அதிக கவனம் கவராமல் எழுதிக் கொண்டிருந்தார். 1962ல் நிகிதா குருஷேவ், ஸ்டாலினுக்கு எதிரான பிரசாரம் நடத்திய போது, ஸோல் ஷெனிட்ஸன் எழுதியிருந்த நாவல் ஒன்றின் கைப் பிரதியைப் படித்தார்; உடனே அதைப் பிரசுரிக்கும்படி ஆணையிட்டார்.

'இவான் டெனிஸோவிட்ச் வாழ்க்கையில் ஒரு நாள்' என்ற தலைப்புக் கொண்ட அந்தச் சிறிய நாவல், ஸ்டாலின் நடத்தி வந்த கட்டாய உழைப்பு முகாம்களைப் பற்றிய கடுமையான விமரிசனமாக அமைந்தது. ரஷ்யர்கள் லட்சக்கணக்கில் அதை வாங்கிப் படித்தனர். ஸோல் ஷெனிட்ஸன் புகழ் பரவ ஆரம்பித்தது.

ஆனால் குருஷேவ் பதவி நீக்கத்துக்குப்பின் திரும்பவும் கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டன. ஸோல் ஷெனிட்ஸன் போன்றவர்கள் தங்கள் படைப்புக்களை ரஷியாவில் பிரசுரிப்பது சிரமமானது.

1968ம் வருஷம், அவருடைய இரண்டு நாவல்கள், மேற்கு நாடுகளில் பிரசுரமாயின. அவருடைய முதல் நாவலைக் காட்டிலும் இவ்விரண்டு நாவல்களும் அளவில் பெரியவை; தரத்திலும் உயர்ந்தவை; முக்கியமானவை.

'கான்ஸர் வார்ட்' என்கிற நாவல் ஆசிரியர் சைபீரியாவில் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் கழித்த நாட்களை விவரிக்கிறது. இதில் வருகிற கான்ஸர் ஆஸ்பத்திரியாக ரஷ்யா தேசத்தையே ஆசிரியர் உருவகித்திருக்கிறார் என்கிறார்கள் மேலை நாட்டு விமர்சகர்கள்.

'முதல் வட்டம்' என்கிற இன்னொரு நாவல் ஸ்டாலின் காலத்தில் சிறைச்சாலைகளில் தள்ளப்பட்ட பல்லிரண்டு பேர்களின் கதை. இதுவும் ஸோல் ஷெனிட்ஸன் தம்

வாழ்க்கையில் அநுபவித்ததுதான். ஒரு மகா காவியத்தின் சோக ரசம் ததும்ப எழுதப்பட்டிருக்கும் இந்த நாவலைப் படித்துவிட்டுத்தான் இவரை 'தற்கால தாஸ்தாவிஸ்கி' என்று சொல்லத் தோன்றுகிறது.

மேலை நாடுகளில் இவருடைய நாவல்களுக்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டு பொறுக்காத அதிகார வர்க்கம், 1969 நவம்பரில், இவரை சோவியத் எழுத்தாளர் யூனியனிலிருந்து வெளியேற்றியது. அப்பொழுது ஸோல் ஜெனிட்ஸன் யூனியன் தலைமைக் குழுவுக்கு ஒரு கடிதம் எழுதினர். எழுத்துச் சுதந்திரத்தின் நியாயத்தை வலியுறுத்தி அவர் அதில் எழுதிய சில வரிகள்:

"உங்கள் கைக் கடிகாரங்கள் மீது படிந்துள்ள தூசியைத் துடைத்துக் கொள்ளுங்கள். காலத்துக்கு எதிராக அநேக நூற்றாண்டுகள் பின்தள்ளி ஓடிக் கொண்டிருக்கிறீர்கள். வெளியே உதயம் ஆகிவிட்டது என்பதையே நீங்கள் இன்னும் உணரவில்லை. உங்கள் வாழ்க்கையின் வறண்ட சூழ்நிலையில் வெறுப்பது முக்கிய அம்சமாகி விட்டது. நமது தேசத்துக்குக் கருத்துச் சுதந்திரம் கூடாது என்கிறவர்கள் அதனுடைய நோயைக் குணப்படுத்துகிறவர்கள் அல்லர்; அவர்கள் நோயை மூடி மறைப்பதின் மூலம் இன்னும் வளர்க்கிறவர்கள்."

"ரஷிய இலக்கியத்தின் இறப்பதற்கரிய மரபுகளை ஒழுக்க நெறி குன்றாது கடைப்பிடித்து வருவதற்காகவே" இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

எதிர்பார்த்தது போலவே, ஸோல் ஜெனிட்ஸனுக்கு நோபல் பரிசு கொடுப்பதை சோவியத் எழுத்தாளர்கள் யூனியன் எதிர்த்திருக்கிறது. ஸோல் ஜெனிட்ஸன் நோபல் பரிசு வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படுவாரா ? அல்லது பாஸ்டர்நாக்குக்கு நேர்ந்த கதிதான் இவருக்கும் ஏற்படுமா? பொறுத்திருந்துதான் சொல்ல வேண்டும்.

1982ன் உலக அழகி!



இப்படித்தான் இருப்பாள். இப்பொழுது அவளுக்கு ஐந்து அல்லது ஆறு வயதுதானே இருக்க முடியும்?


'உமன்' - முத்து

ராஜ(ளி)தந்திரம்!

பறவைகளுக்குப் புத்தி சாதுரியமும் ஓரளவுக்குச் சிந்தனை சக்தியும் பேசும் ஆற்றலும் கூட உள்ளன என்று விஞ்ஞானிகள் முடிவு கட்டியுள்ளனர். ருஷ்யாவில் ககார்கோவ் மிருகக் காட்சி சாலையிலுள்ள ஆராய்ச்சிக் கூடம் பறவைகளின் இத்தகைய சக்திகளை ஆராய்ந்து வருகிறது. ஒரு நிகழ்ச்சியைக் காண்போம்:

வாத்துக்கள் சில நதிப் பரப்பை ஒட்டிப் பறந்து சென்றன. அவற்றை ஒரு ராஜாளி துரத்திக் கொண்டு வந்தது. நேராகச் சென்றுகொண்டிருந்த அந்த நதி ஓரிடத்தில் வளைந்து திரும்பியது. இதனைக் கண்டுகொண்ட ராஜாளி குறுக்கு வழியில் சென்று அந்த வாத்துக்களை வழிமறிக்க எண்ணி நதிப் பரப்பை விடுத்துக் காட்டுக்குள் புகுந்தது; பின்னர் காட்டுக்குள்ளிருந்து குறுக்கு வழியாக வந்து அந்த வாத்துக் கூட்டத்தை வழிமறித்துத் தாக்கியது. வாத்துக்கள் எந்தத் திசையில் சென்று கொண்டிருக்கின்றன, அவை குறிப்பிட்ட நேரத்தில் எந்த இடத்துக்கு வந்து சேரும் என்ற விவரங்களைக் கணிக்கும் அளவுக்கு ராஜாளிக்குப் புத்தி சாதுர்யம் உண்டு என்பதை இந்த நிகழ்ச்சி புலப்படுத்தியது.

- சோவியத் செய்தி



குடும்ப(ர)லிட்டிக்ஸ்



"மாப்பிள்ளே! மெட்ராஸிலே பிளாட்டோ, வீடோ வாங்க ஏதாவது முயற்சி பண்ணுறீங்களா?"

"மாமா! [illegible] உங்க கண்களை உறுத்துதோ? [illegible]"



"இதென்ன அக்கிரமம்! மாப்பிள்ளைக்குப் [illegible] எண்ணெய் எடுத்து வச்சேன்! [illegible] அவ்வளவுதான்!"

"ஆளுக்கு ஒரு ஸ்பூன் பகிர்ந்துட்டேன், சாந்தா! [illegible] ஆரம்பிக்கலாம்!"



"மாமா! அந்தக் காலத்திலே உங்க பெண்ணுக்கு ரொம்ப பழைமையான பேரா, வேங்கடலட்சுமின்னு வைச்சுட்டீங்க! அதைக் கொஞ்சம் மாத்த முடியுமான்னு பாருங்களேன்."

"ஓ! என் மனைவிகிட்டச் சொல்லியிருக்கிறேன். இந்தப் பிள்ளை விஷயத்திலே விட்டுக் கொடுத்துச் சம்மதித்து உங்ககிட்டே நல்லபேரு வாங்கிப்பாள்! [illegible] குமரின்னு மாத்திடலாமா?"




"தீபாவளிக்கு மறுநாள் எனக்குப் பிறந்த நாள் [illegible] மாமா!"

"மாப்பிள்ளே! ஒரு [illegible] போட்டிறேன். [illegible] எல்லாம் கேட்டிருந்தீங்க! [illegible]"



"மாமா! தீபாவளி [illegible] உங்களுக்குத் தெரியணும் [illegible] வேலை இருக்கு."

"ஏன்? நண்பர்களெல்லாம் சேர்ந்து ஏதாவது வரவேற்புக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்களா?"



"அத்தான்! நீங்க மாத்திரம் ஏழு டெரிலின் சட்டைகள் வைச்சிருக்கீங்களே! எங்ககிட்ட ஒண்ணுகூட இல்லே! உங்களுக்கு ஒண்ணே வச்சிட்டு நாங்க மீதியை எடுத்துக்கறோம்!"

"நீங்க என்ன [illegible]? இப்படிச் சட்டைப் பறி இயக்கம் நடத்தறேளே!"

கருத்து: பட்டினத்தார்

விநாயகருக்கு விடுதலை!



மேஃறு

(திருக் கைலாயத்தில் பரமசிவனார் மாளிகையில் ஒரு பகுதி. நவராத்திரி முடிந்து கொலுப் பொம்மைகளை எல்லாம் எடுத்து உள்ளே வைக்காத சூழ்நிலை. விநாயகர் கையில் ஒரு பொம்மையை எடுத்து வைத்து ரசித்துக்கொண்டிருக்கும் வேளையில் பரமசிவன் கையில் ஓலைச் சுவடி எழுத்தாணியுடன் அந்தப் பக்கம் வருகிறார்.)

பரமசிவன்: *கணேசா! பிரம்ம லோகம்வரை போய் ஒரு தகவல் கேட்டு வரச் சொன்னேனே? போய் வந்தாயா?*

விநாயகர் *(கவனிக்காமல்)*: பூலோகத்தின் கலைத் திறமையும் கைத் திறமையும் நன்றாகத்தான் இருக்கின்றன!...

பரமசிவன் *(கடுப்புடன்)*: நான் என்ன கேட்டேன்? நீ என்ன பதில் சொல்கிறாய்?

விநாயகர்: ஏனப்பா, சீறி விழுகிறீர்கள்? பிரம்மலோக விஷயம்தானே? கொஞ்சம் அவகாசம் கிடைத்தவுடன் கவனிக்கிறேன்.

பரமசிவன் *(கடுமையாக)*: ஓஹோ! அலட்சியம் இவ்வளவு தூரம் வளர்ந்து விட்டதா? உன் கவனக் குறைவின் காரணத்தைத் தெரிந்து கொள்ளலாமா?

விநாயகர் *(நிதானமாக)*: ருத்திர தாண்டவமே இங்கே ஆடி விடுவீர்கள் போலிருக்கிறதே....! போன மாதம் நாரதர் பூலோகத்துக்குப் போய்த் திரும்பியபோது நான்கைந்து பூலோகப் பொம்மைகள் கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்தார். அவற்றில் இந்தப் பொம்மை!.... இதன் பெயர்கூட என்னவோ சொன்னாரே!.... ஆமாம்! போலீஸ்காரர்...... நீங்களும் தான் பாருங்களேன். தலையில் அணிந்திருக்கும் தொப்பி அம்சமாக இல்லை?

பரமசிவன் *(ஆத்திரத்துடன்)*: *பொம்மை வைத்து விளையாடிக் கொண்டு பெரியவர்கள் கட்டளையை அலட்சியம் செய்கிறாய்! நீ பூலோகத்தில் கொஞ்ச நாட்கள் ஒரு போலீஸ்காரர் கையில் சிக்கிச் சங்கடப் படுவாய்! போ!*

(விநாயகர் அவசரமாகத் திரும்புகையில் ஓரத்தில் இருந்த வேறு ஒரு பொம்மை கீழே விழுந்து உடைகிறது.)

விநாயகர் *(திடுக்கிட்டு)*: தந்தையே! இது என்ன சாபம்? நான் என்ன குற்றம் செய்தேன் இப்படித் தண்டனை பெற?.... சொல்லுங்கள், தந்தையே!

(பதில் சொல்லாமல் பரமசிவன் உள்ளே போகிறார். வழியில் அவரைச் சந்தித்து விட்டுப் பார்வதி தேவி விநாயகரிடம் வருகிறாள்.)

பார்வதி: *கணேசா! உன் தந்தையின் கோபத்துக்கு ஆளாகிச் சாபத்தை வேறு வாங்கிக் கட்டிக் கொண்டாயேடா!*

விநாயகர்: ஏன் தாயே, வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறாய்? தந்தைக்குத் திடீரென்று இப்படிச் சூடு பிடிக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. பூலோகத்துக்குப் போய் வருவதில் சிரமம் ஒன்றுமில்லை! ஆனால் போலீஸ்காரர் கையில் சிக்க வேண்டுமே என்பதை நினைக்கும்போது சங்கடமாக இருக்கிறது! சாப விமோசனத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே!

பார்வதி: நானே கேட்டேன்! ஆனால் சொல்ல மறுத்து விட்டார். அவர் இப்போது தேவலோக சஞ்சிகை ஒன்றுக்கு மர்மக்கதை எழுதிக் கொண்டிருக்கிறார். ஆகையால், எல்லாவற்றையுமே மர்மமாக வைத்துக் கொள்ள ஆசைப் படுகிறார்! நான் சரியான நேரத்தில் நினைவுபடுத்திச் சாப விமோசனத்துக்கு வழி செய்கிறேன். நீ இப்போது சமர்த்தாகப் பூலோகத்துக்குப் போ!

விநாயகர்: சரி தாயே! இந்த நாரதர் ஏதோ பொம்மைகள் கொண்டு வரப் போகத்தானே எனக்கு இந்தப் போதாத வேளை!

(போகிறார்கள்.)

2

(கைலாயத்தில் வேறு ஒரு பகுதி. சிவபெருமான் அக்கறையுடன் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார். நாரதர் வருகிறார்.)

நாரதர்: சம்போ, மகாதேவா!.... சர்வேசுவரா!

பரமசிவன் *(தலைநிமிர்ந்து)*: *நாரதரா! வருக! வருக!* கலகத்துக்கு என்ன விஷயம் கொண்டு வந்திருக்கிறீர்?

நாரதர்: அபசாரம்!...அபசாரம்!.. கலகம் உண்டாவதற்கான எந்த விஷயமும் என் கவனத்தில் சிக்கவில்லை! நான் தங்கள் திருக்குமாரன் விநாயகனைப் பார்த்து விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்!.

பரமசிவன்: *நாரதரே!* குழந்தையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகிறீரே! நன்றாக நடிக்கிறீர்! உம்மால் தான் கணேசன் என்னிடம் சாபத்தை வாங்கிக் கட்டிக் கொண்டு பூலோகத்துக்குப் போயிருக்கிறான்!

நாரதர்: *சாபமா? என்ன சொல்கிறீர்கள், சர்வேசா? விநாயகன் உங்கள் கோபத்துக்கு உள்ளான காரணம்?*





பரமசிவன்: நீங்கள் நவராத்திரிக்குமுன் கொண்டு வந்த சில பொம்மைகள். போலீஸ்காரர் பொம்மையாமே? அதை ரசித்து என்னை அசட்டை செய்தான். சாபம் கொடுத்து விட்டேன் !

நாரதர்: அடடா ! அந்தப் பொம்மைதானா கணேசனைக் கவர்ந்தது? மந்திரி பொம்மை, சினிமா நட்சத்திரப் பொம்மை எல்லாம்கூடக் கொண்டு வந்திருந்தேனே ! அவற்றில் ஒன்றை ரசித்திருக்கக் கூடாதா ?

பரமசிவன்: நான் போட்ட சத்தத்தில் திடுக்கிட்டுப் பதற்றத்தில் ஒரு மந்திரிப் பொம்மையை உடைத்துக்கூட விட்டானாம்! பார்வதி சொன்னாள்!

நாரதர்: அடடா! பூலோகத்தில் மந்திரியின் கோபம் என்பது ரொம்பப் பொல்லாததாயிற்றே! மானிடர்கள் நம்முடைய சிலைகளை உடைக்கலாம். எல்லாரும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டியதுதான். அதற்குப் பகுத்தறிவு, முற்போக்கு என்றெல்லாம் பெயர் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களில் ஒருவருடைய சிலையை வேறு யாராவது ஒருவர் உடைத்து விடட்டும்! உடனே அதற்கு அரசியல் என்று பெயர் கொடுத்துச் சண்டைக்குக் கிளம்புவார்கள். பூலோக மந்திரிகள் எல்லாருமே இப்போது 'பக்தி' என்பது தங்களிடம் மாத்திரம் மற்றவர்கள் காண்பிக்க வேண்டிய உணர்ச்சி என்று கருதும் காலம்! மும்மூர்த்திகளிடம் பக்தி செலுத்துவது மூடத்தனம் என்று அவர்களே பிரசாரம் செய்து மொத்தமாகத் தாங்களே பக்தியைக் கொள்முதல் செய்கிறார்கள் !

பரமசிவன் (முகவாய்க் கட்டையைத் தடவியவாறு) ஹூம்!... நான் முன் கோபத்தில் சாபம் கொடுத்து விட்டேன்!





அதற்கு விமோசன வழியைப் பார்க்க வேண்டும்! பாவம் ! நீர் சொல்லுகிறபடி பார்த்தால், நம் கணேசனுடன் பூலோக போலீஸ்காரர் ஒருவரும் பூலோக மந்திரியின் சினத்துக்கு ஆளாவார் போலிருக்கிறதே! இப்போது என்ன செய்வது ?

நாரதர்: ஒரு காவல் நிலையத்தின் அருகில் போய் நள்ளிரவில் அமர்ந்தால் விநாயகனுக்குப் பூலோகவாசத்திலிருந்து விடுதலை கிடைக்கும் என்று சாப விமோசனம் கொடுங்கள். மற்ற ஏற்பாடுகளை நான் கவனித்துக்கொள்கிறேன்! கணேசன் சீக்கிரமே திருக் கைலாயம் திரும்பி விடுவான்! ஏதாவது அரச மரத்தடியில் உட்கார்ந்தால் சுலபத்தில் திரும்பமாட்டான்.

பரமசிவன்: அப்படியே ஆகுக !

(நாரதர் விடைபெறுகிறார்.)

நான்கு நண்பர்கள் !

ஒரு கிராமத்தில் நான்கு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் குருடன். இரண்டாமவன் டமாரச் செவிடன். மூன்றாமவன் நொண்டி. நான்காமவன் கோவணாண்டி.

"நமது கிராமத்தைக் கொள்ளையடிக்க ஒரு படையே திரண்டு வருகிறது. அது எடுத்து வரும் தீவட்டி வெளிச்சத்தில் என் கண்கள் கூசுகின்றன." - சொன்னவன் குருடன்.


"என் காதுகள் செவிடுபடும்படி என்ன கூச்சல், என்ன கொம்மாளம், என்ன தாரை - தம்பட்டை!" - ஆமோதித்தான் செவிடன்.



நொண்டிக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "என்ன அக்கிரமம்! உதைக்கணும் காலிப் பயல்களை. ஓடி ஒளிய விடக் கூடாது. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் நம்மை? கையால் ஆகாதவன் என்றா?" என்று சீறி எழுந்தான் நொண்டிக்கொண்டே.

கோவணாண்டி மூவர் பேச்சையும் கேட்டு நடுநடுங்கி விட்டான். "ஐயையோ! என் கதி என்ன ஆவது? கொள்ளைக்காரர்கள் எல்லோரும் என்னைச் சூறையாடிவிட்டால்....?" என்று ஒப்பாரியே வைக்கத் தொடங்கி விட்டான்.

நாடோடிக் கதை - ரா. வி.



★ இக்குறிப்பிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

சென்ற 18–10–70 கல்கி இதழில் எஸ். மணிவண்ணன் எழுதிய கடிதத்தைப் பார்த்தேன். எங்கள் ஊரைச் சேர்ந்த அஜந்தா புக் செண்டரில் "Learn Tamil in 30 days" என்ற புத்தகம் உள்ளது. அப்புத்தகத்தை நான் வாங்கி என்னுடைய அமெரிக்கப் பேனா நண்பருக்கும் அனுப்பியுள்ளேன். ஆகவே, அவர் கூறியது போல் தமிழைக் கற்பிக்கக் கூடிய ஆங்கிலப் புத்தகம் இல்லாமல் போகவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம்–1
15–10–70 சக்தி குமார்

அக்டோபர் திங்கள் 1ம் தேதி "தமிழரசு" இதழில் ஒரு நகைச்சுவைச் சித்திர விளம்பரம் கண்டேன். அது பின்வருமாறு உள்ளது. (படம்: 1) தமிழக அரசு பரிசுச் சீட்டு என்ற பலகை ஒன்று தொங்க, அதன் கீழ் ஒரு பெண்மணி சீட்டு விற்பனை செய்கிறாள். அப்போது ஒருவன் 'ஒரு தமிழ்நாடு கொடு' எனக் கேட்க மற்றொருவன் 'ஒரிசா, பஞ்சாப், கேரளா–இப்படி ரகத்துக்கு ஒன்று கொடு' எனக் கேட்க (படம்: 2) பின் இம் மூன்று சீட்டு வாங்கியவன் தமிழ்நாடு சீட்டு வாங்கியவனைப் பார்த்து, 'என்னப்பா நீ வெறும் தமிழ்நாடுதானா? மற்றது வாங்குவது இல்லையா?' எனக் கேட்க, அந்த மனிதன் 'மற்றது 'லாட்டரி'ச் சீட்டுங்க, தமிழ்நாடு தான் 'பரிசுச் சீட்டு' நிச்சயம் பரிசு தரும்' என்கிறான்–தொடர்ந்து ஆறு படங்கள் மூலம் பரிசுச் சீட்டுக்கு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

"மாமியார் உடைத்தால் மண் குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடம்" என்பது போலல்லவா இருக்கிறது? நடப்பது என்னவோ சூதாட்டம்தான். இதில் மற்ற மாநில அரசுகளை மட்டம் தட்டத் தமிழக அரசு தனது தமிழரசு ஏட்டிலேயே இப்படி சித்திரங்கள் மூலம் விளம்பரம் வெளியிடலாமா?

கொடுமுடி
15–10–70 ந. கணபதி சுப்பிரமணியன்

★ 'பகுத்தறிவாளர்'களைக் கொண்ட தமிழக அரசு தனது பரிசுச் சீட்டு விளம்பரத்துக்காக வானொலியில் ஒரு குடுகுடுப்பைக் காரன் மூலம் விளம்பரம் செய்கிறது. தங்களை முழு பகுத்தறிவாளர்கள் என்று பறைசாற்றிக் கொள்ளும் தி. மு. க.வினர் லாபமடைவதற்காகக் கையாளும் முறையினைப் பார்க்கும்போது அவர்களுடைய பகுத்தறிவு வாதத்தின் மீது மக்களுக்கு ஐயம் ஏற்படுவதில் என்ன வியப்பு இருக்கிறது?

திருச்சி–1
15–10–70 பொ. அ.மு. கலிக்குமான்

பிர்லா மாளிகையை ஆர்ஜிதம் செய்து, அதை காந்திஜியின் நினைவுச் சின்னமாக ஆக்க வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். அப்படிச் செய்தால் அது காந்திஜியை விட கோட்ஸேயையே நினைவுபடுத்தும் என ராஜாஜி எழுதியிருப்பது சரியானது தான். ஒரு பொது மருத்துவ மனையில் காந்திஜி கடப்பட்டிருந்தால், நோயாளிகளை விரட்டிவிட்டு, அதை ஆர்ஜிதம் செய்து நினைவுச் சின்னமாகச் செய்து விடுவார்களா? பொது மக்களுக்கு அரசியலே தெரியாது என்று நினைக்கிறார்கள். எங்கள் ஊரில் சலூன் வைத்திருக்கும் வீரப்பன் அவர்களிடம் பிர்லா மாளிகை விவகாரம் பற்றி பிரஸ்தாபித்த போது அவர் இப்படிக் கூறினார்: "பிர்லாவுக்கு ஏதாச்சும் நட்டம் ஏற்படுத்திடணும்கிறதுக்காகவே இப்பிடி ஒரு ரோசனை சொல்வாஹுவ!" பொதுமக்களின் எண்ண ஓட்டம் எப்படி இருக்கிறது என்பதைத் தலைவர்கள் உணரட்டும்.

கூத்தனூர்
14–10–70 ஐ. பிரதாபன்

மூதறிஞர் ராஜாஜி அவர்களின் அறிவுரைகளைச் சிந்தித்து ஏற்றுக் கொள்வதே நாட்டின் நலனுக்கு உகந்தது என்பதைக் கலைஞர் கருணாநிதி அறிதல் அவசியம் ஆகும். மாநிலங்களில் குழப்ப நிலை ஏற்பட, பதவியையே குறிக்கோளாகக் கொண்ட சந்தர்ப்பவாதிகளைத் தம்பால் கவர்ந்து, 1972 பாராளுமன்றத் தேர்தலிலும் தனக்கே பெரும்பான்மை பலத்தைப் பெற்று, சர்வாதிகாரம் செலுத்தத் தீர்மானித்துள்ள ஸ்ரீமதி இந்திராவின் ஆட்சியை இன்றே அகற்ற, சகல கட்சிகளும் ஒன்று சேராவிடில், தேர்தலுக்குப்பின் அவரை அசைக்க முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

சர்வ அதிகாரமும் தனக்கே இருக்க வேண்டும் என்று தன் கட்சி பலத்தை எல்லா வகையாலும் மாநிலங்களில் பெருக்கி வரும் ஸ்ரீமதி இந்திராவா, 1972 தேர்தலுக்குப்பின் மாநிலங்களுக்கு மேலும் அதிகாரங்களை விட்டுக் கொடுக்க இணங்குவார்?

தி. மு. க. உள்ளிட்ட (கம்யூனிஸ்டு நீங்கலாக) எல்லாக் கட்சிகளும் ஒருமுகப்பட்டு இந்திரா ஆட்சியை அகற்றியபின், மத்தியில் கூட்டாட்சி ஏற்படினும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பெற, வாய்ப்பு ஏற்படலாம்.

இதைத் தமிழக முதல்வர் சிந்தித்து, செயலில் இறங்கி, மூதறிஞர் உரைக்கு மதிப்புக் கொடுப்பதே, தமக்கும் சிறப்பு அளிப்பதாகும் என உணர்தல் நலம்.

கோவை –17
14–10–70 ஜி.எஸ். வெங்கடராமன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



ASP/L-73

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

